DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1415 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 19, 2023


# உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா — 2023

நமது கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் 17வது ஆண்டாக நடத்தும் “உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா-2023. எதிர்வரும் யூன் 18ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறுகின்றது இரண்டு வெளிநாட்டு விருதாளர்களோடு ஐந்து கனடா வாழ் விருதாளர்களும் கௌரவிக்கப்பெறுகின்றார்கள். “இளையோர்களுக்கான அடையாளம்“ விருதுகளை ஒன்ராரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற இரண்டு இளம் வெற்றியாளர்கள் பெறுகின்றார்கள்.

**uthayannews@yahoo.com or www.uthayannews.ca**
**416-732-1608**

# நமது அடுத்த சந்ததியினருக்கு இன்னுமொரு முள்ளிவாய்க்கால் அவலம் நடந்துவிடக் கூடாது என்ற திடசங்கற்பத்துடன் அதை நினைவு கூர்வோம்!

## கனடாவிலிருந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி அழைப்பு




நமது அடுத்த சந்ததியினருக்கு இன்னுமொரு முள்ளிவாய்க்கால் அவலம் நடக்க விடமாட்டோம் என்ற திடசங்கற்பத்துடன் முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவு கொள்வோம். மக்களும் தேசங்களும் மகிழ்வின்போது ஒன்றிணையும் கணங்களைவிட, மனத் துயரின்போது ஒன்றிணையும் கணங்களே மிகவும் கனதியானவை, வலிமையானவை. வரலாற்றுக் கூட்டுநினைவாக, மகிழ்வின் கணங்கள் இருப்பதனைவிட, துயரின் கணங்களே மிகவும் அவலமானவை, ஆழமானவை. எனவே முள்ளிவாய்க்கால் இனவழிப்பில் தம்முயிர் ஈந்தவர்களின் நினைவுடன், தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்து ஓயாது உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT — ACCOUNTING
Purchase & Refinance; First Mortgage; Second Mortgage; Commercial Mortgage; Equity Loan
Personal Income Tax; Corporate Income Tax; HST Returns; Bookkeeping Service; Payroll Service; Audit preparation; Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி நிர்வாகத்தினர் நடத்திய "சிவத்தமிழ் விழா — 2023"





கடந்த சனிக்கிழமை ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி நிர்வாகத்தினர் நடத்திய “சிவத்தமிழ் விழா 2023“ கனடா கந்தசுவாமி ஆலய கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகள் ஆகியோர் ஆலயத்தின் பிரதம குருவும் கல்லூரியின் நிறுவனருமாகிய சிவஸ்ரீ விஜயகுமாரக் குருக்கள் அவர்கள் தலைமையில் செயற்பட்டு விழாவை வெற்றிகரமாக நடத்தினர். பிற்பகல் 3.00 மணி தொடக்கம் இரவு 12.00 மணி வரை நடைபெற்ற இந்த விழாவில் மாணவ மாணவிகளின் அற்புதமான கலைப் படைப்புக்கள் மேடையேற்றப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.அங்கு எடுக்கப்பெற்ற சில புகைப்படங்கள். படங்கள் இங்கு காணப்படுகின்றன.

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004

# UTHAYAN INTERNATIONAL AWARD FESTIVAL - 2023

# உதயன் சர்வதேச விருது விழா 2023

PRESENTED BY


VIBRANT HOSPITALITY GROUP
DEVELOPMENT MANAGEMENT
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
416 270 4343
shankar@vhgcanada.com
vibranthospitalitygroup.com
Toll Free 1 888 674 7770 Local: 905 769 1509

ARABI
RAGEEP SUBRAMANIAM PRESENTS
FINDER
PROJECT ONE

Latika Gold House
(647) 996 5922
www.latikagoldhouse.ca
L7-2900 Markham Road
Scarborough ON M1X 0C8

JSAREES
PURE SILKS
Majestic city:
2900 Markham Rd Unit #D9,
Scarborough, ON M1X 0C8


UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2023

**JUNE 18TH 2023** **Sunday, 6.00 PM**

## THIS YEAR'S AWARDS ARE...

## இவ்வருடத்திற்குரிய விருதுகள்...

- UTHAYAN LETERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER - COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
- UTHAYAN LEADERSHIP AWARD - ONTARIO
- UTHAYAN YOUTH ICON AWARD - ONTARIO
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - EUROPE
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - TAMIL NADU

## Scarborough Metropolitan Centre

**3840 Finch Ave E, Scarborough, ON M1T 3T4**

Canada

We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

# உலகின் எட்டுத் திக்குகளிலும் ஈழத் தமிழர் இனப்படுகொலையை கண்டித்து நீதிக்காகக் குரல் கொடுத்த மனித குலம்

1948ம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையை தொடர்ச்சியாக ஆண்டு வந்தஇனவாத சிங்கள கட்சிகளின் ஆட்சிகள் எமது தமிழ் மக்களை அடக்கியும் ஒடுக்கியும் கொலை செய்தும் உடமைகளைக் கொள்ள அயடித்தும் துன்புறுத்தி வந்து பின்னர் எமது இனம் சார்ந்த விடுதலைப் போராட்டத்தின் உக்கிரத்தை சகித்துக் கொள்ள முடியாமல் 'உலகை' நோக்கி வேண்டும் விடுத்தன. 'தமது நாட்டையும் நாட்டின் இறைமையையும் காப்பாற்றுங்கள்' என்று.

2009ம் ஆண்டு உலகத்தின் பல திக்குகளிலும் உள்ள பல அரசுகள் நியாயமான எமது விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிக்கவும் மக்களைக் கொன்று குவிக்கவும் அந்த மாங்கனித்தீவில் வந்திறங்கின. அப்போது மாதங்கள் சில எமது வீரம் செறிந்த மண்ணில் கபடத்தனமான யுத்தம் இடம்பெற்றது மாத்திரமன்றி. கோரூரமான இனப்படுகொலைகளும் இடம்பெற்றன. எமது தீரம் நிறைந்த விடுதலைப் போராளிகளையும் போராட்ட அமைப்பையும குழந்தைகளையும் பெண்களையும் இரக்கமின்றி கொன்று குவித்த உலக வல்லழரசுகளும் சிற்றரசுகளும் எமது தேசத்தை சிதைத்து விட்டு அங்கிருந்து வெளியேறின.

அன்றிலிருந்து நேற்று வரை 14 ஆண்டுகள் எமது மக்கள் தங்களுக்கு இழைக்கப்பெற்ற இனப்படுகொலைக்கான நீதியை வேண்டியும் இலங்கை அரசை தண்டிக்கவும் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட இராணுவக் கொடியவர்களை குற்றவாளிக் கூண்டுகளில் நிறுத்தவும் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்தி வந்தன.

ஆனால் இந்த வருடத்தில் எமது மக்கள் உலகெங்கும் கூடி நின்று உரத்துக் குரல் எழுப்பிய வண்ணம் எழுச்சி கொண்டதால் உலகின் எட்டுத் திக்குகளில் ஈழத் தமிழர் இனப்படுகொலையை கண்டித்து நீதிக்காகக் குரல் கொடுத்த மனித குலம் பல தளங்களில் நின்று எமது மக்களின் வேண்டுகோள்களை ஏற்பதாகவும் குற்றமிழைத்த இலங்கை அரசும் அதன் தலைவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை உறுதியாக ஏற்றுக்கொண்டன.

கனடா. இங்கிலாந்து. அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இந்த மாற்றம் நன்கு புலப்பட்டுத. இந்த மாற்றத்தை எமது மக்களும் அமைப்புக்களும் நன்கு பயன்படுத்த வேண்டிய பொறுப்புக்களைக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

இதேவேளை. இந்த வருடத்தின் மே-18 நினைவு நாள் தொடர்பாக தனது உள்ளக் கிடக்கைகளை அறிக்கை வடிவில் தந்துள்ள கனடாவின் நாடுகடந்த தமிழீழ அரசின் முக்கிய உறுப்பினரான நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ள கீழ்க் கண்ட வரிகளை நாம் மிகவும் கவனமாக நோக்க வேண்டும். அவற்றை எமது மக்கள் மத்தியில் எடுச்துச் செல்ல வேண்டும்.

நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் எழுதுகின்றார் "நமது மக்கள் வாழ்வே போராகவும், போரே வாழ்வாகவும் வாழ்பவர்கள். எந்த ஒரு நெருக்கடியிலும் எமது விடுதலை வேட்கை குறையாமல் தமிழீழ மண் மீட்பில் தொடர்ந்து பயணித்தவர்கள். இன அழிப்பின் பின்னரும் எமது இறைமையை மீட்பதற்கு உரிமைக்குரல் எழுப்பி வருபவர்கள். தமிழர் தேசத்தின் விடுதலைக்காக ஆகுதியானவர்களையும், மக்களையும் மனதில் நிறுத்தி உறுதிபூணும் நாளிது. அவர்களின் தியாகத்திற்கான காணிக்கை செலுத்த வேண்டிய பொறுப்பு, நம் அனைவருக்குமுண்டு. அவர்களின் தியாகம் வீணாகாவிடாமல் பாதுகாப்பதற்காக, நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வதுதான், அவர்களுக்கான உண்மையான அஞ்சிலியாகும். அஞ்சலித்தல் என்பது, செயலுக்கான உரம் என்பதை மனதில் நிறுத்த வேண்டிய நாளிது. முள்ளிவாய்க்கால் நினைவுநாளான மே 18 யை தமிழீழ தேசிய துக்க நாளாக அனு'டிப்பது, எமது தமிழீழ தேசிய உயிர்ப்புணர்வை வலுப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைகிறது. தாயகத்தின் ஜனநாயக வழிப் போராட்டங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்கள், சர்வதேச சமூகத்தின் கரிசனைகள் - எனப், பல்வேறு விடயங்கள் இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்றிருக்கின்றன. எனினும் நாம், நமது மக்களுக்காக எதிர்பார்த்த சுதந்திர வாழ்வை நெருங்குவதற்கான நம்பிக்கை இப்போதும் மங்கலாகவே இருக்கின்றது. எமது மக்களிள் வாழ்வை சூழ்ந்து அச்சுறுத்தும் சிங்கள-இருள் சிறிதும் அகலவில்லை."

இலங்கை அரசின் மீதான குற்றச்சாட்டுக்களை நன்கு வரிசைப்படுத்தி மிகவும் அழுத்தமான வகையில் குரல்களை எழுப்பி செயற்பட வேண்டும் என்பது சிங்கள இருள் என்று நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ளதையும் நாம் எமது பக்கத்தில் சுட்டிக்காட்டியதையும் அவசியமாக நாம் செயற்படுத்த இணைந்து செயற்பட வேண்டும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# தலைமன்னார் பகுதியில் 3 மாணவிகள் கடத்தல் முயற்சி – அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட சந்தேக நபர்கள்

தலைமன்னார் பகுதியில் மூன்று மாணவிகளை கடத்த முற்பட்டதாக தெரிவிக்கப்பட்டு தலைமன்னார் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களுக்கான அடையாள அணிவகுப்பில் மூன்று சிறுமிகளும் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளனர்.

தலைமன்னார் கிராமம் பகுதியில் மூன்று சிறுமிகளை வெள்ளை வேனில் கடத்த முற்பட்டதாக இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான வழக்கு விசாரணை மீண்டும் நேற்று வியாழக்கிழமை (18) மன்னார் நீதவான் நீதிமன்றில் நீதிபதி கே.எல்.எம். சாஜுத் முன்னிலையில் அழைக்கப்பட்டு சந்தேக நபர்களை அடையாளம் காட்டுவதற்காக நீதிமன்றம் மூடப்பட்ட நிலையில் அடையாள அணிவகுப்பு இடம் பெற்றது.

இதன்போது பாதிப்புகளுக்கு உள்ளான மூன்று சிறுமிகளும் இரு சந்தேக நபர்களையும் அடையாளம் காட்டியுள்ளனர்.

நடைபெற்ற இவ் அடையாள அணிவகுப்பு ஒரே நேரத்தில் இரு சந்தேக நபர்களுடன் மேலும் 14 பேர் இந்த அணிவகுப்பில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் நீதவான், முதலியார்,ஆராய்ச்சி மற்றும் இவ் வழக்குக்கு முன்னிலையாகும் சட்டத்தரணிகள் மட்டுமே மன்றுக்குள் இருந்த நிலையில் இச் சிறுமிகள் சந்தேக நபர்களை அடையாளம் காட்டியுள்ளனர்.

கடந்த 11.05.2023 அன்று வியாழக்கிழமை மாலை தலைமன்னார் கிராம பகுதி-யில் சிலுவை நகர் பகுதியில் வெள்ளை வேனில் சொக்கிலேற் பிஸ்கட் விற்பனைக்காக சென்றதாக கூறப்படும் இருவர் மூன்று சிறுமிகளுக்கு சொக்கிலேற் தருவதாக அழைத்து அவர்களை கடத்த முற்பட்டதாக தெரிவித்து இவர்களை அக்கிராம மக்கள் பிடித்து தலைமன்னார் பொலிசில் ஒப்படைத்திருந்திருந்தனர் .

சந்தேக நபர்கள் சார்பாக சட்டத்தரணிகள் சர்மினி பிரதீபன்,அர்ஜுன் அரியரட்ணம், ரூபன்ராஜ் டபேரா மற்றும் டெனிஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகினர்..

இச் சந்தேக நபர்களை எதிர்வரும் 01 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers
- and more...

SHIVA SUBRAMANIAM (647) 406-4868

**சொர்க்கம் திருமண சேவை**

34 வயது, Canadian Citizen செவ்வாய் குற்றம் அற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை. Visa இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
44 வயது கணவனை இழந்த, கனடா citizen, கிறிஸ்தவ பெண்ணுக்கு மணமகன் தேவை. இலங்கையில் இருந்தும் எதிர் பார்க்கிறோம் தான்.
Call: (416) 666-1855

**House Cleaning Staff Wanted**

House Cleaning Staff Wanted.
Day Shift Only.
( No Evenings Or Weekends)
Please Call
905 472 6042

**Business for Sale**

Scarborough வில்
30 வருடங்களாக இயங்கிவரும்
Auto Parts Rebuilding Company
விற்பனைக்கு உண்டு.
Call:
(416) 543-8170

**Help Wanted**

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் தமிழின படுகொலை நினைவு நாள் ஆரம்பம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



- மன்னார் நிருபர் (16-05-2023)

தமிழின படுகொலை வாரத்தை முன்னிட்டு இனப் படுகொலைக்கு நீதி கோரியும், முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்தும் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் இனப்படுகொலை குறித்து பல்வேறு நினைவேந்தல்கள் வடக்கு கிழக்கில் இடம் பெற்று வரும் நிலையில், வடக்கு கிழக்கில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் செவ்வாய்கிழமை (16) தமிழின படுகொலை நினைவு நாள் ஆரம்பமாகியுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் நானாட்டான் மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளில் தமிழின படுகொலை நாள் நினைவேந்தல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் தமிழின படுகொலை நினைவு நாள் மே-18 எனும் தொனிப்பொருளில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டு, வெள்ளைக்கொடி மற்றும் வெள்ளை நிற தோரணங்கள் பறக்கவிடப்பட்டுள்ளது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடொ மற்றும் மெசிமோ நிறுவன பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

# தமிழின அழிப்புக்கு நீதி கோரும் ஊர்தி பவனி மன்னாரில்



- மன்னார் நிருபர் (16-05-2023)

இலங்கை அரசாங்கத்தினால் 2009 ஆண்டு யுத்தம் என்ற போர்வையில் திட்டமிட்டு இடம் பெற்ற இனவழிப்புக்கு நீதி கோரும் ஊர்தி பவனி திங்கட்கிழமை (15) இரவு 8 மணியளவில் மன்னார் நோக்கி மக்களின் அஞ்சலிக்காக வருகை தந்தது.

மாங்குளம் ஊடாக வவுனியா முழுவதும் மக்களின் அஞ்சலிக்காக ஊர்வலமாக சென்று மன்னார் பொது பேருந்து நிலையத்தில் மக்களின் அஞ்சலிக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு அஞ்சலி செலுத்தியதுடன் மலர் தூவி வழிபாட்டிலும் ஈடுப்பட்டனர்.

குறித்த ஊர்தியானது மன்னாரை தொடர்ந்து செவ்வாய்கிழமை (16) யாழ்பாணம் மாவட்டம் முழுவதும் அஞ்சலிக்காக பயணம் செய்து 18 ஆம் திகதி முள்ளிவாய்கால் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மடு பிரதேச அரச உத்தியோகத்தர்களுக்கு சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு





- மன்னார் நிருபர் (15-05-2023)

அரச உத்தியோகத்தர்களுக்கான சூழல் பாதுகாப்புக் கருத்தமர்வு மடு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்கிழமை (16) காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது.

வாழ்வுதயம் சூழல் பாதுகாப்பு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மடு பிரதேச செயலாளர் பீட் நிஜா கரன், அலுவலக உத்தியோகத்தர் அ.செ. டல்மேடா, கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என 40 வரையான உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டார்கள்.

கறிராஸ் - வாழ்வுதயத்தின் இயக்குனர் அருட்தந்தை செ.அன்ரன் "இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள்" பற்றி உரையாற்றினார்.

மன்னார் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி. அருள்மலர் அந்தோனிப்பிள்ளை "உலக வெப்பமாதல், கழிவு முகாமைத்துவம்" தொடர்பான கருத்துரையினை வழங்கினார்.

இறுதியில் பொதுக் கலந்துரையாடலுடன் இந்நிகழ்வு நிறைவுற்றது.

# வீரபுரம் மணிவாசாகர் மகா வித்தியாலய திறன் வகுப்பறை திறப்பு விழா 2023.05.11

வீரபுரம் மணிவாசகர் மகாவித்தியாலயம் பாடசாலையானது தரம் 01 தொடக்கம் 13 வரையான சுமார் 350 மாணவர்களைக் கொண்ட ஓர் பாடசாலையாகும் இது வீரபுரம், அரசடிக்குளம், பெரியகுளம், சின்னத்தம்பனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவர்களின் பெற்றோர் பெறும்பான்பையானோர் நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளால் பாதிக்கப்பட்டவராகவும் வறுமை நிலைக்குட்பட்ட கூலித் தொழிலாளர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் பாடசாலையின் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் நவீன கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு ஓர் எட்டாக் கனியாக இருந்த வேளையில் பாடசாலை நிர்வாகத்தின் வேண்டுகோளுக்கு அமைய எமது ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான திறன் வகுப்பறை ஒன்றை அமைத்துக் கொள்வதற்கு திரு. செல்வராஜா சுகுமார் (லன்டன்), திரு. மயில்வாகனம் ஸ்ரீதரன் (லன்டன்) ஆகியோருடன் அனைத்துலக மருத்தவு நல அமைப்பு (IMHO-USA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன் ஆகியோர்களின் நிதி அனுசரனையுடன் இவ் உதவி சாத்தியமானது. 2023.05.11 அன்று திறன்வகுப்பறை திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்பித்த திரு. அருளானந்தம் ஞானேஸ்வரன் (தலைவர் ஓமந்தை, சேமமடு-பழைய மாணவர் சங்கம்) திரு. தர்மதேவன் யசோதரன் (IMHO) இணைப்பாளர் வவுனியா, மன்னார்) ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.








இந்த திறன் பலகை எமது பாடசாலை சமூகத்திற்கு கிடைத்த பாரிய வரப்பிரசாதமாகும் இதனூடாக எமது மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வினைத்திறனாக அமையும் என்பதுடன் நவீன உலகின் சவால்களை எதிர் கொள்ள கிராமப்புற மாணவர்களுக்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது என்பததையிட்டு பாடசாலையின் அதிபர் என்ற வகையில் பெறுமிதம் கொள்கின்றேன்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் முள்ளிவாய்க்கால் கஞ்சி







முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளான 18-05-2023 அன்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் யாழ்ப்பாணத்தில் அதன் தலைமை அலுவலகத்தின் முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி பரிமாறப்பட்டது.

போரில் புது மாத்தளனில் தனது கணவரைப் பலி கொடுத்த திருமதி. தக்ஷாயினி அருள்நேசயோகநாதன் அஞ்சலிச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதைத் தொடந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொதுச் செயலாளர் ம. கஜேந்திரன், துணைப் பொதுச் செயலாளர் சண். தயாளன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன் ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஏராளமானோர் முள்ளிவாய்க்கால் கஞ்சியை உணர்வுடன் அருந்திச் சென்றமையைக் காணமுடிந்தது.

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்ட நிலையில் மன்னாரிலும் அனுஷ்டிக்கப்பட்டது

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை (18) காலை 8 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் போது முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டதோடு நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மத தலைவர்கள் மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் வியாழக்கிழமை (18) முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம் பெற்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் தமிழின படுகொலை அஞ்சலி நிகழ்வுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது.





அஞ்சலி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதிகளில் தமிழின படுகொலை நினைவு நாள் மே-18 எனும் தொனிப்பொருளில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டு வெள்ளைக்கொடி மற்றும் வெள்ளை நிற தோரணங்கள் பறக்கவிடப்பட்டுள்ளது.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

குறித்த நினைவேந்தல் மற்றும் கஞ்சி வழங்கும் நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் மெசிடோ நிறுவன பணியாளர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

மேலும் மன்னார் எழுத்தூர் மற்றும் தலைமன்னார் பகுதிகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கி வைப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News



- மன்னார் நிருபர் (17-05-2023)

தமிழின படுகொலை வாரத்தை முன்னிட்டு இனப் படுகொலைக்கு நீதி கோரியும், முள்ளிவாய்க்கால் நினைவுகளை சுமந்தும் தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் இனப்படுகொலை குறித்து பல்வேறு நினைவேந்தல்கள் இடம் பெற்று வரும் நிலையில், வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் புதன்கிழமை (17) முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு அடம்பன் பகுதியில் தமிழின படுகொலை அஞ்சலி நிகழ்வுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

அஞ்சலி ஏற்பாடு செய்யப்பட்ட பகுதிகளில் தமிழின படுகொலை நினைவு நாள் மே-18 எனும் தொனிப்பொருளில் பதாகை காட்சிப்படுத்தப்பட்டு, வெள்ளைக்கொடி மற்றும் வெள்ளை நிற தோரணங்கள் பறக்கவிடப்பட்டுள்ளது.

குறித்த நினைவேந்தல் மற்றும் கஞ்சி வழங்கும் நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் மெசிடோ நிறுவன பணியாளர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.





# மாந்தை மேற்கில் வளமிக்க காணிகளை மகாவலி வலயத்திற்குள் உள்ளீர்க்க நாம் தயாராக இல்லை

## தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன்




- மன்னார் நிருபர் (17-05-2023)

மகாவலி ஜே வலயமாக்குவதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளரிடம் தகவல் கோரப்பட்டுள்ள நிலையில் வளமிக்க காணிகளை மகாவலி வலயத்திற்குள் உள்ளீர்க்க நாம் தயாராக இல்லை என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் புதன்கிழமை (17) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கம் நில அபகரிப்பை மேற்கொள்வதற்கு பல்வேறு அரச திணைக்களங்களை பயன்படுத்தி வருவது போல் நன்கு திட்டமிட்ட வகையில் சிங்களர்களை குடியேற்றும் மறைமுக நோக்கில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகள் கோரப்பட்டுள்ளது.

பாலி ஆறு, இலுப்பைக்கடவை, அந்தோனியார்புரம், கள்ளியடி, ஆத்திமோட்டை, கூராய், கோவில்குளம், பள்ளமடு, விடத்தல்தீவு மேற்கு, விடத்தல்தீவு தெற்கு, விடத்தல்தீவு வடக்கு, விடத்தல்தீவு மத்தி, காயாநகர், பெரியமடு மேற்கு, பெரியமடு கிழக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கி மகாவலி ஜே வலயமாக்குவதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளரிடம் தகவல் கோரப் பட்டுள்ளதாக அறிகின்றோம்.

இந்த திட்டத்தை முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இந்த பிரதேசம் மிகவும் வளமிக்க நிலப்பரப்பைக் கொண்டதாகும். பாலி ஆறு, சிப்பி ஆறு, பூங்கொடி ஆறு, பறங்கி ஆறு, கொடிகட்டி ஆறு, கல்பாடி ஆகிய ஆறுகளையும் மூன்று மாகாண நீர்ப்பாசன குளங்களையும் இருநூறுக்கு மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும் 8472 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களையும் வளமிக்க மேட்டுநிலத்தையும் தன்னகத்தே கொண்ட பிரதேசம் ஆகும்.

நில அமைப்பு ரீதியாக எந்த வகையிலும் மகாவலியுடன் தொடர்பு படுத்த முடியாத பகுதியை அரசாங்கம் மறைபொருள் நோக்கு நிலை நிகழ்ச்சி திட்டத்தில் தான் இம்முயற்சியை மேற்கொள்வதாக நாம் கருதுகின்றோம்.

இந்தப் பகுதியில் காணி உரித்து நிர்ணய திணைக்களம் தமது பணியை மேற்கொண்டு வரும் காலத்தில் எப்படி தகவல் சேகரிக்க முடியும் எனும் கேள்வியும் எழுகிறது.

எனவே இந்த தகவல் சேகரிப்பு முயற்சியை அரசாங்கம் நிறுத்த வேண்டும் இல்லையேல் இதற்கெதிராக மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏற்படும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது வளமிக்க காணிகளை மகாவலி வலயத்திற்குள் உள்ளீர்க்க நாம் தயாராக இல்லை என்பதை மிகவும் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறோம். என குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் மன்னாரில் பொது மக்கள், வர்த்தகர்கள், உட்பட அனைவருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி




(17-05-2023)

தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (17) 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக இடம் பெற்றது.

இதன் பொழுது பொது மக்கள், வர்த்தகர்கள், சாரதிகள் உட்பட அனைவருக்கும் முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கிவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழரசு கட்சியின் முன்னால் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் இளைஞர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





அதே நேரம் மன்னார் தோட்டவெளி பகுதியிலும் முள்ளிவாய்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு தோட்டவெளி பகுதி மக்களால் ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.

அருட்தந்தைகள் பொது மக்கள் உட்பட பலரும் இணைந்து உணர்வு பூர்வமாக குறித்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கனடிய செய்திகள் Canadian News

## "WE NEED A SMART, EXPERIENCED MAYOR AND THIS LEADER HAS TO BE A WOMAN"
- Journalist Pamela Jeffery

# "ரொறன்ரோ மாநகரில் புதிய மேயராக தெரிவு செய்யப்படவுள்ளவர் அவசியம் ஒரு அனுபவமுள்ள பெண் அரசியல்வாதியாக இருக்க வேண்டும்"

### ரொறன்ரோ பத்திரிகையாளர் பெமிலா ஜெவ்ரி







எதிர் வரும் யூன் 26ம் திகதி நடைபெறவுள்ள கனடாவின் ரொறன்ரோ மாநகரின் மேயராக அவசியம் ஒரு அனுபவமுள்ளள பெண் அரசியல் வாதியே தெரிவு செய்யப்பட வேண்டும் என்று தனது பக்கத்தில் எழுதியுள்ளார் ரொறன்ரொவிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேட்டின் பத்தி எழுத்தாளர் பத்திரிகையாளர் பெமிலா ஜெவ்ரி அவர்கள்.

ரொறன்ரோ மாநகர மேயராக முன்னர் பதவி வகித்த ஜோன் ரோரி அவர்கள் ஒரு குற்றச் சாட்டு தொடர்பாக தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து தற்போது ரொறன்ரோ நகரசபைக்கான புதிய மேயரைத் தெரிவு செய்யும் தேர்தல் யூன் மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் வேட்பாளர்கள் பலர் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்கள்.

அவர்களில் முன்னாள் ஒன்றாரியோ மாகாணத்தின் பாராளுமன்ற உறுப்பினரும் லிபரல் அரசில் அமைச்சராகப் பதவி வகித்தவருமான Mitzie Hunter மற்றும் முன்னாள் நகரசபை உறுப்பினரும் மறைந்த மத்திய என்டிபி கட்சியின் தலைவர் ஜெய்க் லேய்ரன் அவர்களின் துணைவியுமான Olivia Chow - ஒலிவியா சோ மற்றும் Ana Bailao ஆகிய அனுபவமிக்க பெண்கள் போட்டியிடுகின்றனர். இவர்களோடு பல ஆண் வேட்பாளர்களும் போட்டியாளர்களும் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் தேர்தல் பிரச்சாரங்கள் "சூடு" பிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில் ரொறன்ரோ பத்திரிகையொன்றில் பத்தி எழுத்தாளர் ஒருவர் எழுதியுள்ள கட்டுரையானது பலரை திரும்பிப் பார்க்கவும் சிந்திக்கவும் தூண்டியுள்ளது என்றால் அது மிகையாகாது.

அவர் தனது பத்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்

"நடைபெறவுள்ள ரொறன்ரோ நகரத்திற்கான மேயர் தேர்தலில் போட்டியில் குதித்துள்ள வேட்பாளர்களில் ஒரு அனுபவமுள்ள பெண் அரசியல்வாதி ஒருவரே வெற்றி பெற்று மேயர் பதவியில் அமர வேண்டும். இந்த வகையில் கனடாவில் உள்ள 62 பெண் அரசியல் தலைவர்களில் ஒருவராகத் திகழும் Mitzie Hunter அவர்களே ரொறன்ரோ மாநகர மேயராக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதற்குக் காரணம் அவர் ஒருவரே தற்போதைய வேட்பாளர்களில் மாற்றங்களைக் கொண்டுவரக் கூடியவர் என்ற நம்பிக்கைகளை விதைத்துள்ளார்.

அத்துடன் Mitzie Hunter அவர்கள் மாகாண பாராளுமன்றத்தின் உறுப்பினராக நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். மாகாண அமைச்சராகவும் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். மேலும் Mitzie Hunter அவர்கள் ரொறன்ரோ தலைமை நிர்வாக அதிகாரியாக ரொறன்ரோ சமூக வீடமைப்பு நிறுவனத்தில் நீண்ட காலம் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். நடுத்தர மற்றும் அடி மட்ட மக்களின் துன்பங்களை நன்கு புரிந்து கொண்டவர். மேலும் ரொறன்ரோ மாநகர சபையில் இம்முறையாவது பெண் ஒருவரின் தலைமைத்துவக் குரல் ஒலிக்க வேண்டும். அதற்காக அவர்களையே ரொறன்ரோ வாழ் மக்கள் தங்கள் மேயராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்" இவ்வாறு மேற்படி பத்திரிகையாளர் Pamela Jeffery எழுதியுள்ளார்.


# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இந்தியா செய்திகள்
India News

# வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி பீடத்திற்கு ஸ்ரீ தாய் மூகாம்பிகை, ஸ்ரீ வீரபத்திரர் சிலைகள் கரிக்கால பவனி வருகை



இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை, அனந்தலை மதுரா, கீழ்ப்புதுப்பேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் ஸ்தாபகர் மற்றம் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகளின் ஆசிகளுடன் 17.5.2023 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் மகாபலிபுரம் பிரகாஷ் சிற்பகலைக்கூடத்தில் திரு. லோகநாதன் ஸ்தபதி அவர்களால் வடிவமைக்கப்பட்ட 5 அடி உயரமுள்ள தாய் மூகாம்பிகை, 5 அடி உயரமுள்ள ஸ்ரீ வீரபத்திரர் மற்றும் 2 அடி உயரமுள்ள தட்சன், காளி ஆகிய கற்சிலைகள் மகாபலிபுரத்திலிருந்து கரிக்கோலமாக புறப்பட்டு காலை 10 மணியளவில் தன்வந்திரி பீடத்திற்கு வருகை புரியவுள்ளது. இச்சிலைகளுக்கு டாக்டர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் மஹா தீபாராதனையும் சிறப்பு பூஜைகளும் நிகழ்த்தவுள்ளார்.

இச்சிலைகள் மகாபலிபுரம், திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம், காவேரிப்பாக்கம் வழியாக கரிக்கோல பவனியாக வருகிறது. இச்சிலையானது வருகிற ஜூன் 8 வைகாசி 25 மற்றும் ஜூன் 9 வைகாசி 26ம் தேதிகளில் ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில் பொதுமக்கள் முன்னிலையில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. இந்த தகவலை தன்வந்திரி குடும்பத்தினர் தெரிவித்தனர்.

# "கள்ளச்சாராயம் அருந்திய விவகாரம்: மருத்துவமனைகளில் 66 பேர் அனுமதி"

## மா.சுப்பிரமணியன் தகவல்



கள்ளச்சாராயம் அருந்தியதாக 66 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தேசிய டிங்கு தினத்தை முன்னிட்டு தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகத்தில் டிங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். மருத்துவத்துறை செயலாளர் ககன்தீப் சிங் உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசிய மா.சுப்பிரமணியன், "டிங்கு, மலேரியா பாதிப்பு தமிழகத்தில் குறைந்துள்ளது. டிங்கு, மலேரியா நோய் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 1,70,300 டிங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆண்டு இதுவரை 2426 பேருக்கு டிங்கு பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளது. ஆனால், டிங்குவால் கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் இறப்பு இல்லை. உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளது. டிங்கு ஒழிப்பிற்காக 20,480 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். போதிய மருந்துகள், உபகரணங்கள் கையிருப்பில் உள்ளது. கொசுவினால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்களின் விழிப்புணர்வும் இவ்விஷயத்தில் அதிகம் தேவை. கடந்த காலங்களில் இன்ஃபுளுயென்சா காய்ச்சல் பரவி அச்சத்தை ஏற்படுத்தியது. அதனை கட்டுப்படுத்த போதிய காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன" என்றார்.

தொடர்ந்து தமிழ்நாட்டை உலுக்கி வரும் கள்ளச்சாராயம் சம்பவம் குறித்து பேசுகையில், "கள்ளச்சாராயம் அருந்தியதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 66 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 55 பேர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலும், திண்டிவனத்தில் 5 பேரும், ஜிப்மர் மருத்துவமனையில் 5 பேரும், புதுவை தனியார் மருத்துவமனையில் ஒருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மெத்தனால் வேதிப்பொருள் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களின் சிகிச்சைகளை கண்காணிக்க சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.


சினிமா

# "ஜவான்" படத்தை அடுத்து மற்றொரு பாலிவுட் நடிகரை இயக்கும் அட்லீ?



ஷாருக் கான் நடிப்பில், இயக்குநர் அட்லீ இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் "ஜவான்". இந்தப் படத்தில், நயன்தாரா, ப்ரியாமணி, விஜய் சேதுபதி, யோகி பாபு, சான்யா மல்ஹோத்ரா, சுனில் குரோவர் உள்ளிட்ட பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடித்து வருகிறது. கௌரவ வேடத்தில் தீபிகா படுகோனே, சஞ்சய் தத் ஆகியோர் நடித்துள்ளனர். வரும் ஜூன் 2-ம் தேதி இந்தப் படம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டநிலையில், வி.எஃப்.எக்ஸ் பணிகள் காரணமாக வெளியீட்டு தேதி மாற்றப்படவுள்ளதாக தெரிகிறது. வரும் செப்டம்பர் 7-ம் தேதி படத்தை வெளியிட படக்குழு திட்டமிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், "ஜவான்" படத்தைத் தொடர்ந்து பாலிவுட் நடிகர் வருண் தவானை இயக்குநர் அட்லீ இயக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. "கபீர் சிங்" படத்தை தயாரித்த முராத் கேதான் இந்தப் படத்தை தயாரிக்க உள்ளதாகவும் சொல்லப்பட்டு வருகிறது. ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் படப்பிடிப்பு துவங்கப்படலாம் என்றும், அடுத்த வருட கோடை விடுமுறைக்கு படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# லைகா நிறுவனத்துக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை!




பிரபல திரைப்பட தயாரிப்பாளர் சுபாஷ்கரனுக்கு சொந்தமான லைக்கா நிறுவனத்தில் சட்டவிரோதமாக பணப் பரிமாற்றம் நடைபெற்றதாக எழுந்த புகாரின் அடிப்படையில், அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள்.

சென்னை தியாகராய நகர் உள்ள விஜயராகவா சாலையில் உள்ள லைக்கா நிறுவன அலுவலகம், அடையாறில் உள்ள சுபாஷ்கரனின் இல்லம், சோழிங்கநல்லூர் அருகே உள்ள காரப்பாக்கம் பகுதியில் உள்ள அலுவலகம் உட்பட எட்டு இடங்களில் அதிகாலை முதல் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகிறார்கள். சென்னை விஜயராகவா சாலையில் 6 பேர் கொண்ட குழுவினர் சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள். வெளிநாடுகளில் பெரிய அளவில் இந்நிறுவனம் சார்பில் முதலீடு செய்யப்பட்டது தொடர்பாகவும், சமீபத்தில் இந்த நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட பொன்னியின் செல்வன் படத்தின் மூலம் கிடைத்த வருவாய் தொடர்பான கணக்குகள் தொடர்பாகவும் (இதை சரியாக அந்நிறுவனம் காட்டவில்லை என புகார் உள்ளது) சோதனை நடைபெறுவதாக தெரிய வருகிறது. சோதனை முடிவில் நிறுவனம் எந்த அளவுக்கு சட்ட விரோதமாக பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டது தெரிய வரும் என கூறப்படுகிறது.

ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION - (OSTBA)
EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA
Mailing address: P.O.Box 48068 (Dundas &Sheppard Intersection)
Mississauga ON L5A 4G8

OSTBA ANNUAL GENERAL MEETING 2023

Date: Wednesday, June 21, 2023
Via Zoom link: 647 795 0504 Pass Code: 292929
Venue: Mississauga Valley Community Centre
1275, Mississauga Valley Blvd, Mississauga, ON, L5A 3R8
Time: 10:00 am

Agenda
-Registration of members in good standing
-Canadian National Anthem
-Thamil Thaai Vaalthu
-A minute silence remembering deceased members
-Adoption of the minutes of the A.G.M held in 2022
-President's Address
-Secretary's Annual Report
-Audited Financial Statements - April 01,2022 to March 31, 2023
-Election of Board of Trustees
-A.O.B

Members attending the AGM through zoom will require to have their video on with their name.

Mr. T.Sivaloganathan
Board Secretary (OSTBA)

Mr. Esa Para Esananda
Board President (OSTBA)

Tel: 416-473-6880 Email: ostba2019@gmail.com

# தெய்வப் புலவர் திருவள்ளுவரின் சிந்தனைகளுக்கு மாறாக. திருக்குறளை தத்தமது மதநம்பிக்கைகளுக்கு ஆதரவான ஒன்றாகக் காட்டிக்கொள்வதில் பல்வேறு மதங்களைச் சார்ந்தோர் ஆர்வம் காட்டுகின்றனர்

## கலாநிதி பால சிவகடாட்சம் தெரிவிப்பு









தெய்வப் புலவர் திருவள்ளுவரின் சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் மாறாக. திருக்குறள் என்னும் நீதி நூலை ஆவரைத் தத்தமது மதநம்பிக்கைகளுக்கு ஆதரவான ஒருவராகக் காட்டிக்கொள்வதில் பல்வேறு மதங்களைச் சார்ந்தோரும் இன்று ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்

நீ மொட்டை அடிக்கவும் வேண்டாம் தாடி வளர்க்கவும் வேன்டாம். நல்லவனாக வாழ்ந்தாலே போதும் என்று கூறிய வள்ளுவருக்கு நீண்டதாடியும் சடைமுடியும் வைத்து அலங்கரித்ததுடன் நில்லாது காவி உடையும் திருநீற்றுக் குறிகளும் சூட்டி அழகுபார்க்க ஆசைப்படுகிறார்கள் சிலர். வள்ளுவரை மழித்த தலையிடைய சமண, பௌத்த துறவியாகவோ சடாமுடியும் கமண்டலமுமாகக் காட்சிதரும் ஒரு சைவத்துறவியாகவோ கற்பனை செய்து பார்க்கமுடியவில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கனடா வாழ் சிந்தனையாளரும் பன்முகப் பார்வை கொண்ட எழுத்தாளருமான கலாநிதி பால சிவகடாட்சம் அவர்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 14ம் திகதி கனடா ஸ்காபுறோ - ஒன்றாரியோ - தமிழ் இசைக் கலாமன்றத்தின் கலாமண்டபத்தில் ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானைக் கொண்டாடும் அற்புத விழா எடுக்கப்பெற்றது.

அன்றைய தினம் திருவள்ளுவப் பெருந்தகையின் "ஒளி" வீசும் திருவுருவப் படம் ஒன்றும் திறந்து வைக்கப்பெற்றது.

விழாவின் ஆரம்பத்தில் "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் அவர்கள் பக்கவாத்தியக் கலைஞர்கள் சகிதம் திருக்குறளை இசையோடு பாடி சமர்ப்பணம் செய்த நிகழ்வு சபையோரை மெய்சிலிர்க்க வைத்தது.

மேற்படி விழாவில் பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் மற்றும் கலாநிதி பால சிவகடாட்சம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி பால சிவகடாட்சம் தனது உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

"காமத்துப்பால் உள்ளிட்ட திருக்குறள் முழுவதையும் ஆழ்ந்து படித்த ஒருவருக்கு வள்ளுவரை முற்றும் துறந்த முனிவராக ஏற்றுக்கொள்வது மிகவும் கடினம். இல்லறவாழ்க்கையை முழுமையாக அனுபவித்து இல்லறத்தாருக்குரிய கடமைகள் அனைத்தையும் செய்துமுடித்தபின்னர் இறுதிக்காலத்தில் தவ வாழ்க்கையை மேற்கொண்ட ஒருவராகவே வள்ளுவரை இனம்காண முடிகிறது.

வள்ளுவர் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர் என்று கண்டறிவதைவிட அவர் எந்தச் சமயத்தைச் சேராதவர் என்று கண்டறிவது இலகுவானது. ஒன்று இரண்டு குறள்களை வைத்துகொண்டு வள்ளுவரின் மதத்தைத் தேடுவதில் அர்த்தம் இல்லை. திருக்குறளை முழுமையாக நோக்கும்போது எந்த ஒரு மதத்துக்குள்ளும் அடக்கமுடியாதவராகவும், மனிதன் என்பவன் இப்படித்தான் வாழவேண்டும் என்பதில் திடமான ஒரு தெளிவை உடையவராகவும், வள்ளுவரை நாம் தரிசிக்க முடிகிறது.

அனைத்து உயிர்களிடத்தும் அன்புகாட்டவேண்டும் என்பதுதான் வள்ளுவரின் மதம், அதாவது கொள்கை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றவர் வள்ளுவர். இந்திய மரபில் உள்ள பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர குலமுறை வகைப்படுத்தலை அவர் ஏற்கவில்லை.

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொடொழுகலான்

பிறப்பால் ஒருவர் அந்தணராகிவிடமுடியாது அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்துபவனே அந்தணன். என்பதை வலியுறுத்துகிறார் வள்ளுவர். அந்தவகையில் வள்ளுவரும் அந்தணர் என்னும் அடையாளத்துக்கு உரியவர் ஆகிறார்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.
திருக்குறள் 972

எல்லாப் பிறப்புக்களும் சமத்துவம் உடையன. அவரவர் செய்யும் தொழில்தான் வேறுபடுகின்றது என்று உறுதிபடக் கூறுகின்றார் வள்ளுவர்.

யாகம் அல்லது வேள்வி செய்வது வைதீக சமயத்தவரின் மிகமுக்கியமான சடங்காகக் கருதப்படுவது. ஆயிரம் வேள்விகளைச் செய்துமுடிக்கும் அரசன் இந்திரனுக்கு ஒப்பான பதவியை அடைகின்றான் என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆயிரம் வேள்விகள் செய்வதிலும் ஓர் உயிரைக் கொன்று உண்ணாமல் இருத்தல் மேலானது என்கிறார் வள்ளுவர்.

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று திருக்குறள் 251

கடவுளின் பெயரால் ஆடு, மாடு, கோழி என்பவற்றைக் கொன்று பலி கொடுப்பது, படையல் வைப்பது, பகிர்ந்துண்பது போன்ற வழக்கங்கள் பண்டுதொட்டுப் பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களாலும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பதை மறுக்கமுடியாது. சங்ககாலத் தமிழர் வாழ்விலும்கூட வேலன் என்னும் தெய்வத்துக்கு ஆடு வெட்டிப் பலி கொடுக்கும் வழக்கம் இருந்தது. கிராமப்புறங்களில் சிறுதெய்வ வழிபாட்டு நிகழ்வுகளில் கடாவெட்டிப் படையலிடும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. யூதமதம், கிறீத்தவம், இஸ்லாம் ஆகிய மதங்கள் உயிர்ப்பலி கொடுப்பதைத் தடைசெய்ததில்லை. இன்றும் விலங்குகளைக் கொன்று உண்பதைத் தடைசெய்வதில்லை.

தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்
திருக்குறள் 252

தன்னுடைய சதையை வளர்ப்பதற்காகப் பிற உயிர்களின் சதையை உண்பவனிடம் கருணையை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? என்று மாமிசம் உண்பவர்களைக் கடுமையாகச் சாடுகின்றார் வள்ளுவர்.

கொல்லாமையை வலியுறுத்திய அளவுக்குப் பௌத்தம் புலால் மறுப்பை வலியுறுத்தியதாகத் தெரியவில்லை. மாமிசத்தை மட்டுமல்லாது விலங்குகளிடம் இருந்து பெறப்படும் பால், தயிர், மோர், நெய் என்பவற்றுடன் வண்டுகளின் சேமிப்பான தேனையும்கூட மருந்துக்கும் அனுமதிக்காதவர்கள் சமணர்கள்.

புலால் உண்பது குறித்துப் பௌத்தனாகிய மொக்கலன் என்பவனுக்கும் சமணப்பெண்ணான நீலகேசிக்கும் இடையிலான நீண்டதொரு விவாதம் சமண காவியங்களுள் ஒன்றான நீலகேசியில் இடம் பெறுகின்றது.

"கொல்லுதல் பாவச்செயல் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால், மாமிசம் உண்பதைப் பாவம் என்று சமணர் எப்படிக்கூறமுடியும்? தான் கொல்லாத ஒன்றைத் தின்பவனுக்குப் பாவம் ஏது?" என்று மொக்கலன் என்னும் பௌத்தன் கேட்கிறான். "தீமையை நேரடியாகச் செய்வது மட்டுமன்று, தீமையைச் செய்யத் தூண்டுவதும் பாவமே" என்கிறாள் சமணப்பெண்ணான நீலகேசி. இவளது வாதம் வள்ளுவரின் மற்றுமொரு குறளை நினைவூட்டுகின்றது.

உண்பதற்காக உலகிலே எவரும் மாமிசம் வாங்காவிடின் அதனை விற்றுப் பணம் சம்பாதிக்கும் நோக்கில் கொலைத்தொழில் செய்வோரும் இருக்கமாட்டார்கள் என்கிறார் வள்ளுவர்.

தினற்பொருட்டாற் கொள்ளாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்
திருக்குறள் 256

நீலகேசி என்னும் சமணக் காவியத்தில் தொல்காப்பியம், நாலடியார், திருக்குறள் என்னும் மூன்று தமிழ்நூல்கள் மட்டுமே எடுத்தாளப் படுகின்றன. நாலடியார் சமணமுனிவர்கள் ஆக்கிய அறநூல் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வாறே தொல்காப்பியமும் திருக்குறளும் சமணரால் இயற்றப்பட்டவை என்று கொள்ள இடமுண்டு என்கிறார் நீலகேசியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட பேராசிரியர் ஆ. சக்கரவர்த்தி அவர்கள். நீலகேசிக்கு உரை எழுதிய வாமனமுனிவர் (14ஆம் நூற்றாண்டு) வள்ளுவரை எம்மவர் ("எம் ஒத்து") என்கிறார்.

வள்ளுவரைச் சமணர்கள் தமக்கு ஒத்த கருத்தை உடையவர் என்று கூறும்போது அதற்கு அவர்கள் முன்வைக்கும் வாதங்கள் மிகப்பலம் வாய்ந்தனவாக உள்ளன என்பதனை அவதானிக்கமுடியும். அதற்கும் ஒருபடி மேலே சென்று வள்ளுவரை ஒரு சமண ஆச்சாரியராக அடையாளப்படுத்துகின்றனர் சமணமதப் பெரியோர்கள்.

திருக்குறளை இயற்றியவர் ஸ்ரீ குந்த குந்த ஆச்சாரியார் என்று சமண சமயத்தவர் கூறுகின்றனர். இவர் கி.மு. 52 முதல் கி.பி. 44 வரை வாழ்ந்தவராக அறியப்படுகின்றார். இவருக்குப் பத்மநந்தி, ஏலாசாரியர் என்னும் பெயர்களும் உண்டு என்று கூறும் சமணர் இவர் பிராகிருத மொழியில் பலநூல்களை எழுதியுள்ளபோதிலும் தமிழில் திருக்குறள் என்னும் ஒரு நூலை மட்டுமே எழுதியுள்ளார் என்றும் கூறுகின்றார்கள்.

திருக்குறளுக்கான ஜைன உரையுடன் கூடிய திருக்குறள் ஓலைச் சுவடியொன்றில் "ஏலாசிரியரால் சிருஷ்டிக்கப்பட்ட திருக்குறள்" என்று காணப்படுவதாக அறியமுடிகின்றது. இந்த ஏலாசிரியர் என்னும் பெயரை நோக்குமிடத்து மரபுக்கதைகள் சிலவற்றில் வள்ளுவரின் நண்பராகக் கூறப்படும் எலேலசிங்கன் பெயர் நினைவுக்கு வருவதை தவிர்க்கமுடியவில்லை.

குந்த குந்த ஆச்சாரியாரின் முதன்மைச் சீடரான திருவுள்ளம் நயினார் என்பார் தமது குரு கேட்டுக்கொண்டதற்கு இணங்கத் திருக்குறளை அப்போதிருந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றுவித்தார் என்று கூறப்படுகின்றது. திருவுள்ளம் நயினாரே காலப்போக்கில் திருவள்ளுவர் என்றும் திருவள்ளுவ நாயனார் என்றும் அறியப்பட்டார் என்கிறார்கள் சமணர்கள்.

திருவுள்ளம் நயினார் வானப்பிரஸ்த ஆசிரமத்தை மேற்கொண்ட ஒருவராக அறியப்படுகின்றார். வானப்பிரஸ்தம் என்பது மணம் முடித்து மனைவி மக்களுடன் வாழ்ந்தபின்னர் இல்லறத்தினின்றும் விலகிக் காடுசென்று முற்றும் துறந்த முனிவர் ஒருவருக்குப் பணிவிடை செய்து அவரிடமிருந்து தத்துவங்களைக் கற்றுக்கொள்ளும் துறவு வாழ்க்கையாகும். இல்வாழ்க்கை, நன்மக்கட்பேறு, காதலின்பம் பற்றியெல்லாம் அழகுற எடுத்துரைக்கும் திருக்குறளின் ஆக்கத்தில் திருவுள்ளம் நயினாரின் பங்கு அதிகம் இருத்தல் கூடுமோ என்னும் ஓர் ஐயம் எழுகின்றது.

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமேலழகர் - திருமலையர்
மல்லன் பரிப்பெருமான் காலிங்கர் வள்ளுவர் நூற்(கு)
எல்லையுரை செய்தார் இவர்

திருக்குறளுக்கு உரைகண்ட பழைய உரையாசிரியர்களுள் முதலாவதாகக் கூறப்படுபவர் தருமர். இவரது உரை ஜைனமதச் சார்புடையது என்பதைத் தமக்குக் கிடைத்த ஓரிரு சுவடிகளை ஆராய்ந்து அறியத்தந்தார் பேராசிரியர் அ. சக்கரவர்த்தி அவர்கள். கவிராஜபண்டிதர் என்பவரின் ஜைனச் சார்புத் திருக்குறள் உரையை ஆங்கில முன்னுரையுடன் 1949ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்டவர் இவர்.

தருமரின் திருக்குறள் உரை இன்று முற்றாக மறைந்துவிட்டது. சைவநாயன்மார்களுள் ஒருவரான அப்பரடிகள் சமணமதத்தைத் தழுவிப் பின்னர் சைவத்துக்குத் திரும்பியவர். இவர் சமணராக இருந்த காலத்தில் தருமசேனர் என்னும் பெயரைச் சூடியிருந்தார். திருக்குறளுக்கு உரை எழுதிய தருமர் இவராயிருத்தல் கூடுமோ என்னும் ஓர் ஐயத்தை ஒருசில ஆதாரங்களின் அடிப்படையில் எழுப்புகின்றார் தஞ்சாவூர்த் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் அரிய கையெழுத்துச் சுவடிதுறையின் முன்னாள் பேராசிரியர் கே. எம். வேங்கடராமையா அவர்கள்." என்றார்.

பல்வேறு துறைசார்ந்தவர்கள் கலந்து சிறப்பித்த இந்த நிகழ்வு ஒரு அற்புதமான தமிழ் சார்ந்த விழாவாக பார்க்கப்பட்டது. அத்துடன் தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு "மகுடம்" சூட்டும் விழாவாக ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தினர் இதை நடத்திக்காட்டினர் என்றால் அது மிகையாகாது. இந்தவகையில் ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தின் தலைவர் சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி மற்றும் அங்கத்தவர்கள் மற்றும் இந்த விழாவிற்காக உழைத்த புனிதவேல் அவர்கள் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

**செய்தியும் படங்களும் - சத்தியன் மற்றும் சிவா**

# மேலும் ஒரு மே 18 கடந்து செல்கின்றது



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

கடந்த வியாழக்கிழமை 14ஆவது மே 18ஐ தமிழ் மக்கள் அனுஷ்டித்திருக்கிறார்கள். 2009 மே 18 ஆம் திகதியோடு தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அதன் பின்னரும் தமிழ் மக்கள் அறவழிகளில் போராடுகிறார்கள். 2009க்குப் பின்னரான தமிழ் மக்களின் போராட்டம் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறும் நோக்கிலானது என்று கூறப்படுகிறது.

ஆனால், ஆயுதப் போராட்டம் ஏற்படுத்திய அளவு தாக்கத்தை கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்களின் எந்த ஒரு போராட்டமும் ஏற்படுத்தவில்லை. ஆயுதப் போராட்டம் எனப்படுவது இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நிலைகளைத் தாக்கியது. உயிர்களை அழித்தது. நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை குழப்பியது. அந்நிய முதலீடுகளுக்கான வாய்ப்புகளைக் குறைத்தது. இவற்றுடன் போர்க்களத்தில் அரசாங்கம் பெருமளவு காசைக் கொட்டி சண்டை போட வேண்டியிருந்தது. இவை எல்லாவற்றினதும் தொகுக்கப்பட்ட விளைவாக ஆயுதப் போராட்டமானது நாட்டின் பொருளாதாரத்தை மீளமுடியாத அளவுக்குத் தாக்கியது. இது ஆயுதப் போராட்டத்தின் முதலாவது விளைவு.

இரண்டாவது விளைவு போராட்டத்தின் வெற்றிகள் காரணமாக ஒரு விடுதலைப் பிரதேசம் கிடைத்தது. அந்த விடுதலைப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு கருநிலை அரசை நிர்வகித்தது. அது ஒரு அதிகார மையமாக காணப்பட்டது. இதனால் இலங்கைத் தீவில் இரண்டு அதிகாரம் மையங்கள் உள்ளன என்று கருதப்பட்டது. நோர்வேயின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகள் அவ்வாறு இலங்கைத் தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருப்பதனை உறுதிப்படுத்தியது. எனினும், வோஷிங்டன் மாநாடு போன்றன அந்த தகைமையைக் கேள்விக்கு உள்ளாக்கியது என்பது தனியாகப் பார்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஆயுதப் போராட்டத்தின் விளைவாக ஒரு புறம், அரசாங்கத்துக்கு இழப்புகள் ஏற்பட்டன. இன்னொரு புறம் அது ஒரு புதிய அதிகார மையத்தை சிருஷ்டித்தது. இதன் விளைவாக தமிழ் மக்களுக்கு பேரபலம் அதிகமாக இருந்தது. அந்த பேர பலத்தை வைத்துக்கொண்டு தமிழ் மக்கள் பேச்சுவார்த்தைக்கு போனார்கள். இவை யாவும் 2009க்கு முந்திய காட்சிகள்.

ஆனால் 2009க்குப் பின் மேற்சொன்ன எந்த ஒரு பலமும் தமிழ் மக்களிடம் இல்லை. தமிழ் மக்களிடம் கட்டுப்பாட்டு பிரதேசமோ, கருநிலை அரசோ கிடையாது. அதுமட்டுமல்ல, தமிழ் மக்கள் குறைந்தபட்சம் ஒரு தரப்பாகத்தானும் ஒன்று திரளவில்லை என்பதே கடந்த 14 ஆண்டு கால யதார்த்தம் ஆகும். தமிழ் மக்கள் இப்பொழுது நாட்டுக்குள் கட்சிகளாகவும், கொள்கைகளாகவும், வடக்கு கிழக்காகவும், சமயங்களாகவும், சாதியாகவும், தியாகிகளாகவும், துரோகிகளாகவும், ஒட்டுக் குழுக்களாகவும், கைக்கூலிகளாகவும், ஒத்தோடிகளாகவும், மறுத்தோடிகளாகவும், இன்ன பிறவாகவும் சிதறிப் போய்க் காணப்படுகிறார்கள். இவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு மையத்துக்கு கொண்டுவர கட்சிகளும் கிடையாது மக்கள் அமைப்புகளும் கிடையாது. இது முதலாவது பலவீனம்.

இரண்டாவது பலவீனம் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்கள் நடத்திவரும் அறவழிப் போராட்டங்கள் எதனாலேயும் இலங்கை அரசாங்கத்துக்கு தாக்கமான விதங்களில் இழப்புகளை ஏற்படுத்த முடியவில்லை. அதாவது அரசாங்கத்துக்கு நோகக்கூடிய விதத்தில் தமிழ் மக்கள் போராடவில்லை. சில எழுக தமிழ்களிலும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி போன்ற போராட்டங்களின் மூலமும் தமிழ் மக்கள் வெளி உலகின் கவனத்தை ஈர்க்கிறார்கள். ஆனால் அதைக் கூட தொடர்ச்சியாகச் செய்ய முடியவில்லை. எனவே இந்த அடிப்படையில் கூறின் தமிழ் மக்கள் கடந்த 14 ஆண்டுகளாக பேரபலம் குறைந்த ஒரு மக்கள் கூட்டமாகவே காணப்படுகிறார்கள்.

ஆனால் அதேசமயம் வேறொரு தளத்தில் தமிழ் மக்களுக்கு பேரம் இருக்கிறது. அது என்னவெனில் புவிசார் அரசியல் பரப்பிலும், பூகோள அரசியல் பரப்பிலும் தமிழ் மக்களைக் கையாள வேண்டிய தேவை வெளி அரசுகளுக்கு உண்டு. அதனால் வெளியரசுகள் தமிழ் மக்களை ஒரு கருவியாகக் கையாண்டு ரத்தமது வெளியுறவு இலக்குகளை அடைவதற்கு முயற்சிக்கும். இந்தப் பேரம் எங்கிருந்து வருகிறது என்று சொன்னால், இந்து மகா சமுத்திரத்தில் பேரரசுகளுக்கு இடையிலான இழு விசைகளுக்குள் இச்சிறிய தீவு சிக்கியிருப்பதினால்தான். அதாவது திருத்தமாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு இப்பொழுது உள்ள பேரமெல்லாம் அவர்களுடைய போராட்டத்தின் பலனாகக் கிடைத்தது அல்ல. மாறாக பேரரசுகளின் தேவைகள் காரணமாக ஏற்பட்டிருக்கும் பேரபலம்தான் இந்த இருக்கின்ற ஒரே பலத்தையும் தமிழ் மக்கள் சரியாகக் கையாண்டு வருகிறார்களா என்பதனை கடந்த 14 ஆண்டு கால தமிழ் அரசியலுக்கு ஊடாகத் தொகுத்துப் பார்த்தால், விரக்தியூட்டும் விடையே கிடைக்கும். ஏனெனில் வெளியரசுகளைக் கையாளத் தேவையான பலத்தோடும் வெளியுறவுத் தரிசனங்களோடும் தமிழ் மக்கள் இல்லை,

வெளியுறவு கட்டமைப்பு எனப்படுவது ஓர் அதிகார மையமாக இருக்கும் போது தான் தேவை. தமிழ் மக்கள் ஓர் அதிகார மையமாக இல்லாதவரை, வெளியுறவுக் கட்டமைப்புக்கு தேவையும் இல்லை. ஓர் அதிகார மையம் வெளியில் உள்ள ஏனைய அதிகார மையங்களோடு உறவாடும் போதுதான் அதற்கென்று ஒரு வெளியுறவுத் தரிசனம் தேவைப்படுகிறது. இந்த அடிப்படையில் பார்த்தால், தாயகத்தில் தமிழ் மக்கள் ஒரு மையமாக இல்லை. எனவே நடைமுறையில் தமிழ் மக்களிடம் ஒரு வெளியுறவுக் கொள்கையும் இல்லை. இதனால் தமிழ் மக்கள் வெளி அரசுகளைக் கையாள்வதற்கு பதிலாக வெளி அரசுகள்தான் தமிழ் மக்களைக் கையாண்டு வருகின்றன. கடந்த 14 ஆண்டு கால அரசியலில் அவ்வாறு வெளியரசுகளை தமிழ் மக்கள் கையாளக்கூடிய ஒரு சந்தர்ப்பம் 2015 அளவில் கிடைத்தது. ராஜபக்சக்களை அரங்கில் இருந்து அகற்றுவதற்காக இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு தமிழ் அரசியல் தேவைப்பட்டது. அத்தருணத்தில் தமிழ் மக்களின் பேரம் ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்தது. ஆனால் அந்த பேரவாய்ப்பை உணர்ந்து அதைக் கையாள்வதற்கு சம்பந்தர் தவறிவிட்டார்.

அதுபோலவே, கடந்த ஆண்டு தென்னிலங்கையில் இடம் பெற்ற தன்னெழுச்சிப் போராட்டங்களின்போதும் தமிழ் மக்கள் தெளிவான வெளியுறவு இலக்குகளை முன்வைத்து பேரத்தை அதிகப்படுத்தி இருந்திருக்கலாம். ஆனால் துயரம் என்னவென்றால் தமிழ்மக்கள் மத்தியில் அவ்வாறு பொருத்தமான வெளியுறவுத் தரிசனங்களை முன்வைத்து பேரம் பேசக்கூடிய கட்சிகளும் கிடையாது மக்கள் இயக்கங்களும் கிடையாது. இந்த வெற்றிடத்தில் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மக்களால் மேற்கு நாடுகளையும் வெற்றிகரமாகக் கையாள முடியவில்லை. இந்தியாவையும் வெற்றிகரமாகக் கையாள முடியவில்லை.

குறிப்பாக 2009க்கு முன்னிருந்தே தமிழரசியல் அதிகம் மேற்கு நோக்கியதாகக் காணப்பட்டது. அதன் அடுத்த கட்டத் தொடர்ச்சியாக 2009க்குப் பின் அது ஜெனிவா மைய அரசியலாக மாற்றம் கண்டது. ஆனால் அங்கேயும் கூட ஜெனிவா மைய அரசியலில் தமிழ் மக்களின் விவகாரம் மனித உரிமைகள் பேரவைக்குள்தான் பெட்டி கட்டப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பேரவைக்கு வரையறைகள் உண்டு. அது ஐ.நா. பொதுச்சபையைப் போலவோ, பாதுகாப்பு சபையை போலவோ ஒரு நாட்டின் மீது அழுத்தத்தை பிரயோகிக்கும் கட்டமைப்பு அல்ல.அதனால் தான் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்று தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து ஐநாவுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்பின. கடிதத்தில் பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்றும் கேட்டிருந்தன. ஆனால் கடிதத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான அலுவலகமானது, தமிழ் மக்கள் எதிர்பார்த்த ஒரு பலமான கட்டமைப்பாக அமையவில்லை மட்டுமல்ல, அதுவும் ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்திற்கு உட்பட்ட ஒன்றாகவே உருவாக்கப்பட்டது.

கடந்த 14 ஆண்டு கால ஐநா மைய அரசியலைத் தொகுத்துப் பார்த்தால், தமிழ் மக்கள் அங்கேயும் பலமாக இல்லை. அதாவது மேற்கை மையமாகக் கொண்ட தமிழ் அரசியலிலும் தமிழ் மக்கள் திருப்பகரமான வெற்றிகளைப் பெற்றிருக்கவில்லை. அமெரிக்க கண்டத்தில் அமெரிக்காவும் கனடாவும் இலங்கை அரச பிரதானிகளுக்கு எதிராகவும் தளபதிகளுக்கு எதிராகவும் தடைகளை விதித்திருக்கின்றன. கனடாவில் மாநில அரசாங்கத்திலும் மத்திய அரசாங்கத்திலும் இனப்படுகொலை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவை ஈழத் தமிழர்களுக்கு உற்சாகமூட்டக்கூடிய தொடக்கங்கள். ஆனால் இவையனைத்தும் கனேடிய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைசார் முடிவுகள் அல்ல என்று கனேடிய அமைச்சர் ஒருவர் உத்தியோகபூர்வமாகக் கூறியிருக்கிறார். அதாவது அந்த நகர்வுகளின் விளைவாக, கனேடிய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைப் பகைக்கத் தயாரில்லை. அதாவது கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், தமிழர்களுக்காக கொழும்பைப் பகைக்கும் ஒரு வளர்ச்சி அங்கு ஏற்படவில்லை.

இதுதான் உலகம் முழுவதிலும் உள்ள நிலை. எனவே தொகுத்துப் பார்த்தால் தெளிவாக கிடைக்கும் சித்திரம் என்னவென்றால், மேற்கை மையமாகக் கொண்ட தமிழ் அரசியலானது 2009க்கு முன்னரும் எதிர்பார்த்த வெற்றிகளைப் பெறவில்லை. இரண்டாயிரத்தி ஒன்பதுக்கு பின்னரும் எதிர்பார்த்த பருமனில், எதிர்பார்த்த வேகத்தில், வெற்றிகளைப் பெற முடியவில்லை. இது தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகள், செயல்பாட்டாளர்கள் மத்தியில் தொகுக்கப்பட்ட ஆய்வுகள் அவசியம். 14 ஆவது மே 18ஐ அனுட்டிக்கும்போது, கடந்த 14 ஆண்டுகளாக நாங்கள் ஏன் தொடர்ந்து ஒரு எல்லைக்குமேல் முன்னேற முடியவில்லை என்பதற்கு விடைகளையும் தேடவேண்டும். இல்லையென்றால் மே 18 அனுஷ்டிப்பது என்பது ஒரு சடங்காகச் சுருங்கி வருகிறது என்று பொருள்.



# நமது அடுத்த சந்ததியினருக்கு இன்னுமொரு முள்ளிவாய்க்கால் அவலம் நடந்துவிடக் கூடாது என்ற திடசங்கற்பத்துடன் அதை நினைவு கொள்வோம்

## கனடாவிலிருந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி அழைப்பு

நமது அடுத்த சந்ததியினருக்கு இன்னுமொரு முள்ளிவாய்க்கால் அவலம் நடக்க விடமாட்டோம் என்ற திடசங்கற்பத்துடன் முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவு கொள்வோம். மக்களும் தேசங்களும் மகிழ்வின்போது ஒன்றிணையும் கணங்களைவிட, மனத் துயரின்போது ஒன்றிணையும் கணங்களே மிகவும் கனதியானவை, வலிமையானவை. வரலாற்றுக் கூட்டுநினைவாக, மகிழ்வின் கணங்கள் இருப்பதனைவிட, துயரின் கணங்களே மிகவும் அவலமானவை, ஆழமானவை. எனவே முள்ளிவாய்க்கால் இனவழிப்பில் தம்முயிர் ஈந்தவர்களின் நினைவுடன், தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்து ஓயாது உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.

இவ்வாறு கனடாவிலிருந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி அழைப்பு விடுத்துள்ளார். முள்ளிவாய்க்கால் நினைவு நாள் தொடர்பாக விடுத்துள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழர் வரலாற்றில் முக்கிய கூட்டு நினைவாக அமையும், மே 18 துயர் தினத்தை நினைவு கூர்வதும், அஞ்சலி செலுத்துவதும் ஈழத்தமிழர்களின் கட்டாயக் கடமையாகும். முள்ளிவாய்க்கால் என்பது தமிழின அழிப்பின் ஒரு சாட்சியமாகும். மே 18 2023 முள்ளிவாய்க்கால் படுகொலைகளின் பதினான்காவது ஆண்டு நினைவு நாள். பல்லாயிரக்கணக்கான மக்களை, மாவீரர்களை, தமிழர் தேசங்களை இழந்த துயர்தோய்ந்த நாள். ஈழத்தமிழர்களுக்கு எதிராகச் சிங்களம் புரிந்த இனப் படுகொலையின் இரத்த சாட்சியம் இந்த முள்ளிவாய்க்கால்.

நமது மக்கள் வாழ்வே போராகவும், போரே வாழ்வாகவும் வாழ்பவர்கள். எந்த ஒரு நெருக்கடியிலும் எமது விடுதலை வேட்கை குறையாமல் தமிழீழ மண் மீட்பில் தொடர்ந்து பயணித்தவர்கள். இன அழிப்பின் பின்னரும் எமது இறைமையை மீட்பதற்கு உரிமைக்குரல் எழுப்பி வருபவர்கள். தமிழர் தேசத்தின் விடுதலைக்காக ஆகுதியானவர்களையும், மக்களையும் மனதில் நிறுத்தி உறுதிபூணும் நாளிது. அவர்களின் தியாகத்திற்கான காணிக்கை செலுத்த வேண்டிய பொறுப்பு, நம் அனைவருக்குமுண்டு. அவர்களின் தியாகம் வீணாகாவிடாமல் பாதுகாப்பதற்காக, நம்மால் முடிந்த அனைத்தையும் செய்வதுதான், அவர்களுக்கான உண்மையான அஞ்சலியாகும். அஞ்சலித்தல் என்பது, செயலுக்கான உரம் என்பதை மனதில் நிறுத்த வேண்டிய நாளிது. முள்ளிவாய்க்கால் நினைவுநாளான மே 18 யை தமிழீழ தேசிய துக்க நாளாக அனுஷ்டிப்பது, எமது தமிழீழ தேசிய உயிர்ப்புணர்வை வலுப்படுத்தும் ஒரு நிகழ்வாக அமைகிறது.

தாயகத்தின் ஜனநாயக வழிப் போராட்டங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்கள், சர்வதேச சமூகத்தின் கரிசனைகள் - எனப், பல்வேறு விடயங்கள் இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்றிருக்கின்றன. எனினும் நாம், நமது மக்களுக்காக எதிர்பார்த்த சுதந்திர வாழ்வை நெருங்குவதற்கான நம்பிக்கை இப்போதும் மங்கலாகவே இருக்கின்றது. எமது மக்களின் வாழ்வை சூழ்ந்து அச்சுறுத்தும் சிங்கள-இருள் சிறிதும் அகலவில்லை.

தமிழர் தேசித்தின் கிழக்கு மாகாணத்தை திட்டமிட்டு ஆக்கிரமித்து, எமது மக்களை அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் சுற்றிவளைத்துக் கொண்ட சிங்களம், தற்போது வடக்கு மாகாணத்தினை இலக்கு வைத்து வேகமாக நகர்கின்றது. தினமும் புத்தர் சிலைகளும், விகாரைகளுமே செய்திகளாகின்றன. மிகவும் திட்டமிட்ட வகையில், தமிழர் தேசத்தை பௌத்த மயமாக்கும் செயற்பாடுகள், எமது மக்களின் எதிர்ப்பையும் மீறி, தொடர்ந்தும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. இலங்கை ஒரு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குப்பட்டிருக்கின்றது. இதன் விளைவாக தென்னிலங்கை அரசியல் சீர்குலைந்திருக்கின்றது. சிங்கள அரசிற்கு எதிராக சிங்கள மக்களே கிளர்தெழுந்தனர்.

சிங்கள - பௌத்த தலைவனாக தன்னை பிரகடணம் செய்திருந்த, 69 லட்சம் சிங்கள மக்களின் ஆதரவுடன் அதிகாரத்தை கைப்பற்றியிருந்த, கோட்டபாய ராஜபக்ச சிங்கள கிளர்சியின் மூலம், வெளியேற்றப்பட்டிருக்கின்றார் - இவ்வாறான நிகழ்வுகள், இலங்கைத் தீவு முன்னோக்கி பயணிக்கலாம் என்னும் நம்பிக்கை நம்மில் பலரிடம் ஏற்படுத்தியிருந்தது. "அரகலய" என்னும் சிங்கள மக்கள் கிளர்ச்சியினால், சிங்கள - பௌத்த தேசியவாதம் வீழ்ச்சியடைந்துவிட்டதாகவும், சிங்களத் தேசியவாதம் அதன் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டதாகவும் கூட, உரையாடல்கள் இடம்பெற்றன. ஆனால் சிங்கள பெருந்தேசியவாத தமிழர்-விரோத ஒடுக்குமுறைப் பண்பில், சிறிய மாற்றம் கூட ஏற்படவில்லை.

மறுபுறம் இது நமது தேசத்திற்கு ஒரு உண்மையை வெளிப்படுத்தியிருக்கின்றது. அதாவது, சிங்கள - பெருந்தேசியவாத கட்டமைப்பானது, யார் ஜனாதிபதியாக வருகின்றார், எந்தக் கட்சி ஆட்சியிலிருக்கின்றது என்பவற்றுடன் தொடர்புபட்டதல்ல, மாறாக அது ஒரு சிங்கள சிந்தனை முறையாகவே வளர்சியடைந்திருக்கின்றது - அந்த சிந்தனை முறையின் நீட்சியாகவே சிங்கள நிர்வாகம் அமைந்திருக்கின்றது.




இந்த பின்னணியில், சிங்கள அரசியல்கட்டமைப்பு - சிங்கள பௌத்த மதபீடங்கள் - சிங்கள அதிகார வர்க்கம் அனைத்தும் இணைந்ததே சிங்கள ஆளும் வர்க்கமாகும். தற்போது இது தெட்டத் தெளிவாகியிருக்கின்றது. ஏனெனில், இலங்கைத் தீவில் ஏற்பட்ட வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியானது, சாதகமான மாற்றங்களை ஏற்படுத்தும், அதன் மூலம் இலங்கைத் தீவு முன்னோக்கி பயணிக்குமென்னும் நம்பிக்கை நம்மவர்கள் மத்தியில் கூட துளிர்விட்டது. ஆனால் அனைத்தும் தற்போது கானல் நீராகியிருக்கின்றது.

இந்த இடத்திலிருந்தே நமக்கான அரசியல் பொறிமுறை தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு, 14 வருடங்களுக்கு பின்னர் கூட, நமக்கானதொரு பொறிமுறை தொடர்பில் நாம் சிந்திக்க முற்படுகின்றோம் என்றால், அது நமது பலவீனத்திற்கான சான்றாகும். ஏனெனில் ஒரு ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் சமூகத்திற்கான அரசியல் பண்பானது, நம்மிடம் மிகவும் பலவீனமாகவே இருக்கின்றது. நமக்குள் தொடர்ந்தும், ஒற்றுமையை தேடுபவர்களாகவே, நாம் இருக்கின்றோம். இப்போம் ஐக்கியமாக செயற்பட வேண்டுமென்னும் குரல்களை அவ்வப்போது நமக்குள் காண முடிகின்றது. சிங்கள - பெருந்தேசியவாதத்தின் ஒடுக்குமுறையை, முக்கால் நூற்றாண்டுகாலமாக, எதிர்கொண்டுவரும் ஒரு மக்கள் கூட்டத்திற்கான நம்பிக்கையே, நாம் ஒரணியாக இருப்பதுதான். அது ஒன்றே நமது பலமாகும். ஆனால் நாமோ - நமக்குள் கட்சிகளாக, அமைப்புக்களாக, நபர்களாக பிரிந்து கிடக்கின்றோம். இப்போது மதரீதியாகவும் நமக்குள் நாமே பிளவடைந்து செல்கின்றோம்.

நமக்கான அரசியல் நகர்வுகளில், நாம் பல உபாயங்களை கைக்கொள்ளலாம். அதில் தவறில்லை. ஆனால் அந்த உபாயங்கள், நாம் ஒரு மக்கள் கூட்டம் என்பதை சிதைத்தழிப்பதாக இருக்கக் கூடாது. ஏனெனில் சிங்கள - பெருந்தேசியவாதமானது, தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்ட போது, சாதி, மதம், வர்க்கம், பிரதேசம் என்னுமடிப்படையில் ஒடுக்குமுறையை பிரயோகிக்கவில்லை. தமிழர் என்னும் அடையாளத்தின் மீதே கைவைத்தது. அந்த அடிப்படையிலேயே இப்போதும் அதன் ஆக்கிரமிப்பை அரங்கேற்றிவருகின்றது.

எந்த அடையாளத்தின் மீது ஒடுக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றதோ, அந்த அடையாளமே நமது ஒரேயொரு பலமாகும். தமிழர் தேசத்தின் அரசியல் கட்சிகளும், புத்திஜீவிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் இதனை உணர்ந்தவர்களாக, தங்களின் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இது தாயகத்திற்கும் புலம்பெயர் சமூகத்திற்குமானது. புலம்பெயர் சமூகத்தை பொறுத்தவரையில் நாம் நமக்குள் பிளவடைவதற்கும், நமக்குள் முரண்படுவதற்கும் எந்தவொரு அவசியமுமில்லை. தாயக மக்கள் செயற்படுவதற்கு பல தடைகளுண்டு. சிங்கள மேலாதிக்க வல்லூறுகளை சமாளித்துக் கொண்டுதான், அவர்கள் செயலாற்ற வேண்டியிருக்கின்றது. ஆனால் நாமோ, மேற்குலக தாராளவாத ஜனநாயக சூழலுக்குள் வாழ்கின்றோம். சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றோம். எனவே புலம்பெயர் உறவு-களே! தாயக மக்களை பாதுகாக்கும் வரலாற்று பணியை நாம் சுமந்து நிற்கின்றோம் என்பதை, இந்த நாளில் மனிதிலிருத்துவோம்.

தாயக, புலம்பெயர் உறவுகளே - பிராந்திய, உலக அதிகார சக்திகளின் நகர்வுகளை துல்லியமாக கணித்து, சூழ்நிலை கருதியும் - அதே வேளை, நமது இறுதி இலக்கை மறந்துவிடாமலும் செயலாற்ற வேண்டுமாயின், நாம் ஒன்றாதல் வேண்டும். நாம் நமக்குள் பிளவடைந்தால், நம்மால் ஒரு போதுமே, நமக்கான அரசியல் பொறிமுறையொன்றை உருவாக்க முடியாது. உலக அரசியல் சாதா மாறிக் கொண்டிருக்கின்றது. அந்த மாற்றங்கள் நமது அசியலில் எதிர்பாராத தாக்கங்களையும் ஏற்படுத்தலாம். ஆனால் நாம் ஒன்றாக இருந்தால், எவ்வாறான சவால்களையும் சமாளிப்பதற்கான உத்வேகத்தை நம்மால் அடைய முடியும். உலகில் மீண்டெழுந்த அனைத்து மக்கள் கூட்டங்களும், சூழ்நிலைகளையும், வாய்ப்புக்களையும் சரியாக பயன்படுத்திக் கொண்டதானாலேயே, வெற்றிபெற்றன.

உறவுகளே, நமது தேசத்திற்காக ஆகுதியானவர்களை மனதில் நிறுத்தும் இந்த நாளில் - நமக்குள், நாமே ஏற்படுத்திக்கொண்ட, பிளவுகளை களையும் சிந்தனைகளுக்கு, உரமூட்டுவதற்காக உறுதிபூணுவோம். நமது உறுதிக்கு சிரம் தாழ்த்தி, நம் தேசப் பணியை முன்னெடுப்போம். ஆகுதியானவர்களை அஞ்சலித்தல் என்பது வெறும் வார்த்தையல்ல. அது மகத்தான செயலுக்கான உரமாகும்.

நமது அடுத்த சந்ததியினருக்கு இன்னுமொரு முள்ளிவாய்க்கால் அவலம் நடக்க விடமாட்டோம் என்ற திடசங்கற்பத்துடன் முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவு கொள்வோம். மக்களும் தேசங்களும் மகிழ்வின்போது ஒன்றிணையும் கணங்களைவிட, மனத் துயரின்போது ஒன்றிணையும் கணங்களே மிகவும் கனதியானவை, வலிமையானவை. வரலாற்றுக் கூட்டுநினைவாக, மகிழ்வின் கணங்கள் இருப்பதனைவிட, துயரின் கணங்களே மிகவும் அவலமானவை, ஆழமானவை. எனவே முள்ளிவாய்க்கால் இனவழிப்பில் தம்முயிர் ஈந்தவர்களின் நினைவுடன், தமிழீழ தேசத்தின் விடுதலைக்காகத் தொடர்ந்து ஓயாது உழைப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.

***தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்***

**நிமால் விநாயகமூர்த்தி**
**நாடு கடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்.**

**மே 18, 2023.**

கனடிய செய்திகள்
Canadian News

## Canada's Main Opposition and Conservative Leader Pierre Poilievre Makes Statement on Tamil Genocide Remembrance Day

# கனடிய பாராளுமன்றனத்தின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் Pierre Poilievre தமிழினப் படுகொலை நினைவு தினம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கை

LEADER OF THE OPPOSITION — CHEF DE L'OPPOSITION

**கனடாவின் பழைமைவாதக் கட்சியின் (Conservative Party of Canada ) தலைவர் கௌரவ Pierre Poilievre அவர்கள்,** தமிழின அழிப்பு **நினைவு தினத்தையொட்டி வெளியிட்ட அறிக்கை.**

மே 18, 2023

ஒட்டாவா, ON - கனடாவின் பழைமைவாதக் கட்சியினதும் (Conservative Party of Canada ) உத்தியோகபூர்வ எதிர்க்கட்சியினதும், தலைவரான கௌரவ Pierre Poilievre தமிழின அழிப்பு நினைவு தினத்தன்று பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:

"இலங்கையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழ் மக்களும், ஏனைய கலாச்சாரக் குழுக்களும் தமது நாடு போரினால் பாதிக்கப்பட்டதால் கற்பனைக்கெட்டாத துன்பங்களை அனுபவித்தனர். பல தசாப்தகால வன்முறை மற்றும் அழிவுகள், எண்ணற்ற இலங்கையர்களின் மரணத்திற்கு வழிவகுத்தது. சமாதானத்துடனும் சுதந்திரத்துடனும் வாழ்வதைத் தவிர வேறு எதையும் விரும்பாத பல்லாயிரக்கணக்கான மக்கள், யுத்தத்தின் இறுதி மாதங்களில் கொல்லப்பட்டனர். பல வருட குழப்பத்தின் பின்னர், 2009 ஆம் ஆண்டில், முள்ளிவாய்க்கால் கிராமத்தில் போர் முடிவுக்கு வந்தது.

"தமிழின அழிப்பு நினைவு நாளில், இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதி நாட்களில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழர்களை நாம் மரியாதையுடன் நினைவுகூருகிறோம். இலங்கையின் வரலாற்றில், இந்த இருண்ட அத்தியாயத்தின் போது கற்பனை செய்ய முடியாத கொடூரங்கள், இனப்படுகொலைகள் மற்றும் போர்க்குற்றங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட, பெயர் அறியப்பட்டவர்களையும் அறியப்படாதவர்களையும் நாங்கள் நினைவுகூருகிறோம். நாம் ஒருமித்து, கடந்த காலத்தின் காயத்தை எதிர்காலத்திற்கான நம்பிக்கையாக மாற்றமுடியும்.

"ராஜபக்ச ஆட்சிக்கு எதிர்த்து நிற்க உலக நாடுகளை வழிநடத்திய முந்நாள் பழைமைவாத அரசாங்கத்தின் அடிச்சுவடுகளை கனடா பின்பற்ற வேண்டும். ராஜபக்ச ஆட்சியின் இனப்படுகொலை மற்றும் இழிவான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, 2013 ஆம் ஆண்டு கனடா பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்தது. இதன் காரணமாக ஏனைய நாடுகளும் இதே வழியைப் பின்பற்ற நிர்ப்பந்திக்கப்பட்டு, இலங்கை அரசைத் தனிமைப்படுத்தி, உலகமே தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக நின்றது.

"இன்று, பழமைவாத கட்சியினர் இந்த இனப்படுகொலையை செய்தவர்களுக்கு, பொறுப்புக்கூறுவதற்கான தங்கள் அழைப்பைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள். குறிப்பாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை கைது செய்ய வேண்டும். அவர் தனது குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றிற்குப் பதிலளிக்கவேண்டும், என்ற கோரிக்கையில், இலங்கை மனித உரிமை ஆர்வலர்களுடன் நாங்களும் இணைந்து கொள்கிறோம். பிரதமர் என்ற வகையில், தமிழ் மக்களுக்காக நான் எழுந்து நின்று, இலங்கையின் செழிப்புக்கு இடையூறாக இருப்பவர்களை அகற்றவும், Magnitsky தடைகளை விதிக்கவும் பாடுபடுவேன்.

"தமிழின அழிப்பு நினைவு நாளில், பழமைவாத கட்சியினர் இலங்கையில் உள்ள அனைத்து தனிநபர்களுக்குமான மனித உரிமைகள், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றனர். தமிழர்களுக்கும், மற்றும்அனைத்து இலங்கையர்களுக்கும் மனித உரிமைகளுடன் சமத்துவத்தையும் கொண்டு வரப் பாடுபடும் அனைவருக்கும் நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம். கடந்த காலத்தின் காயத்தை எதிர்காலத்திற்கான நம்பிக்கையாக மாற்றுவதற்கு அவசியமாகத் தேவையான வேலையை நாங்கள் ஒருமித்துச் செய்வோம்.

## MP Gary Anandasangaree's statement on Tamil Genocide Remembrance Day | May 18, 2023

# தமிழ் பேசும் கனடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தமிழினப் படுகொலை நினைவாக நேற்று கனடிய பாராளுமன்றத்தில் உரையாற்றினார்

"Mr. Speaker,

I rise today to mark Tamil Genocide Remembrance Day. Tamils around the world stand in solidarity with the victims, survivors, and their families in the North and East of Sri Lanka to ensure that we find the truth, hold those responsible for atrocities accountable, and attain justice and peace.

This past January, our government imposed sanctions on four Sri Lankan officials, including Mahinda Rajapaksa and Gotabaya Rajapaksa—both credibly accused of war crimes, crimes against humanity, and genocide. These past presidents of Sri Lanka have blood on their hands and cannot evade justice. As part of our Indo-Pacific Strategy, Canada reaffirmed our resolve to ensure accountability on the island. Canada will continue to demand accountability by working with multi-lateral partners, including the United Nations Human Rights Council.

Mr. Speaker, as we mark this day, let us also ensure that the Tamils' inherent right to self-determination in their homeland is entrenched and they attain peace and security.

Thank you Mr. Speaker."



Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only


சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

# "யுகமுடிவும் பின்னரும்" நூலின் சிங்களப் பதிப்புக்கு யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் அவர்களால் எழுதப்பெற்ற அணிந்துரை




13 ஆண்டுகளின் முன் தனது மக்களில் ஒரு பகுதியினரைத் தோற்கடித்ததை தெருக்களில் பால்சோறு பொங்கிக் கொண்டாடிய அதே நாடு, ஐஎம்எ்.ப் கடன் கொடுத்தபோது பட்டாசு கொளுத்திக் கொண்டாடியது. ஐ.எம்.எப் கடனும் ஒரு பொறிதான். பொறிக்குட் சிக்குவதை கொண்டாடும் ஒரு நாடு? 13 ஆண்டுகளுக்கு முன் வன்னி கிழக்கில் பாதுகாப்பு வலையம் என்று கூறி மரணப் பொறிகளை உருவாக்கிய ஒரு நாடு, இப்பொழுது பேரரசுகளின் கடன் பொறிகளுக்குட் சிக்கிவிட்டது. அது இப்பொழுது பேரரசுகள் பங்கிடும் அப்பம் ஒன்றாக மாறிவிட்டது. இப்பொழுது போரில் தோற்றவர்களுக்குமில்லை வென்றவர்களுக்குமில்லை.

ஊழிக்காலத்தில் அல்லது ஒரு யுகமுடிவில் ஒன்றில் பதுங்கு குழியை அல்லது பிணக்குழியை அல்லது மலக்குழியை வெட்டிக் கொண்டிருந்த மக்கள் எதைச் சமைத்தார்கள்? எதைச் சாப்பிட்டார்கள்? எதைக் குடித்தார்கள்? அல்லது சாப்பிடவும் குடிக்கவும் அவர்களுக்கு நேரம் இருந்ததா? அல்லது சாப்பிடவும் குடிக்கவும் அவர்களுக்கு பசி தாகம் இருந்ததா?

உணவு ஓர் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட போர்க்களம் அதுவென்று தமிழ் சிவில் சமூக அமையம் தனது அறிக்கை ஒன்றில் கூறியது. அந்நாட்களில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சமைக்க வழியில்லாதவர்களுக்கு கஞ்சி வழங்கியது. கஞ்சித் தொட்டில்கள் ஆங்காங்கே காணப்பட்டன. உணவு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு யுத்தத்தை நினைவுகூர உணவையே ஒரு நினைவுப் பொருளாக உபயோகிக்கலாம் என்று கூறிய தமிழ் சிவில் சமூக அமையம், முள்ளிவாய்க்கால் கஞ்சியை ஒரு நினைவுப் பொருளாக அறிமுகப்படுத்தியது. இறுதிக்கட்டப்போரில் கஞ்சி மட்டுமல்ல, வாய்ப்பன் இருந்தது, பொரித்த ரொட்டி இருந்தது, பெயர் தெரியாத இலைகள் இருந்தன.

அது ஒரு யுக முடிவு. அதன்பின் எழுதிய கவிதைகளில் ஒரு பகுதியை தொகுத்து 2014 இல் எழுநா வெளியீடாக யுகபுராணம் என்ற பெயரில் வெளியிட்டேன். ஏனைய கவிதைகளை பிறகு ஒரு காலம் செதுக்கி எழுத வேண்டும் என்று எனக்குள்ளேயே ஊறவிட்டேன். ஒருழிக் காலம் என்னுள் கிடந்து ஊறியது. கிட்டத்தட்ட10 ஆண்டுகளின் பின் பெருந்தொற்று நோய் உலகத்தைக் கவ்விப் பிடித்த போது, பத்து ஆண்டுகளாக ஊறிக் கிடந்தவற்றை மீளச் செதுக்கத் தேவையான மனோ நிலையும் கால அவகாசமும் கிடைத்தன.

ஒரு யுக முடிவும் பெருந் தொற்று நோயும் ஒன்றல்ல. இறுதிக்கட்டப் போரில் உணவு இருக்கவில்லை. உயிர்ப்பாதுகாப்பு இருக்கவில்லை. ஆனால் பெருந்தொற்று நோய்க்காலத்தில் உணவு கிடைத்தது. ஒரு வைரசுக்கு பயந்து சமூகம் வீடுகளுக்குள் முடங்கியது. இறுதிக்கட்டப் போர் எனப்படுவது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமான அச்சுறுத்தல். ஆனால் பெருந்தொற்று நோய் உலகம் முழுவதுமான அச்சுறுத்தல். எனினும், இரண்டுமே வாழ்வின் நிச்சயமின்மைகளை, மனிதனின் இயலாமைகளை உணர்த்திய காலகட்டங்கள். அதனால் பத்தாண்டுகளாக கிடந்து ஊறிய கவிதைகளை எழுதி முடித்தேன்.

ஒரு சிறிய மக்கள் கூட்டத்தின் அழிவின் பின் தோன்றிய கவிதைகளும் பரிசோதனைகளும், முழு மனித குலத்துக்குமான அழிவுகாலம் ஒன்றில் எழுதி முடிக்கப்பட்டன. இத்தொகுப்பில் இறுதிக்கட்டப் போரின் பின்னரான கவிதைகளும் ஒரு நூற்றாண்டின் பின் உலகைத் தாக்கிய பெருந்தொற்று நோய் பற்றிய கவிதைகள் சிலவும் உண்டு. பெருந்தொற்று நோய்க்குப் பின்னரான கவிதைகளும் உண்டு. 2009 இலிருந்து தொடர்ச்சியாக வந்த ஆண்டுகளில் எழுதப்பட்டவை இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது இத்தொகுப்பு வெளிவருமிக் காலக்கடத்தில், நாடு மேலும் ஒரு போராட்டத்தைத் தின்று செமித்துவிட்டு ஏவறை விட்டுக்கொண்டிருக்கிறது. பெருந்தொற்று நோயானது போரும் வைரசும் ஒன்று அல்ல என்பதை நிரூபித்தது. பொருளாதார நெருக்கடியானது யுத்த வெற்றியைச் சாப்பிட முடியாது என்பதை நிரூபித்தது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக வந்த தன்னெழுச்சிப் போராட்டம் யுத்த வெற்றி நாயகர்களைத் தற்காலிகமாகத் தோற்கடித்தது.

எந்தக் குடும்பம் போரை வென்றதற்காக சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டதோ, அதே குடும்பம் நாட்டின் கருவூலத்தை திருடிவிட்டது என்று அதே மக்களால் ஓடஓடத் துரத்தப்பட்டது. யுத்த வெற்றி நாயகர்கள் தாம் வென்று கொடுத்த நாட்டிலேயே தனது சொந்த மக்களிடமிருந்து தப்புவதற்காக படை முகாம்களில் ஒழியவேண்டி வந்தது.

2009 ஆம் ஆண்டு வன்னி கிழக்கின் அழுக்கான கடற்கரையில் உலகின் மூத்த நாகரிகம் ஒன்றின் வழித்தோன்றல்கள் கஞ்சிக் கொட்டில்களின் முன்னே வரிசையாக நின்றார்கள். சரியாக 12 ஆண்டுகள் கழித்து முழு நாடுமே எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமாக நாட்கணக்காக வரிசையில் நின்றது. உலகை நோக்கிக் கையேந்தி நின்றது. எந்தக் காலிமுகத்திடலில் யுத்தவெற்றி பீரங்கிகள் முழங்கிக் கொண்டாடப்பட்டதோ, அதே காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி சமைக்கப்பட்டது.

13 ஆண்டுகளின் முன் தனது மக்களில் ஒரு பகுதியினரைத் தோற்கடித்ததை தெருக்களில் பால்சோறு பொங்கிக் கொண்டாடிய அதே நாடு, ஐஎம்எ்.ப் கடன் கொடுத்தபோது பட்டாசு கொளுத்திக் கொண்டாடியது. ஐ.எம்.எப் கடனும் ஒரு பொறிதான்.பொறிக்குட் சிக்குவதை கொண்டாடும் ஒரு நாடு? 13 ஆண்டுகளுக்கு முன் வன்னி கிழக்கில் பாதுகாப்பு வலையம் என்று கூறி மரணப் பொறிகளை உருவாக்கிய ஒரு நாடு, இப்பொழுது பேரரசுகளின் கடன் பொறிகளுக்குட் சிக்கிவிட்டது. அது இப்பொழுது பேரரசுகள் பங்கிடும் அப்பம் ஒன்றாக மாறிவிட்டது. இப்பொழுது போரில் தோற்றவர்களுக்குமில்லை வென்றவர்களுக்குமில்லை.

**14.04.2013, யாழ்ப்பாணம்.**

# ஈழத்தில் பதிகொள் முருகன்
## (இன்னிசை வெண்பா)

---

*மாவை முருகன் மலரடி சென்றுமே!*
*தேவை எதுவெனத் தேம்பி அழுதிடக்*
*கோவையாய் வந்த கொடுநோய் முழுவதும்*
*ஆவிபோல் நீங்கி விடும்.*

*நல்லூர் நகரிலே நல்லதோர் காவலாய்*
*செல்வச் செழிப்புடன் சேமம் புரிகிற*
*வல்லமை பெற்ற விநாயகன் தம்பியே!*
*பொல்லாப் பிழைகள் பொறு.*


*சன்னிதிக் கந்தனே சன்னத வேலனே!*
*அன்னம் வழங்கி அடியார் பசிதீர்க்கும்*
*பார்வதி மைந்தனே பாவம் அகற்றியே!*
*சோர்விலா வாழ்வு வழங்கு.*

*கதிர்காமக் கந்தனே காவடிப் பக்தா*
*விதியின் வசத்தால் வினைகள் புரிந்தோர்*
*மதியைத் திருத்தி மறுவாழ்வு நல்கி*
*அதிபனாய் வாழ அருள்.*

சேமம்---நல்வாழ்வு   அதிபனாய்---தலைவனாய்

---

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453




# கஞ்சி

*(வைகாசி 18இன் இன்னுமோர் அடையாளம்)*

***புலம் பெயர்ந்த மகன் கேட்டான்***
***'அப்பா ! இன்று ஏன் இது?' என்று - வந்த***
***நிலை மறவாத் தந்தை சொன்னார் - 'இது***
***அழிக்கப்பட்ட எம் பாதி வரலாற்றின்***
***வலிமிகுந்த வடுவின் குறியீட்டில் ஒன்று' என்று***

***அப்பாவின் மகன் விடவில்லை அவன்***
***இப்பவே விளக்கம் வேணும் என்று நிற்க***
***முப்பது வருட வரலாற்றுப் போர்***
***எப்படி முடிந்தது என்றும் கூற***

***இப்படித்தான் ஆரம்பித்தார் தந்தை***

***'அது***
***வல்லரசுகள் பல கைகோர்த்து ஒன்றாக நின்ற இடம்***
***எல்லையில்லா மெய்கள் பல சிதைந்தழிந்த அவல***
***இடம் - முள்ளிவாய்க்கால்!***

***இரண்டாயிரத்து ஒன்பது வைகாசி பதினைந்து***
***இருண்ட மேகம் ஒன்று - பெரும்***
***கரும்புகையைச் சுமந்து கொண்டு***
***இருள் நீங்க விடாக்குண்டு மழையால்***

***பெரும் அவலத்தை தந்திடவே - அங்கிங்காய்***
***மருண்டு ஓடிய மக்கள் எல்லாம்***
***உருண்டும் புரண்டும் ஓடியும் ஒளிந்தும் - இறுதியில்***
***எதுவும் பயனின்றி பதினெட்டில் அழிந்து போயினர்***

***கொத்துக் கொத்தாய் எத்தனை பேர்***
***ரத்தமும் சதையும் மிச்சமாய் மடிந்தனர் - அன்று***
***மடிந்தவர் மடிய இருந்தவர் கூட***
***ஒடிந்தவர் ஆனார் உறுப்புகளோடு மனங்களும்***
***தான் - அன்று***

***கொழுத்தும் வெய்யிலில் கொப்பளிக்கும் காலோடு***
***கிடைக்கும் கஞ்சிக்காய் நீள்வரிசையில் நின்றவர்***
***பொசிக்கிடும் குண்டுகள் பரந்து விழவே - பலர்***
***பசியாறும் முன்பே பிணமாகிப் போயினர்***

***ருசியேதும் இல்லா அக்கஞ்சிதான் அன்று***
***பசித்தவர் வயிற்றின் சுருக்கினை எடுத்தது - அப்போ***
***ஒரு வேளையேனும் வயிறாற உதவிய -***
***அக்கஞ்சியை***
***முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் நினைத்துக்***
***கொள்கிறோம் நினைத்துக்கொள்வோம்!'***

***என்றே தந்தையும் கூறிமுடித்தார்***
***இன்றில் இருந்து தனையனும் தொடருவான்***
***நாங்களும் தொடருவோம்!...***

***-- உமா மோகன் --***

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 14)

- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

## ஐயோ பாவம் அரகலய...பெற்றதும், கற்றதும், இழந்ததும்




**கொ**லைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து - குறள் எண் 551 - அரசியல் குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு, முறையில்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசன் கொலைத் தொழிலைக் கொண்டவரை விடக் கொடியவன்”

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியை சற்றே திரும்பிப் பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

மே 9 இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்கள் வெறுக்கும் ஒரு கரிநாள்.


கொடுங்கோல் அரசுக்கு எதிராக இளைஞர்களால் நன்கு கட்டமைக்கப்பட்ட வகையில் அமைதி வழியில் முன்னெடுக்கபட்ட அரசகலய போராட்டம் - மக்கள் எதிர்நோக்கிய பொருள் தட்டுபாடு நாள்கணக்கில் நீண்ட கியு வரிசைகள் போன்ற நாளாந்த வாழ்வாதராப் பிரச்சினைகள் காரணமாக அவர்களை வீதிக்குக் கொண்டுவந்து அரகலயவுக்கு ஆதரவு வழங்கத் தூண்டியது.

“கோட்டா கோ கம” என்றொரு இடத்தை உருவாக்கி நெடுநாள் போராட்டத்திற்கு வேண்டிய உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளில் பின்பற்றப்படும் பிரதான போராட்ட வடிவங்களை அறிமுகப்படுத்தி இலங்கையில் வாழும் எல்லா மக்கள் பிரிவினரையும் உள்ளடக்கிய அநியாய அரசுக்கு எதிரான இலங்கைப் போராட்டமாக அதனை சித்தரிக்க முனைந்து அதில் ஓரளவு வெற்றியையும் கண்டனர்.

அவ்வப்போது இலங்கை பாதுகாப்புத் தரப்பினரோடு முறுகல் நிலை ஏற்பட்ட போதிலும் அவை ஒரு கட்டத்திற்கு தீவிரமாகச் செல்லாமைக்கு முக்கிய காரணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆதரவு ஒரு கட்டம் வரையில் அவர்களுக்கு இருந்தமையும் இலங்கையில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களும் மேற்குலக ஊடகங்களும் இருபத்து நான்கு மணிநேரமும் கண்கொத்திப் பாம்பாக நிலைமையை அவதானித்துக் கொண்டிருந்தமையுமாகும்.

ஆனால், இதே மாதிரி ஒரு போராட்டம் வடக்கிலோ கிழக்கிலோ முன்னெடுக்கப் பட்டிருக்குமாயின் இரத்தக்களரியில் அது முடிந்திருக்கும் அல்லது அப்படி ஒன்று நடக்க முன்பே விரட்டியிருப்பார்கள்.

எல்லாம் நல்லாத்தான் போய்க்கொண்டிருந்தது. அரச ஆதரவு தொண்டரடிப்பொடிகளை வெளிப்பிரசேதங்களிலிருந்து வரவழைத்து அலரி மாளிகையில் நடந்த மந்திராலோசனையின் பின்னே அங்கிருந்து வெளியேறிய குண்டர் கூட்டம் காலி வீதிவழியே அமைக்கப்படிருந்த அரகலய கூடாரங்களை அடித்துச் சிதைத்து பெண்கள் என்றும் பாராமல் அதில் இருந்தவர்களை அடித்து உதைத்து வெறியாட்டம் ஆடிக்கொண்டு காலிமுகத் திடலை நோக்கிச் சென்றது.



அந்த வீதிவழியே CCTV கமராக்கள் வைக்கப்பட்டிருந்ததால் அரகலயகாரர்கள் பதிலடி கொடுக்கவில்லை. வெற்றிக் களிப்படைந்த குண்டர் கூட்டம் காலி வீதியைவிட்டு உள்வீதிகளுடாக திரும்பிச் செல்ல முயன்றபோது தான் அவர்களுக்கு சிறந்த விருந்து காத்திருந்தது. தமிழ் சினிமாப்படங்களில் விரியும் காட்சிகளைப் போல குண்டர்களை பேருந்துகளிலிருந்து இறக்கி அடையாளம் கண்டு வெளு வெளு என்று வெளுத்து பேரை வாவியில் போட்டு நீண்ட நேரம் ஜலக்ரீடை செய்ய வைத்து தண்ணீரில் தவம் செய்து நடுங்கியவர்களுக்கு பிளேன் டீ கொடுத்த காட்சிகளையெல்லாம் காட்சி ஊடககங்கள் ஊதித் தள்ளின.

காலி நோக்கிச் சென்ற வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு அங்கும் பூசை வழிபாடுகள் இடம் பெற்றன. அப்படி ஒரு வாங்கு வாங்குவோம் என்று வந்தவர்கள் ஒரு போதும் நினைக்க வாய்ப்பில்லை. உண்மையில் மிகவும் பொறுமைகாத்த அரகலயகாரர்கள் இவற்றுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும் சண்டித்தனம் காட்டிய கூட்டத்திற்கு சாதாரண பொதுமக்கள் காட்டிய எதிர் வினையே அதுவென்றும் கூறினர். அரகலயகாரர்களுக்கு அடித்த சம்பவமே ஆளும் கட்சியினருக்கு எதிரான வன்முறைகள் வலுப்பெறக் காரணமாக அமைந்தது. அடுத்து வந்த நாட்கள் ஆளும் கட்சி அரசியல் வாதிகள் ஓடி ஒளித்த காட்சிகளாக மாறின. வன்முறைக்கு ஆயுக் கம்மிதான் ஆனால் அந்த குண்டர் கூட்டம் அந்த மொழியைத்தவிர வேறு எந்த மொழியையும் புரிந்து கொண்டிருக்காது என்பது யதார்த்தம்.

மக்கள் ஒரேநாளில் பெரும் எண்ணிக்கையில் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மாளிகையை நோக்கித்திரளாகச் செல்ல கோட்டாபய பின்வாசற் கதவால் பாதுகாப்பாக அழைத்துச் சென்று கப்பலில் ஏறியதாக சொல்லப்பட்டது. கோட்டாபய விரும்பியிருந்தால் மக்களைச் சுடுமாறு உத்தரவிட்டிருக்கலாம். தமிழர்களை கொத்துக்கொத்தாகக் கொன்று குவித்த அவருக்கு தன் மக்கள் தன்னை துரத்தியபோது சுடும் உத்தரவு பிறப்பிக்காமல் விட்டது தனது இனத்தின் மீது கொண்ட பாசமா அல்லது பின் விளைவுகளைப் பற்றி சிந்தித்தபடியினாலா என்று தெரியவில்லை.

ஆனால், அப்படிச் செய்ததன் மூலம் மிகப்பெரிய இரத்தக் களரி தவிர்க்கப்பட்டது என்று கூறலாம். அதனோடு இணைந்ததாக அரசியல் வாதிகளின் இல்லங்கள் இலக்குவைக்கப்பட்டு எரிக்கப்பட்டன. சந்தர்ப்ப வாதிகள் இந்த வன்முறைகளுக்கு காரணம் என்றும் தமக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றும் அரகலயகாரர்கள் மறுத்தார்கள். பாதுகாப்புத் தரப்பு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவே வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. அதற்கு முன்னரே ராஜபக்ஷ குடும்பத்தின் அங்கத்தவர்களும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளும் பாதகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.



சில நாள் இழுபறியின் பின்னர் கோட்டாபய தனது பதிவிவிலகல் கடிதத்தை அனுப்பி வைத்திருந்தார். அரகலய போராட்டம் உச்ச கட்டத்தில் இருக்கும் போதே புதிய பிரதமர் ஒருவரை நியமித்து நிலைமைகளை கட்டுப்படத்த கோட்டாபய முயற்சித்திருந்தார். ஏதிர்க்கட்சித்தலைவருக்கு அதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் மூழ்கும் கப்பலை தோளில் சுமக்க தான் தயாராக இல்லை என்று மறுக்கவே இலங்கையின் ஜனநாயக வரலாற்றில் முதன் முறையாக மக்களால் தேர்தலில் முற்றாக நிராகரிக்கப்பட்டு கட்சிக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் மூலம் ஆசனத்தைப் பயன்படுத்தி பாராளுமன்றத்திற்க வந்த விக்கிரமசிங்க பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். இப்போது கோட்டாபய விலகிச் செல்லவே அடித்தது மேலும் ஒரு பிரைஸ். கோட்டாபயவின் எஞ்சியிருக்கும் பதவிக்காலத்கை நிறைவு செய்யும் வகையில் அவர் ஜனாதிபதியாக நியமிக்கபட்டார். நியமிக்கப்பட்ட மறுகணமே பாதுகாப்புத் தலைமையகத்திற்குப் பறந்த அவர் அரகலய போராட்டக்காரர்களை அடித்து விரட்டி அகற்றுமாறு உத்தரவிட்டார்.

நெடுங்காலம் உத்தரவுக்காகக் காத்திருந்தவர்கள் வள்ளல்களாக மாற வாரி வழங்கி கோட்டா கொ கம போராட்டக்களத்தை முற்றாக அகற்றி விட்டனர். அதன் பின்னர் அரகலயவில் ஈடுபட்டவர்களை தனித்தனியாகக் கவனிக்கும் வேட்டை தொடங்கியது. இன்றும் பலர் வேட்டையாடப்பட்டு வருவதையும் காண முடிகிறது. அரகலயகாரர்களின் நோக்கம் கோட்டாபயவை அகற்றுவது தான் ஆனால் அதன் பின்னர் என்ன நடக்கும்? யார் ஆட்சிக்கு வருவார்கள்? அவ்வாறு ஆட்சிக்கு வரும் நபர் முன்னைய ஆட்சியாளரைவிட நம்பத்தகுந்தவரா? போன்ற புரிதல்களோ திட்டங்களோ அரகலயகாரர்களுக்க இருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு இருந்திருந்தால் விக்கிரமசிங்க பதவிக்கு வந்திருக்க முடியாது. ஒரு மூன்றாவது தரப்பு அரசலய இளைஞர்களை தமது நோக்கங்களுக்காகப் பயன்படுத்திவிட்டு இடைநடுவல் கைவிட்டு விட்டார்களா என்ற சந்தேகம் எழுகிறது.

ஒருபுறம் போராட்டக்களத்தை ஒரு முன்னுதாரணமாகக் கருதுமளவுக்கு வடிவமைத்து நடத்தியவர்கள் திடீரென உடைந்த போகக் காரணமென்ன போன்ற வினாக்கள் தவிர்க்க முடியாத வகையில் எழுகின்றன. இந்த போராட்டத்தின் மூலம் நன்மை பெற்ற ஒரே நபராக விக்கிரமசிங்க விளங்குகிறார். சில மாதங்களுக்க முன்பு அவர் நினைத்தும் பார்த்திராத வகையில் அவர் தேர்தல்கள் மூலம் அடையலாம் எதிர்பார்த்த ஆனால் மக்கள் தொடர்ந்து வேண்டாம் என்று நிராகரித்த அந்தப்பதவி அரகலய போராட்டத்தின் மூலமே அவருக்குக் கிட்டியது.



ஆனால் அதன் பின்னரும் அரகலய தொடர்ந்தால் தனது ஆட்சிக்கு ஆப்பு வரும் என்று அவருக்கு நன்கு தெரியும். ஏனென்றால் போராட்டக்கார்களின் தெரிவு நிச்சயமாக அவர் கிடையாது. மறுபுறம் கோட்டாபய சற்று அசைந்தாலும் மனிதஉரிமை மனிதஉரிமை என்று கதறிய மேற்கு நாடுகளும் அவர்களது ஊடகங்களும் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த உடன் நடத்திய வன்முறைகள் குறித்த மூச்சுக்காட்டவில்லை. இது அவர்கள் கோட்டாவை பதவியிலிருந்து துரத்தி தமக்குச் சார்பான ஒருவரைப் பதவியிலிருத்தும் திட்டத்தை செயற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது. 69 இலட்சம் வாக்காளர்களின் ஆதரவு பெற்ற ஜனாதிபதியை பதவியிலிருந்து துரத்துமளவுக்கு அரகலய போராட்டம் மக்களாதாரவு பெற்ற ஒன்றாக இருந்திருக்கிறது என்பதில் உண்மை இருந்தாலும். அந்த மக்கள் ஆதரவு ஏன் வந்தது என்று சற்று சிந்திப்போமேயானால் இலங்கை மக்கள் ஜனநாயக ரீதியில் இன்னமும் பாலர் வகுப்பிலேயே இருக்கிறார்கள் என்பது புரியும்.

உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, நீண்ட வரிசைகளில் காத்திருப்புகள் போன்ற அன்றாட வாழ்வாதார பிரச்சினைகள் மக்கள் ஆதரவை திரட்ட உதவின. இந்த பற்றாக்குறைகள் தீர்க்கப்பட்டு நிலைமை வழமைக்குத் திரும்பினால் விலைகள் அதிகமாக இருந்த போதிலும் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராட வரமாட்டார்கள் என்பதை கோட்டா கோகம அகற்றப்பட்ட பின்னர் விடுக்கப்பட்ட போராட்ட அழைப்புகளுக்கு மக்கள் செவிசாய்த்து அதிகளவில் திரளாமையிலிருந்து தெரிந்த கொள்ளலாம்.

இது நீண்ட காலம் அரசியலில் இருந்த விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும். எனவே எதிர்காலத்தில் இப்படி ஒன்று நடைபெறாமல் தடுப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் எடுப்பார். பெரியளவில் ஒரு மக்கள் பேரியக்கமாக இலங்கை அரசியலில் காத்திரமான மாற்றங்களைக் கொண்டுவரும் என்று பலரும் கருதிய அரகலய போராட்டம் நீர்த்துப்போய் பழைய பேய்கள் மீண்டும் வலுப்பெற்று ஆட்டம் ஆடுவம் நிலையை இன்று நாம் காண்பதற்கு போராட்டத்திற்கு நீண்டகால இலக்கு இல்லாமையும் தலைமைத்துவக் குறைபாடுகளும் மூன்றாம் தரப்பு நிகழ்ச்சி நிரல்களுக்குள் அது சிக்கிவிட்டமையையும் காரணமாக இருந்ததாகக் கூறலாம்.

மூளையை அடிப்டையாகக் கொண்டல்லாமல் வயிற்றை அடிப்படையாகக் கொண்டு அரசியல் ஆதரவு வழங்கும் மக்கள் கூட்டமும் தோல்விக்கு முக்கிய காரணமாக கருதலாம். ஆக, இந்த அரகலய போராட்டத்தினால் ஊழல்பரியும் அரசியல்வாதிகள் ஏதாவது பாடம் கற்றுக் கொண்டார்களா என்று பார்த்தால் தமது வீடுகள் எரிக்கப்பட்டதனால் இனிமேல் எந்த அரகலய ஏற்படுவதை என்னவிலை கொடுத்தாவது தடுக்க வேண்டும் என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டதாகக் கூறுகிறார்கள். பேரை வாவியில் தள்ளிவிடப்பட்ட ஒருவர் தான் வழமையாகவே பேரை வாவியில் குளிப்பதாகவும் அதனால் அன்றும் அப்படிக்குளியல் நடத்தியதாகவும் கூறுகிறார். உண்மையாக இருக்கலாம். அடிக்கின்ற முடைநாற்றம் அப்படி இருக்கிறது.



ஐயோ பாவம் அரகலய.

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2023

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினைந்தாவது முறையாக நிகழும் மங்களகரமான சோபகிருது வருஷம் சித்திரை மாதம் இருபத்தேழாம் நாள் (ஆங்கிலம்10-05-2023 புதன்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 19ம் நாள் ஆங்கிலம் 02-06-2023 வெள்ளிக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 03-06-2023 சனிக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
பிரதிஷ்டா கிரியாரத்தினம்
சிவஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள்

ஆலய குருமார்:
சிவஸ்ரீ நீலகண்டன் அஹோரசாமி
(தமிழ்நாடு, இந்தியா)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

09-05-2023 செவ்வாய் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 10-05-2023 | புதன் | கொடியேற்ற விழா திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 11-05-2023 | வியாழன் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஜயா-மனோன்மணி குடும்பம் சிவனேசன் சுசீலா குடும்பம் சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 12-05-2023 | வெள்ளி | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 13-05-2023 | சனி | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 14-05-2023 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. கதிர்காமநாதன் குடும்பம் திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 15-05-2023 | திங்கள் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 16-05-2023 | செவ்வாய் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. பகீரதன் துஷ்யந்தா குடும்பம் லக்சி சுப்பர் மார்க்கட் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 17-05-2023 | புதன் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 18-05-2023 | வியாழன் | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூக்ஷிக வாகனம் |
| 10 | 19-05-2023 | வெள்ளி | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 20-05-2023 | சனி | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 21-05-2023 | ஞாயிறு | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன், தனுஷின், அனோயன், நிக்ஷின் குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 22-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 23-05-2023 | செவ்வாய் | திரு பத்மநாதன் குடும்பம் பிரம்ரன் - கனடா | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 24-05-2023 | புதன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் காங்கேசன் துறை | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 25-05-2023 | வியாழன் | திரு. தவராசா சிவசோதி குடும்பம் -அனலைதீவு | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 26-05-2023 | வெள்ளி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 27-05-2023 | சனி | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | நர்த்தன வடிவம் |
| 19 | 28-05-2023 | ஞாயிறு | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 29-05-2023 | திங்கள் | ஓர் அன்பர் | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 30-05-2023 | செவ்வாய் | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 31-05-2023 | புதன் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 01-06-2023 | வியாழன் | திரு.சுப்பையா கிருஷ்ணபகவான் குடும்பம் -கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 02-06-2023 | வெள்ளி | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 03-06-2023 | சனி | தீர்த்தத் திருவிழா - ஓர் அன்பர் | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 04-06-2023 | ஞாயிறு | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 09-06-2023 | வெள்ளி | சிவகுமார் குடும்பம் - இராஜேஸ்வரன் குடும்பம் A1 Florist - Brampton | | மாலை: வைரவர் மடை |
| 28 | 10-06-2023 | சனி | திருவருள் கனகசபை குடும்பம் - அனலைதீவு | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி இரண்டாவது தடவையாக ஆகஸ்ட் மாதம் 10, 11, 12ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 13ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

### திருவிழாக்கால நிகழ்ச்சிகள் நேரகால அட்டவணை

**காலை திருவிழா**
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

**மாலை திருவிழா**
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
குருமூர்த்தி ரெங்கநாதன் - சிவவடிவேல் முனுசாமி
செந்தில்நாதன் ஆனந்தன் - பழனிவேல் நாகராஜன்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - தேவேந்திரன் - ரெங்கராஜன்
மணிகண்டன் மாரிமுத்து - முனிராஜ் முனிரத்தினம்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

## "கனடா இந்து" வழங்கும் துர்க்கேஸ்வர மஹாயாக

# துர்க்கேஸ்வரத்தில்



# 18-6-2023 ஞாயிறு

## துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி ஐந்து தள ராஜகோபுரத்துடன்

றொறன்ரோ, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவானது எதிர்வரும் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. கனடாவில் முதன் முதலாக 48 தின யந்திர பூஜையுடனும் 12 தினம் கிரியைகளுடனும் 12 கால யாகத்துடனும் 48 தின மண்டலாபிஷேகத்துடனும் இந்த மஹாகும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு திருக்கோவில்களில் இருந்து சிவாச்சாரியர்கள் வருகை தருகின்றனர். ஆயிரக்கணக்கான மஹாகும்பபிடேகங்களை உலகெங்கும் நிகழ்த்திய பிள்ளையார்பட்டி டாக்டர். கி.பிச்சைக் குருக்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது

## துர்க்கேஸ்வரத்தில் பக்தர் நிகழ்த்தும்

### தீபஸ்தாபனத்துடன் கூடிய

## தீபலட்சுமி பூஜை 16-6-2023 வெள்ளி

பாலரூபத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பாலாலயத்தில் வீற்றிருக்கும் தெய்வ சக்திகளை, கிரியைகள் மூலமாகவும் மத்திரபூர்வமாகவும் வியாபகமாக்கி, 48 தினங்கள் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பூஜிக்கப்பெற்ற சக்தி வாய்ந்த யந்திரங்களுடன் ஒன்று சேர்த்து, புதிதாக புனருத்தாரணம் செய்த ஆலயத்தினுள் வரவழைக்கும் போது, முதலாவதாக செய்யப்பெறும் தீபஸ்தாபனம் மேன்மைமிக்கது. சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் இணைந்து இவ்வழிபாட்டினைச் செய்யவுள்ளனர். பொதுவாக வரலட்சுமி விரத தினத்தில் பக்தர்கள் திருவிளக்குப் பூஜை செய்வார்கள். ஆனால், தீபஸ்தாபனத்தின் போது, தீபலட்சுமிக்கு பூஜையும் அத்துடன் தீபங்களை புதிய ஆலயத்தில் ஸ்தாபிக்கும் பேறும் கிடைக்கின்றது.




## யந்திரபூஜை ஏப்பிரல் 21ம் திகதி ஆரம்பமாகி நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர், சிக்கல் சிங்கார வேலவர், திருச்சி பூமிநாதர், நெடுங்குடி கைலாசநாதர் போன்ற ஆலயங்களில் வழிபடப்பெற்று குருமார்களின் ஆசிகள் பெறப்பெற்று, கனடா வந்தடைந்த "யந்திரங்களுக்கு" துர்க்கேஸ்வரத்தில் விஷேட குருமார்கள் தினமும் பகலும் இரவும் பூஜைகள் நடாத்தி வருகின்றனர். கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகங்களின் கீழே வைக்கப் பெற்று அருட்சக்தி வழங்கும் சக்திமிகு உலோகத் தகடுகளால் யந்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மிக நேர்த்தியாகவும் பக்திபூர்வமாகவும் நிகழும் யந்திரபூஜையை தரிசித்து பக்தர்கள் அருள்பெற்றுவருகின்றனர்.

# யூன் 7ம் திகதி

## மஹாகும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்

7-6-2023 புதன் கிழமை காலை 8.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தின் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பிக்கின்றன. முக்கிய அம்சமாக ஏழுவகையான ஹோமங்களை நிகழ்த்தவுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 7-6-2023 | காலை | கணபதி ஹோமம் |
| 7-6-2023 | மாலை | மஹாலட்சுமி ஹோமம் |
| 8-6-2023 | காலை | நவக்கிரக ஹோமம் |
| 9-6-2023 | காலை | ஸ்கந்த ஹோமம் |
| 10-6-2023 | காலை | நவதுர்க்கா ஹோமம் |
| 10-6-2023 | மாலை | பிரத்தியங்கராதேவி ஹோமம் |
| 11-6-2023 | மாலை | ஸ்ரீவித்யா ஹோமம் |

ஒவ்வொரு ஹோமமும் ஒவ்வொரு தனிச்சிறப்பு உடையவை. அவற்றின் தரிசனமும் பங்கேற்பும் மகத்துவம் வாய்ந்தவை. அவற்றில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஹோமத்தினையும் பல குருமார்கள் இணைந்து செய்யவுள்ளனர். காலையில் நிகழும் ஹோமங்கள் காலை 8:30 மணிக்கு ஆரம்பமாகும். மாலையில் நிகழும் ஹோமங்கள் மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.

# கனடாவில் நிகழும்

# மஹாகும்பாபிஷேக மஹாவிழாவுக்கான சிறப்பிதழ்

# மஹாகும்பாபிஷேகம்

## காலை 6.00 மணி முதல்

## அம்பாள் தேவஸ்தானம்

## புதிதாய் புனர்நிர்மாணம்

## மஹாகும்பாபிஷேக யாகபூஜை

### யூன் 12ம் திகதி முதல் யூன் 18ம் திகதி வரை

துர்க்கேஸ்வரம் திருக்கோவிலின் மஹாகும்பாபிஷேக யாகபூஜைகள் 12-6-2023 திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு அங்குரார்ப்பணத்துடன் ஆரம்பமாகின்றது. அன்று மாலை முதல் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை காலை வரை காலையும் மாலையுமாக 12 காலங்கள் யாகபூஜை தினமும் நடைபெற உள்ளது. ஒவ்வொரு யாகபூஜையின் போதும் விஷேட திரவ்விய ஹோமத்திலும் நவசக்தி அர்ச்சனையிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று அருள்பெறவுள்ளனர். யாகபூஜைகளின் தரிசனம் மட்டுமன்றி ஹோமப்புகை சுவாசம், மற்றும் பங்கேற்புக்களும் மகத்துவம் வாயந்தவை.

### 18-6-2023 ஞாயிறு

**அதிகாலை 4:00 மணி முதல் காலை 6:00 மணி வரை**

12ம் கால யாக பூஜை, ஸ்பர்சாஹுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத, ஸ்தோத்ர, திருமுறை பாராயணம், யாத்திராதானம், கும்பங்கள் (கடங்கள்) வீதிவலம் முதலியன

**காலை 6:30 மணிக்கு விமான (ஸ்துாபி) கும்பாபிஷேகம்**

**காலை 7:00 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம்**

**காலை 7:28 மணி முதல் காலை 7:40 மணிக்குள்**
**மஹாகணபதி, ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும்**

### மஹாகும்பாபிஷேகம்

தொடர்ந்து தசதர்சனை, யஜமானபிஷேகம், மஹாபிஷேகம் விஷேடபூஜை, தீபாராதனை, அர்ச்சனைகள் முதலியன

**பகல் 12:30 மணிமுதல் அன்னதானம் வழங்கப்படும்**

**மாலை 5:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை**

சாயரட்சை பூஜை, விஷேட இசை நிகழ்ச்சி, வசந்தமண்டப பூஜை, விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்

## மாபெரும் வழிபாடு

## துர்க்கேஸ்வரத்தில் இரண்டு தினங்கள் எண்ணெய்க்காப்பு

### யூன் 16, 17ம் திகதிகளில்

மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கிரியையிலும் பெரும் அர்த்தங்களும், சிறப்புக்களும் உண்டு. அவற்றில், விஷேட மகத்துவம் கொண்ட ஒரு கிரியை "எண்ணெய்க்காப்பு" என்று அழைக்கப்படுகின்ற தைலாப்பியாங்கம். அடியார்கள் கர்ப்பக்கிரகத்தினுள் சென்று தம் கரங்களால் தர்ப்பைப் புல் எடுத்து எண்ணெய்யில் தொட்டு, இறைவனினின் திருவுருவங்களுக்கு சாத்தி வழிபடுதலையே எண்ணெய்க்காப்பு என அழைப்பர். பொதுவாக, சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவோ, இறைஉருவங்களைத் தொடவோ, அபிஷேகிக்கவோ உரிமை உண்டு. ஆயினும், மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கோ அல்லது இறையுருங்களைத் தொடுவதற்கோ எந்தவொரு நாளிலும் கிடைக்காத பாக்கியம் பக்தர்களுக்கு கிடைக்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பம் மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வாகும். இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது புதிய ஆலயம் அமைக்கும்போதோ மட்டும் கிடைக்கும். அன்றைய தினம், பக்தர்கள் தர்ப்பையில் எண்ணெய்யைத் தொட்டு, இறைவனின் கண், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய சகல அங்கங்களும் குளிரும்படி சாத்த வேண்டும்.

பக்தர்களின் வசதி கருதி, துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தில் இரு தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.



உ
சக்திமயம்



# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்
## 23வது ஆண்டு விழாவும் (2023)

**ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் - டொரொன்ரோ**
**3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8**
**e-mail: sakthi1226@gmail.com Tel: 416-293-1226 Fax: 416-293-1215**

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைாத நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது
தங்கையே

அம்பிகை அடியார்க்ளே!

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து திகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவளம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி (ஸ்ரீகனகதுர்க்கா) அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் வைகாசித் திங்கள் 6ம் நாள் (20.05.2023) சனிக்கிழமை ரோகிணி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 8:30 மணிக்குள் துவஜாரோகத்துடன் (கொடியேற்றத்துடன்) ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற அம்பாள் திருவருள் ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மகாபெரியவாள் பரிபூரண அநுக்கிரஹத்துடன் கொடியேற்றம் நடைபெறவுள்ளது.

## பிரம்மோற்சவ விஞ்ஞாபனம் 2023

| | | |
|---|---|---|
| 19.05.2023 வெள்ளி<br>உபயம்<br>திருமதி. சுலோச்சனா கிருஸ்ணமூர்த்தி | காலை | 7:00 விக்னேஸ்வர பூஜை அனுக்ஞை கணபதி ஹோமம் 108 சங்காபிஷேகம் கும்ப பூஜை அங்குரார்ப்பணம் ரக்ஷபந்தனம்<br>9:30 வசந்த மண்டப பூஜை<br>10:00 பூர்வாங்க பூஜை அபிஷேகம் சமஸ்த தேவதா ஆவாஹனம் |
| | மாலை | 5:00 கிரஹ சாந்தி வாஸ்து சாந்தி மிருத்யுசங்கிரணம் |
| 20.05.2023 சனி | | 11:25 துவஜா ரோகணம் (கொடியேற்றம்) நடைபெறும் |

### நிகழ்ச்சி நிரல் மற்றும் பிரம்மோத்ஸவ உபயதாரர்கள்

| | Day & Date | Utsavam / Utsava Vahanam | Morning Maha utsava Sponsors | Evening Maha utsava Sponsors |
|---|---|---|---|---|
| 1 | May 20 - Sat. | சிம்மவாகனம் | திரு. செல்வகுமார், திரு பரராஜசிங்கம் பொன்னுத்துரை குடும்பங்கள் | திரு. R. K. மூர்த்தி குடும்பம் |
| 2 | May 21 - Sun. | ஓங்கார வாகனம் | திரு. சத்யேந்திரன் குடும்பம் | திரு. தியாகராஜன் குடும்பம் |
| 3 | May 22 - Mon. | சூரியபிரபாவக் காட்சி | திரு. கைலாசபிள்ளை குடும்பம் | திரு. திருமதி செந்தூரன் கங்கா குடும்பம் |
| 4 | May 23 - Tue. | சந்திரபிரபாவக் காட்சி | திரு. அனுராக் குடும்பம் | திரு. திருமதி பிருந்தவன் குடும்பம் |
| 5 | May 24 - Wed. | நாகவாகனம் | திரு. சினனத்துரை குடும்பம் | திரு. நாதன் தியாகராஜா குடும்பம்<br>திரு. சுஜி சபாநாதன் குடும்பம் |
| 6 | May 25 - Thu. | மயில்வாகனம் | திரு. வசந்தன் ராஜா ஐயா குடும்பம் | திரு. கணேஸ்வரன் குடும்பம் |
| 7 | May 26 - Fri. | கப்பல் திருவிழா | திரு. திருமதி செந்தூரன் குடும்பம்<br>திரு. திருமதி ராம்குமார் குடும்பம் | திரு. திருமதி மோகன் மதி குடும்பம்<br>திரு. திருமதி கௌரி தவபாலசிங்கம் |
| 8 | May 27 - Sat. | அன்னவாகனம் | திரு. தி திருக்கேஸ்வரன் குடும்பம் (ரஞ்சனி சட்ட அலுவலகம்) | திரு. லோகேந்திரலிங்கம் குடும்பம் |
| 9 | May 28 - Sun | மஞ்சத் திருவிழா | திரு. தில்லையீசன் குடும்பம் | திரு திருமதி சொரூபா குகநாதன்<br>திரு திருமதி கார்த்திகா அன்று<br>திரு திருமதிவைதிகா அர்ஜீன்<br>செல்வி துவரரகா குகநாதன் |
| 10 | May 29 - Mon. | கஜ(யானை)வாகனம் | திரு. திருமதி சிவசோதிநாதன் குடும்பம் | திரு. கமலநாதன் குடும்பம் |
| 11 | May 30 - Tue. | சிவலிங்க வழிபாடு கைலாச வாகனம் | திரு. திருமதி சிவலிங்கம் குடும்பம் | திரு. தவபுத்திரன்,<br>திரு. சிறீஸ்கந்தராஜா குடும்பங்கள் |
| 12 | May 31 - Wed. | பூந்தண்டிகை | திரு. லிங்கேஸ்வரன் குடும்பம் | திரு. முத்துக்குமாரு<br>திரு. ஜெகதீஸ்வரன்,<br>திரு. சந்திரகுமார்<br>திரு. லோகேஸ்வரன் குடும்பங்கள் |
| 13 | June 01 - Thu. | வேட்டைத்திருவிழா | திருமதி தில்லைநாயகி குடும்பம் | திரு. குணசேகர் குடும்பம் |
| 14 | June 02 - Fri. | சப்பறத்திருவிழா | திரு. கனகரத்தினம் குடும்பம் | திரு. மகாலிங்கம் குடும்பம் |
| 15 | June 03 - Sat. | தேர்த்திருவிழா | திருமதி யோகேஸ்வரி குடும்பம் (அம்பாள் தேர் உபயம்)<br>திரு. சுதாகர் குடும்பம் (பிள்ளையார் தேர் உபயம்) | திரு. தேவகாந்தன் குடும்பம் (ஊஞ்சல் பிராயச்சித்த அபிஷேகம்) |
| 16 | June 04 - Sun. | தீர்த்தத் திருவிழா | திரு. குமரகுருபரன் குடும்பம் சூர்ணோற்சவம், தீர்த்தம் யாக கும்பாபிஷேகம் | திரு. விஜயராஜா குடும்பம் கொடியிறக்கும் வைபவம் |
| 17 | June 05 - Mon. | பூங்காவனம் | திரு. சிவகுமார் குடும்பம் (Suruthy Takeout & Catering) | பூங்காவனம் |
| 18 | June 06 - Tue. | பிராயச்சித்த அபிஷேகம் | திரு. கந்தசாமி கிரிசாந்தன் குடும்பம் | வைரவர் மடை |

**ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி மகா பெரியவர் தேர் ஆலய அடியார்களால் உலாவரும்.**

### காலை
8:45 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:45 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

### குருமார்கள் விபரம்:
**ஆலய ஸ்தாபகர் பிரதமகுரு வேத கலா பூஷணம், ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாத சந்திரமௌலி சாஸ்த்திரிகளின் நல்லாசியுடன்**
மகோற்சவ பிரதம குரு: சிவகாம ப்ரவீண சிவஸ்ரீ சுரேந்திர சிவாச்சாரியார் (சுரேன் ஐயா)
ஆலய குரு: ப்ரம்மஸ்ரீ. ஜம்புநாதன் சேதுராமன் சர்மா (ஸ்ரீ சுரேஷ் ஐயா), அனந்தநாராயணசர்மா (கார்த்திக்), அனுராக் ஜம்பநாதசர்மா, சிவஸ்ரீ சாரங்கன் சுரேந்திரசர்மா, பிரம்மஸ்ரீ தினகர்பட், பிரம்மஸ்ரீ மகேஷ்பாபு, ப்ரம்மஸ்ரீ. சர்வ லோகேஸ்வரக்குருக்கள் (ஈசன் ஐயா), மற்றும் கனடாவிலுள்ள குருமார்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

மங்கள இசை: சிவமயம் குழுவினர்
நித்திய புஷ்ப அலங்காரம் - பரந்தாமன் ஐய சாயி மலர்க்களஞ்சியம்

### மாலை
5:00 மணிக்கு கும்ப பூஜை
5:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6:00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8:00 மணிக்கு வெளிவீதி வலம்வருதல்
8:45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

# ஜனாதிபதித் தேர்தலுக்காக தமிழ் மக்களை நோக்கி 'தீர்வு வலை' வீசும் ரணில்விக்ரமசிங்க



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

• ரணிலின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே பேச்சுவார்த்தை.
• ரணிலின் தேர்தல் வலையில் தமிழ் தலைமைகள் சிக்கலாம்! தமிழ் மக்கள் சிக்குவார்களா?

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலை நோக்கி தனக்கு ஏற்றாற் போல் நாட்டைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றார். அதற்கான பல்வேறு வியூகங்களை தமிழ் மக்கள் மீதும் தென்னிலங்கை மீதும் பிரயோகித்து வருகின்றார். அதாவது தனது தேர்தல் வெற்றிகளுக்காக நாட்டின் சகல தரப்பினருக்கு முன்னால் கரட் கட்டி தொங்கவிடுகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பொருத்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக பதவி ஏற்க வேண்டும் அதுவே அவரது கனவு. துற்போது ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோதும் அது மக்கள் தெரிவு அல்ல. அவரது நாடாளுமன்ற பிரவேசம்கூட மக்கள் பிரதிநிதியாக அன்றி போனஸ் ஆசனத்தின்மூலமே பிரவேசிக்கக் கூடியதாக இருந்தது. இது அவரது 46 வருடகால அரசியல் வாழ்வில் கறைபடிந்நததாக களங்கமானதாக அவர் கருதுகின்றார். இந்தக் களங்கத்தை கறையை போக்கிக் கொள்ள ரணில் விக்ரமசிங்க முயற்சிக்கின்றார்.

ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத் தேர்தலில் 1977 ஆம் ஆண்டு முதன்முதலாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்த முதல் வெற்றியுடன் குறுகிய 16 வருட காலப்பகுதியில் 1993 ஆம் ஆண்டு முதல்முறையாக பிரதமரானார். ஆவர் ஒட்டு மொத்தமாக ஆறு முறை பிரதமராகப் பதவி வகித்துள்ளார். எனினும் அவர் பல முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோதும் அந்த வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. ஜனாதிபதியாகும் அவரது எதிர்பார்ப்பு, விருப்பம் என்பன நிறைவேறாத ஆசையாக இருந்தது.

• அரகலய வழங்கிய வெகுமதி

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்த போனஸ் ஆசனத்தின் மூலம் நாடாளுமன்றத்திற்குள் ஒரு உறுப்பினராக ரணில் விக்ரமசிங்க நுழைந்தார். "அரகலய" ஏற்படுத்திய அரசியல் மாற்றத்தால் நாடாளுமன்றத்தால் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டம் அவருக்கு கிடைத்தது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற "அரகலய" மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ தனது பதவியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தப் பின்னணியில் தேர்தலுக்குச் செல்லுமாறு எதிர்க் கட்சிகள் அழுத்தம் கொடுத்த போதிலும் ரணில் விக்ரமசிங்க 2024 நவம்பர் வரை ஜனாதிபதியின் எஞ்சிய பதவிக் காலம் முடியும் வரை ஜனாதிபதியாகப் பதவி வகிக்க விரும்புகின்றார். இந்த இடைப்பட்ட காலத்தில் தனதும் தனது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியையும் இலங்கை அரசியலில் நிலை நிறுத்திக் கொள்வதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்றார். அதனை நோக்கியே இலங்கை அரசியலை தனக்குச் சாதகமான களமாக ஆக்கிக் கொள்வதற்கான வியூகங்களை வகுக்கத் தொடங்கியுள்ளார்.

ஆனால் அவருக்கு முன்பாக பல சவால்கள் விசுவரூபம் எடுத்து நிற்கின்றன.

• ரணில் விக்ரமசிங்க ஒரு புறம் ராஜபக்ஷக்களையும் அவரது அணியினரையும் சமாளித்தாக வேண்டும்.
• எதிர்க் கட்சிகளை தன் வசப்படுத்த வேண்டும் அதற்காகவே ரணில் விக்ரமசிங்க தேசிய அரசாங்கம் குறித்துப் பேசுகின்றார். ரணில் விக்ரமசிங்கவைப் பொறுத்து ஏற்கனவே தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ளார். தேசிய அரசாங்கம் என அவர் பேசுவது சஜித் அணியினரில் இருந்து நாடாளு மன்ற உறுப்பினர்களை தனது பக்கம் இழுத்துக் கொள்வதல்ல. அந்த விடயத்தில் ரணில் விகரமசிங்க ஆர்வம் காட்டவில்லை. அவரது குறி எதிர்க் கட்சி தலைவரைத் தன் பக்கம் இழுத்துக் கொள்வதாகும்.

இதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளலாம். ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால அரசியலை நிலை நிறுத்திக் கொள்ளலாம்.

அதே வேளையில் *2024* ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பலமிக்க ஜனாதிபதி வேட்பாளராக சஜித்பிரேமதாச இருப்பது ரணில் விகரமசிங்கவுக்கு நன்றாகவே தெரியும். அந்தவகையில் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இருந்து ஒரு முக்கிய வேட்பாளரை நீக்கி தனது வெற்றிக்கான களத்தை திறந்து கொள்ள ரணில் விக்ரம சிங்க வியூகங்களை வகுக்க முயல்கின்றார்.

இந்தப் பயணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒத்தி வைப்பதில் வெற்றி கண்டுள்ளார் என்றே கூறத் தோன்றுகின்றது. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளால் ஆட்சி மாற்றம் ஏற்படப் போவதில்லை. ஆனால் அந்தத் தேர்தல் முடிவுகள் கருத்துக் கணிப்பாக அமைந்துவிடும்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளால் ஒரு மகத்தான தோல்வி ஜனாதிபதியையும் அவரது அரசாங்கத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

அதே வேளையில் உள்ளூராட்சி சபைகளுக்கான அல்லது மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறுமாயின் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் அக் கட்சியுடன் இணைந்த கூட்டணிக்கும் அமோக வெற்றியைப் பெறுவதற்கான வாய்ப்புகள் மிகத் தொலைவில் இருப்பதாகவே தெரிகின்றது.

இந்தத் தேர்தல்களில் எதிர்க் கட்சிகளில் ஜே.வி.பி சிறப்பாக செயற்படக் கூடிய வாய்ப்பகள் உள்ளன. அந்த வெற்றி வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியே பொதுத் தேர்தலுக்கான கோரிக்கையை ஜே.வி.பி தீவிரப்படுத்துகின்றது.

சட்டப்பூர்வ ஆணை ரணில்விக்கிரமசிங்கவிற்கு தற்போதைக்கு இல்லாமை பற்றிய கேள்வியையும் அவர் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். ஏனெனில் அவர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அல்ல. நாடாளு மன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியானவர்.

இதன் காரணமாகவே உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் முதலில் மார்ச் *09* ஆம் தேதி நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் திறைசேரி தேவையான நிதியை தேர்தல் திணைக்களத்திற்கு வழங்கவில்லை. தேர்தல் திணைக்களம் உள்ளூராட்சித தேர்தலை ஏப்ரல் *25*க்கும், தபால்மூல வாக்களிப்பை *28, 29, 30* மற்றும் *31* மார்ச் மற்றும் ஏப்ரல் *3* ஆகிய தேதிகளுக்கும் மாற்றியது. ஆனால் தேவையான நிதிவழங்கப்படவில்லை.

இந்தப் பின்னணியில், புதிய தேதிகள் எதுவும் திட்டமிடப்படாத நிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை இரண்டாவது முறையாக தேர்தல் திணைக்களம் ஒத்திவைத்தது.

தேர்தல் திணைக்களத்தின் கூற்றுப்படி இவாக்குச் சீட்டுகள் அச்சிடுதல் மற்றும் தேர்தலுக்கான பிற வசதிகள் தொடர்பான எதிர்பாராத மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தாமதமானது குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த செலவான 500 மில்லியன் ரூபாயில் வாக்குச் சீட்டு அச்சிடுவதற்குத் தேவையான 40 மில்லியன் ரூபாவை மட்டுமே திறைசேரி விடுவித்துள்ளது. எனவேஇ நிதி வழங்குவதை திறைசேரி உறுதி செய்யும் வரை தேர்தலை நடத்துவதற்கான அடுத்த தேதி அறிவிக்கப்படாது என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை காலதாமதமாக நடத்த தேவையான நிதியை நிதியமைச்சராக உள்ள விக்ரமசிங்கே நிறுத்தி வைப்பதாக கூறப்படுகிறது. அனைத்து நிதியும் "பொருளாதார மீட்சிக்கு" பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறி, தேர்தல் நிதியை தடுப்பதை நியாயப்படுத்த விக்கிரமசிங்க உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை தாமதப்படுத்த முயற்சித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

மொத்தத்தில் ரணில் விக்ரமசிங்கவின் நிகழ்ச்சி நிரல்களுக்கேற்ப உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெறாது போய்விட்டது.

அதுமட்டுமின்றி, பொருளாதாரப் படுகுழியில் இருந்து இலங்கை இன்னும் மீளாத நிலையில், தேர்தலுக்குச் செல்வதற்கு இந்த ஆண்டு உகந்தது அல்ல என்ற கருத்து ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கலாம்.

இதற்கும் அப்பால், IMF இலிருந்து 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் உதவியுடன் மோசமான பொருளாதார நெருக்கடியை வெற்றிகரமாகச் சமாளித்ததன் பெருமையையும் ஜனாதிபதி பெற விரும்புகிறார்.

• தென்னிலங்கையில் மாற்றம்

இதற்கேற்றாற்போல் தென்னிலங்கையில் இருந்து அவருக்கு சாதகமான குரல்கள் எழும்பத் தொடங்கியுள்ளன.

அரசியல் ஆய்வாளர்கள் தற்போதைய பொருளாதார சிக்கலைத் தீர்ப்பதற்கு முதன்மையான முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.

மேலும் இந்த சிக்கலைப் புறக்கணித்தால், அது சமாளிக்க சவாலானதாக மாறும்.

எனவே, பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

• தகர்ந்து போன வாக்குறுதிகளுடன் ரணில்

மறுபுறம் தகர்ந்து போன வாக்குறுதிகளுடன் ரணில்விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலுக்கு தென்னிலங்கையைத் தயார்படுத்துவதில் எவ்வளவு தூரம் வெற்றி பெறுவார் என்ற கேள்விகளும் தென்னிலங்கையில் முன் வைகைப்படுகின்றது. ஏற்கனவே அதிருப்தியிலும் கோபத்திலும் உள்ள தென்னிலங்கை ரணில் - ராஜபக்ஷக்களின் செயற்பாடுகளால் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டனர். அத்துடன் பொருளாதார மீட்சிக்கு *2048* வரை காத்திருக்குமாறு ரணில்விக்ரமசிங்க அடிக்கடி கூறுவது மக்கள் தமது சுதந்திரத்துக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் *2048* வரை காத்திருக்க வேண்டுமா என்ற கேள்வியும் தென்னிலங்கை மக்களிடம் இருந்து எழும்புகின்றது.

இதற்கும் அப்பால் ஜனாதிபதித் தேர்தலில் ரணில்விக்ரமசிங்கவை ஆதரிப்பதென்பது இன்றைய ரணில் - ராஜபக்ஷ கூட்டணியின் ஜனநாயக விரோதப் போக்கினை அங்கீகரித்து "லைசன்ஸ்" வழங்குவதாகப் போய்விடும் என்ற கருத்தோட்டமும் தென்னிலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

இதற்கும் அப்பால் ரணில் - ராஜபக்ஷ இரு அணிகளுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது. இந்த முறுகல் நிலை எந் நேரமும் வெடிக்கலாம் என்ற நிலையில் சஜித் அணி சஜித் பிரேமதாசாவை ஜனாதிபதி வேடபாளராக அறிவித்தள்ளது.

• தமிழர் தரப்பை நோக்கி வலை வீசும் ரணில்விக்ரமசிங்க.

மறுபுறம் ஜனாதிபதித் தேர்தலை முன் வைத்து ரணில்விக்ரமசிங்க தமிழர் தரப்பை நோக்கி காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளார்.

தமிழ் அரசியல் விமர்சகர்களின் கருத்தப்படி பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைக்கு தமிழ் மக்களை ரணில் விக்ரம சிங்க தள்ளியுள்ளார்.

சைவ மத தலங்கள் மீதான பௌத்த மேலாதிக்கத்தின் ஆக்கிரமிப்பு குறிப்பாக குருந்தூர் மலை, வெடுக்குநாரி சிவனாலய தாக்குதல்கள், தையிட்டி பௌத்த ஸ்தூபி, தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பு என தொடர்ச்சியாக தமிழ் மக்களின் இருப்பின் ஆன்மாவையே ஆட்டம்காணும் நிகழ்வுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இவ்வாறு தமிழ் மக்கள் மீதான நெருக்குவாரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அதே வேளையில் மறுபுறம் இனவிவகாரத்துக்கான தீர்வுகுறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தொடர்ச்சியாக பேசி வருகின்றார்.

75வது சுதந்திர நிகழ்வுக்கு முன் தீர்வுஎன்றார். பிறகு 13ஐ நடைமுறைப்படுத்துவேன் என்று கூறினார் பிக்குகள் வீதியில் இறங்கினர். ரணில் விக்ரமசிங்க மௌனம் காத்தார். மே தின கூட்டத்தில் இனவிவகாரத்துக்கான தீர்வு காண்பதாக அறிவித்தார். இந்த அறிவிப்புடன் லண்டன் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க லண்டனில் உள்ள தமிழ் புலம் பெயர் அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் இனவிவகாரத் தீர்வுகுறித்து பேசியதாக செய்திகள் வெளிவந்தன.

(தொடர்ச்சி *20* பக்கம்)

*(19 பக்கத் தொடர்ச்சி)*

## ஜனாதிபதித் தேர்தலுக்காக தமிழ் மக்களை நோக்கி 'தீர்வு வலை' வீசும் ரணில்விக்ரமசிங்க

• ரணிலின் அறிவிப்பு பரபரப்புக்கான செய்திகளே?

உண்மையில் இந்த அறிவிப்புகள் எல்லாம் ஆரோக்கியமான நகர்வுகளாக அன்றி பரபரப்பச் செய்திகளாகவே அமைந்தன.

இந்த தொடர் அறிவிப்புகள் தமிழ் மக்களை நோக்கி வீசப்படும் அதேவேளையில் தமிழ் மக்கள் மீதான நெருக்குவாரங்களும் மிக இறுக்கமாக நகர்த்தப்படுகின்றன. அதாவது, தமிழ் மக்களின் மீட்பன் நானே, ஜனாதிபதித் தேர்தலில் எனது கைகளைப் பலப்படுத்துங்கள் என்ற செய்தியை ரணில் விக்ரமசிங்க தமிழ் மக்களுக்குக் கூறுகின்றார். இதில் ரணில் விக்ரமசிங்க ஓரளவு வெற்றியையும் ஈட்டத் தொடங்கிவிட்டார்.தையிட்டி விவகாரத்தை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் இருந்து ஒலித்த குரல் இவ்வாறு கூறியது.

"இந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுங்கள். நாங்கள் உங்கள் பக்கம் அணி திரள்கின்றோம்" என்பதாகும்.

• ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்த முனையும் ரணில்

இதன்மூலம் ஜனாதிபதி ஒரே கல்லில் இரண்டு அல்ல பல மாங்காய்களை வீழ்த்துகின்றார்.

1. ஜனாதிபதித் தேர்தலை நோக்கி தமிழ் மக்களை அணி திரட்டுகின்றார். தமிழ்க் கட்சிகளையும் புலம் பெயர் அமைப்புக்களையும் தனது பக்கம் இழுத்துக் கொண்டுள்ளார்.
2. இனவிவகாரத்தை சர்வதேச அரங்கில் இருந்து உள் நாட்டுப் பொறிமுறைக்குள் ஈர்த்துக் கொண்டுள்ளார்.
3. தமிழ்க் கட்சிகளுக்குள் பிளவினை உருவாக்குவதுடன் தமிழர் விவகாரத்தை வடக்கு கிழக்கு என பிரித்தாள முயல்கின்றார்.
4. தமிழர்களையும் முஸ்லிம்கயைளம் பிரித்தாள முற்படுகின்றார்.

• மாலுமி இல்லாத கப்பலில் தமிழ் மக்கள்.

மொத்தத்தில் 2009க்குப் பின் மாலுமி இல்லாத கப்பலில் பயணிக்கும் தமிழ் மக்களை தமிழ்தலைமைகள் மிண்டும் ஒருமுறை பேச்சுவார்த்தை பொறிக்குள் தள்ளுவதாகவே அமையும்.

ரணில் விக்ரமசிங்கவைப் பொருத்து இனவிவகாரத்துக்கான தீர்வினைக் காண்பதல்ல நோக்கம். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளால் தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதே இலக்காகும்.. நல்லாட்சி அரசாங்கத்தைக் கொண்டு வந்ததாக மார்தட்டி திரிந்த கூட்டமைப்பின் பெயரில் அரசியல் நடத்திய தமிழரசுக் கட்சியினரின் சாதனையை தமிழ் மக்கள் இலகுவில் மறந்திருக்க மாட்டார்கள். அதே ரணில்விக்ரமசிங்கவே தமிழ்த் தலைமைகளுடன் மீண்டும் பேச்சு வார்த்தையில் ஈடுபடுகின்றார்.

துரதிஸ்டவசமாக தமிழ் மக்கள் தமக்கான தலைமையைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். தலைமை என்று கூறித் திரிவோரும் நவக்கிரகங்களாக நிற்கின்றனர். இந்த நிலைமை ரணில் விக்ரமசிங்கவுக்கு வாய்ப்பான அரசியலையே தமிழ்த் தலைமைகள் உருவாக்கிக் கொடுத்துள்ளன.

தற்போது முன்னாள் நீதியரசர் ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைத்துள்ளார். தமிழரசுக்கட்சி நல்லாட்சிக் காலத்தில் பேசப்பட்டு கிடப்பில் போடப்பட்டுள்ள அரசியலமைப்பு யோசனைகளை வைத்து பேச முற்படுகின்றது. இதுபற்றி பேசுவதாயின் அணைத்து கட்சிகளுடன் பேச வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஆனால் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவது சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவது என்ற முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனின் பொதியை கையிலெடுக்க ஜனாதிபதி விருப்பம் தெரிவித்த போதும் தமிழரசுக்கட்சியின் எதிர்ப்பால் பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

• ரணிலின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே பேச்சுவார்த்தை.

தமிழ்க் கட்சிகளைப் பொருத்து ஒற்றுமை இன்றி எவ்வித தீர்வுப் பொதியும் இன்றி வழமைபோல் வெறும்கையுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்றுள்ளன. ரணில் விக்ரமசிங்கவின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே பேச்சு வார்த்தை நடைபெறுகின்றன. இதன் வெற்றி தோல்விகளுக்குச் சொந்தக்காரர்கள் ரணில் விக்ரமசிங்கவும் தமிழ்த் தலைமைகளுமே. இந்தப் பெருபேறுகளுடன் இருதரப்பும் இறுதியில் தேர்தலில் தமிழ் மக்களிடமே கையேந்தி நிற்க வேண்டும். தீர்மானம் தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

ஏனெனில் ரணில் விக்ரமசிங்கவின் வலைக்குள் தமிழ்த் தலைமைகள் சிக்கலாம். ஆனால் தமிழ் மக்களை சிக்க வைப்பது இன்றைய நிலையில் இலகுவான விடயமில்லை.

Email : vathevaraj@gmail.com

16th May 2023




Virakesari illustrated weekly Sunday, April 30, 2023

## 'வீரகேசரி' தொடர்பான ஆய்வுக்கு கலாநிதி பட்டம்



தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம், அண்மையில் நடத்திய பட்டமளிப்பு விழாவில் முனைவர் சந்திரிகா, சுப்ர மண்யன் சமர்ப்பித்த 'தாயகம் கடந்த தமிழ் ஊடகம்: வீரகேசரி' என்ற தலைப்பிலான வீரகேசரி தொடர்பான ஆய்வுக்கு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆய்வில் தாயகம் கடந்த தமிழ் ஊடகங்களின் நிலை, இலங்கை இதழியல் வரலாறு, வீரகேசரியின் தோற்றமும், வளர்ச்சியும், தமிழ் மொழி வளர்ச்சிக்கு வீரகேசரி ஆற்றிய பங்கு, வீரகேசரியும் ஊடக அறமும் போன்ற தலைப்புகள் இடம் பெற்றுள்ளன.

வீரகேசரியின் 92 ஆண்டு கால பயணத்தை இந்த ஆய்வு பதிவு செய்துள்ளதுடன், தமிழ்மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் வீரகேசரியின் பங்களிப்பும், வீரகேசரியின் ஊடக அறம் பற்றியும் இந்த ஆய்வு விரிவாகப் பேசுகிறது.

வீரகேசரி தொடர்பான முதல் பல்கலைக்கழக ஆய்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வுக்கு தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அயல் நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை தலைவர் முனைவர் குறிஞ்சி வேந்தன் ஆய்வு நெறியாளராக வழிகாட்டியுள்ளார். வீரகேசரியில் பணியாற்றிய சந்திரிகா சுப்ரமண்யன் பெறும் இரண்டாவது கலாநிதி பட்டம் இதுவாகும்.

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

Thanthai Chelvanayakam arranged M. Tiruchelvam QC and C. Ranganathan QC and P. Navaratnarajah, QC to appear for the case. The case was filed in the district court of Colombo presided over by O.L. de Kretzer. Attorney General Victor Tennakoon, who later got promoted as Chief Justice of the Supreme Court, appeared for Respondent. In order to avoid an awkward hearing on the validity of the Sinhala Only Act, the Attorney General raised a preliminary objection that a public servant was not entitled to sue the Crown (i.e., the State) for arrears of salary. He holds office at the pleasure of the Crown. This objection was over-ruled by the presiding Judge O.L. De Krester.

R. Balasubramaniam, the then General Secretary of the AES toiled hard to do all the groundwork in connection with the case. When M. Tiruchelvam became Minister of Local Government following the Dudley - Chelva pact in June, 1965, R. Balasubramaniam became his personal secretary. He too like Kodeeswaran joined the law college and passed out as an Attorney at Law. He practiced in Jaffna and I used to meet him very often when I was attached (1966 -1972) to the Jaffna Municipal Council

During the trial in the Colombo District Court, M. Tiruchelvam fell ill, his place was taken over by C. Ranganathan, another able lawyer. Later, when an appeal was filed against the verdict of the Ceylon Supreme Court to the Privy Council, Ranganathan went to London to assist the English lawyers who argued the appeal.

In a carefully considered judgment O.L. de Krester, Colombo District Court Judge, inter-alia - stated thus:

*If the members of each community were able to speak, read and write the language of each of the other communities, then it is obvious that the selection of the language of one community as the Official Language could not cause any handicap to the members of the communities whose language was not chosen, however much they resented the fact that their own language was not given pride of place. But every member of the community is not literate in the language of the other communities and then the selection of the language of one community cause at least inconvenience, if not disability, to the communities who are not literate in that language.*

The learned Judge further concluded that the purpose of an Act must be found in its natural operation and effect. While it was a legitimate function for parliament to decide in what language official business should be carried out and in making that decision the language spoken by the largest number of people would ordinarily be the choice, the Act gave advantage to one community which the community did not have. Accordingly, he held that the Official Language Act to be an infringement of Section 29 of the constitution and, therefore, void.



Stung by the judgment delivered by the Colombo District Court Judge O.L. De Krester in 1964, the Attorney General appealed against it to the Supreme Court. The case was argued before a bench comprising Chief Justice H.N.G. Fernando and Justice G.P.A. Silva. The team for the Crown (Defendant – Appellant) was led by Walter Jayawardena QC, Acting Attorney General, who was assisted by H. Deheragoda and H.L. de Silva. The lawyers for Kodeeswaran (Plaintiff-Respondent) were led by C. Ranganathan QC.

Walter Jayawardena QC, Acting Attorney General, who appeared for the state, submitted that the relationship between a government servant and the state was governed by the English Common Law which does not permit a public servant to sue the state for arrears of salary. Ranganathan Q. C. who appeared for Kodeeswaran submitted that the relationship was governed by the Roman Dutch Law which did permit a public servant to sue the state.

H, N, G. Fernando CJ, in his judgement, ruled in favour of the state, holding the relationship between the state and its servant was governed by the English Common law and Kodeeswaran could not sue for arrears of salaries and set aside the verdict and decree of the District Court. He also stated in his judgement that he had not called upon Jayawardene to submit his arguments on the Sinhala Only Act, since the action had been decided on a point of a general law.

The verdict was delivered in 1967 by H.N.G. Fernando CJ, setting aside the verdict and decree of the District Court (70 NLR 121). The arguments used are both illuminating and at the same time problematic. Below are extracts from the lengthy judgment of the Supreme Court of Ceylon.

APPEAL from a judgment of the District Court, Colombo.

H. N. G. Fernando, C.J. - The plaintiff was appointed an Officer of the General Clerical Class of the General Clerical Service on 1st November 1952, and on 1st October1959 he was promoted to Grade II of the Executive Clerical Class of the General Clerical Service on a salary scale of Rs. 1,620 to Rs. 3,780 per annum with annual increments of Rs. 120. An increment of Rs.10 per month fell due to the plaintiff on 1st April 1962, but on 28th April 1962 he was informed by a letter (P2) from the Government Agent, Kegalle (at that time the Head of the Department in which the plaintiff was serving), that the increment had been suspended under the provisions of a Treasury Circular No. 560 of 4th December 1961. The plaintiff sought in this action a declaration that the Circular is unreasonable and/or illegal and not binding on the plaintiff, and that the plaintiff is entitled to payment of the increment which fell due on 1st April 1962. This appeal is from the judgment of the learned District Judge granting such a declaration.

At the time when the plaintiff was promoted to the Executive Clerical Class, the Minutes applicable in relation to recruitment, conditions of service, and salary scales were those published in the Gazette of October 1,1955. Paragraph 5 of the relevant Minute provided that appointments to the Executive Clerical Class will be made from among members of the General Clerical Class (to which the plaintiff belonged until 1959) on the results of a competitive examination.

The regulations and syllabus for the examination were set out in Appendix D to the Minute which prescribed three subjects of examination, i.e., (1) Accounts, (2) Regulations, procedure and office system, and (3) Sinhala or Tamil. The plaintiff, who is Tamil by race, chose Tamil as his language subject for the examination. Paragraph 7 of the Minute provided that Officers in Grade II of the Executive Clerical Class must pass an examination in National Languages prescribed in Appendix C before they proceed beyond the Efficiency Bar at the stage of R s. 3,180. Appendix C required clerks of Sinhala, Tamil or Moor parentage to pass in one language. Thus, under Appendix the plaintiff could have chosen Tamil as his language subject for this examination as well. *(To be continued)*

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

பொதுச்சபைக் கூட்டம், General Meeting- 2023.

V United Care For Kids Inc Ontario அமைப்பினது வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் வைகாசி மாதம் 27ந் திகதி 2023ம் ஆண்டு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அங்கீரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகந் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 635 Middlefield Rd, Scarborough (ONT). காலம்: வைகாசி 27, 2023. பிற்பகல் 1.00 மணி.(சனிக்கிழமை).

The Annual General Meeting of V United Care For Kids Inc Ontario is scheduled to be held on the 27th of May in the year 2023. All authorized members of the General Assembly are therefore requested to attend this meeting.

Location: 635 Middlefield Rd, Scarborough (ONT). Date: May 27, 2023, 1.00 PM (Saturday).

Thank you.

நிகழ்ச்சிநிரல். Agenda.

1. மௌன வணக்கம். Silent salutation.
2. தலைவர் உரை. Chairman's Speech.
3. செயலாளர் அறிக்கையும், செயற்திட்ட அறிக்கையும். Secretary's Report and Project Report.
4. பொருளாளர் அறிக்கை. Treasurer's Report.
5. சமர்ப்பிக்கப்பட்டஉபவிதித் திருத்தங்கள். Amemdments to the bill submitted.
6. இயக்குனர்சபை உறுப்பினருக்கான தேர்வு. Selection for a member of the Board of Directors.
7. பிறவிடயங்கள். Other matters.
8. கூட்ட நிறைவு. Closure of meeting.

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி
## மனம் திறக்கிறார் மனோ கணேசன்
### (கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 14)

## தலைப்பு: தொல்லை தரும் தொல்லியலுக்கு தெரியாத தமிழ் பௌத்தம்



• "சிங்கள பெண்களை நான் தென்னிந்தியாவிற்கு அழைத்து செல்கிறேன்" என்றேன்.
• "சிங்கள ஆண்கள் கிழக்கிந்தியாவுக்கு போகலாம்", என்றும் என்றேன்.
• "புராவித்யா சக்கரவர்த்தி" (தொல்லியல் சக்கரவர்த்தி) பட்டத்தை மேதானந்த தேரர் தனக்கு தானே சூட்டிக்கொண்டார்.
• பேராசிரியர் பத்மநாதன், இந்த "தொல்லியல் சக்கரவர்த்திக்கு" வகுப்பெடுக்கும் தகவல்கள் வைத்துள்ளார்.
• தமிழ் பௌத்தர் பற்றிய பேராசிரியர் சுனில் ஆரியரட்னவின் "தமிழ் பௌத்தன்" (தெமல பௌத்தயா) நூலை மறுபிரசுரம் செய்தேன்.
• நான் தொல்லியல் அறிஞன் அல்ல, தோராயமா அறிஞ்சவன் (அறிந்தவன்).
• இலங்கை வரமுன் மகிந்தரும், சங்கமித்தையும் தமிழகத்தில் தங்கி தமிழ் படித்தார்கள்.

---

**22 ஏப்ரல் 2004 முதல் 09 பெப்ரவரி 2010 வரை நடைபெற்ற நாடாளுமன்றம். இலங்கை வரலாற்றில் கொடுமையான இனவாத பாராளுமன்றம். 2005ல் அதிபர் தேர்தலில் மஹிந்த ஜனாதிபதி ஆனார். அப்புறம், அவரும், அவரது சகோதரர்களும், இனவாதிகள் புடை சூழ நாட்டை ஆட்சி செய்து யுத்தம் நடத்தி, ஒழித்த காலம்.**

---

வண. மேதானந்த எல்லாவல தேரர் 2004ம் வருட தேர்தலிலே ஜாதிக ஹெல உருமய கட்சியின் எம்பீயாக பாராளுமன்றம் வந்தார். அவருடன் இன்னமும் ஒரு பத்து தேரோ எம்பிக்கள் வெற்றி பெற்று வந்தார்கள்.

மேதானந்தர் "புராவித்யா சக்கரவர்த்தி" (தொல்லியல் சக்கரவர்த்தி) என்ற பட்டத்தை தனக்கு தானே சூட்டிக்கொண்டவர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுக்க, புராதன பௌத்த விகாரை சின்னங்கள் இருந்ததாக கூறி பெரிய ஒரு வரைப்படத்தை தயாரித்தார். அதை வைத்துக்கொண்டுதான் தொல்லியல் திணைக்களம் இன்று தொல்லை செய்கிறது.



அவர் சுட்டிக்காட்டுகின்ற எல்லாமே பௌத்த சின்னங்கள் அல்ல என்பது என் அபிப்பிராயம். புராதன சைவ, இந்து ஆலய சிதைந்த கட்டுமானங்களையும், பௌத்த விகாரைகள் என்கிறார். அப்படியே இருந்தாலும் அவை தமிழ் பௌத்த விகாரை சின்னங்கள் ஆகும்.

8ம் நூற்றாண்டு முதல் 16ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பௌத்தம் பலமுறை எழுந்து, சைவத்துடன் மோதி வீழ்ந்தது. இடைப்பட்ட கால இடைவெளிகளில் பௌத்தமே பிரதான மதமாகவும் இருந்தது. ஐம்பெருங்காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி ஆகியவற்றில் பௌத்த சிந்தனை காணக்கிடக்கிறது.

இதற்கு சமானமாக ஈழத்திலும் தமிழர் மத்தியில் பௌத்தம் எழுச்சி பெற்றது. தலைத்தோங்கியது.

கந்தரோடை, வல்லிபுரம், பொன்னாலை, நிலாவரை, உடுவில், நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகிய இடங்களில் இந்த பௌத்த புராதன சின்னங்கள் காணப்படுவது இயல்பே.

இதில் கந்தரோடை பிரதானமானது. கந்தரோடை விகாரைக்கு அருகில் பிக்குகளின் மடாலய சிதைவுகள், 1917ம் ஆண்டு முதலில் சரித்திரவியாளர் போல் பீரிஸ் என்பவரால் அடையாளப்படுத்தப்பட்டன. அங்கு பாண்டிய, சேர அரச வம்ச நாணயங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

நம்ம நயினாதீவில், இரண்டு நாக இளவரசர்களுக்கு இடையில் ஏற்பட்ட பிணக்கை கௌதம புத்தர் தீர்த்து வைத்தார் என தமிழ் மணிமேகலையும், பாலி மகாவம்சமும் ஒருங்கே கூறுகின்றன.

என்ன பிணக்கு? எப்படி அங்கே கௌதமர் வந்தார்? என எனக்கு தெரியாது. சீத்தலைச் சாத்தனாருக்கும் (மணிமேகலை), மகாநாம தேரருக்கும் (மகாவம்சம்) தெரிந்திருந்ததோ எனவும் எனக்கு தெரியாது.

வண. மகிந்தர், வண. சங்கமித்தை ஆகியோர் பௌத்த மத பிரசாரத்திற்காக இலங்கை தீவுக்கு வந்த போது, அவர்களை இங்கே வரவேற்றவர்கள் தமிழ் மன்னர்கள், தமிழ் மக்கள்.

இலங்கை தீவுக்கு வரமுன் மகிந்தரும், சங்கமித்தையும் சில வருடங்கள் தென்னிந்திய தமிழகத்தில் தங்கி இருந்து பண்டை தமிழை கற்றறிந்து, அங்கேயும் பௌத்த மத பிரசாரம் செய்து, அதன் பின்தான் இலங்கை தீவுக்கு வந்தார்கள்.

ஏனெனில் இலங்கையில் மக்களுக்கு, மன்னருக்கு, மத பிரசாரம் செய்ய பாஷை தெரிய வேண்டுமே. இல்லாவிட்டால் எப்படி? ஆகவே அன்று இங்கு இலங்கையில் நிலவிய மொழி தமிழ்.



தேவநம்பிய தீசன் ஒரு தமிழ் மன்னன். அவனது தந்தையை இவர்கள் இப்போது "முடுசிவ" என்பார்கள். அது மூத்த சிவன் என்பதாகும். அவர்கள் சிவனை வணங்கிய சைவர்கள். பின்னாளில் அசோகனின் பிள்ளைகளால் பௌத்த மதத்தவர்கள் ஆனார்கள். இதுதான் கதை.

நான் ஒன்றும் தொல்லியல் அறிஞன் அல்ல, தோராயமா அறிஞ்சவன் (அறிந்தவன்). அவ்வளவுதான். நம்ம பேராசிரியர் பத்மநாதன்தான், இதற்கெல்லாம் பதில் கூற கூடியவர். இந்த "அப்பா-டக்கர் பிஸ்தா" தொல்லியல் சக்கரவர்த்தி மேதானந்த தேரோவுக்கு வகுப்பெடுக்கும் அளவிற்கு பேராசிரியரிடம் தகவல்கள் உள்ளன.

இந்த தொல்லியல் சக்கரவர்த்தி தேரோ, சிங்கள பேராசிரியர்கள், இந்த புராதன கண்டு பிடிப்புகளை கொண்டு, அன்று அங்கே "சிங்கள" இருப்பு இருந்தது என்றும், இலங்கையில் எல்லா காலத்திலும், வாழ்ந்த, எல்லா பௌத்தர்களும் "சிங்களவர்கள்" என்றும் அம்புலிமாமா கதை சொல்வதுதான் பிரச்சினை.

இன்றைய தினத்தில் இலங்கை வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள "டென்சனுக்கும்" இதான் பின்னணி பிரச்சினை.

பிரபல எழுத்தாளர், கதாசிரியர், பாடலாசிரியர், பேராசிரியர் சுனில் ஆரியரட்ன எழுதிய "தமிழ் பௌத்தர்" (தெமல பௌத்தயா) நூலிலும் தமிழ் பௌத்தர்கள் பற்றிய பெரும் சான்றுகள் உள்ளன.

சிங்கள வரலாற்று எழுத்தாளர் ஒருவரே, இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றி எழுதியதால் இந்நூலுக்கு ஒரு தகைமை இருக்கிறது. இந்நூல் சிங்கள இலக்கிய சந்தையில் இல்லாமல் இருந்தது.


இந்நூலை, எனது தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து கலாச்சார அமைச்சின் (2015-2019) சார்பாக நிதி ஒதுக்கி, மீள்பிரசுரம் செய்ய விரும்பினேன்.

ஆனால், பேராசிரியர் ஆரியரட்னவின் ஒப்புதலை பெற வேண்டுமே! ஆரியரட்ன, எனது செயலாளர் பிரியாணி குணரத்னவின் பல்கலைக்கழக பேராசிரியர். அவர்கள் இருவருக்கும் இடையில் நட்பு இருந்தது. இதன் மூலம், அவரை சம்மதிக்க வைத்தேன்.

பிறகு எனது அமைச்சு இந்த நூலை மறுபிரசுரம் செய்து, நாடு முழுக்க சிங்கள பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் பல்லாயிரக்கணக்கான பிரதிகளை அனுப்பியது.

நூலை வாசித்து, முடிந்த பின், விகாரை தேரர்களையும், பள்ளிக்கூட ஆசிரியர் - மாணவர்களையும் கூட்டி ஆங்காங்கே கலந்துரையாடல்கள் நடத்த பணிப்புரை விடுத்தேன். அதற்குள் நம்ம அரசாங்கம் போய் விட்டது.

இந்த "புராவித்யா சக்கரவர்த்தி" வண. மேத்தானந்த தேரருக்கு தமிழர்களும், முஸ்லீம்களும் வந்தேறு குடிகள், சிங்களவர்கள் மட்டுமே நாட்டுக்கு சொந்தக்காரர்கள் என்ற சிந்தனை எப்போதும் இருக்கின்றது. மாற்று கருத்தை காதில் வாங்கிக்கொள்ளவும் மாட்டார்.



இலங்கையில் தமிழர் மத்தியில் பௌத்தமும், சைவமும் (இன்று இந்து) தழைத்திருந்த, வரலாற்று விஞ்ஞான உண்மையை ஏற்றுக்கொண்டு, இலங்கையில் பௌத்தத்தின் மூலம் தமிழர், சிங்களவர் மத்தியில் ஒற்றுமையை உருவாக்கலாம். தமிழ் பௌத்த வரலாற்றை சிங்கள அரசியல்வாதிகள், பௌத்த தேரர்கள் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர் மத்தியில் இல்லாத "சிங்கள - பௌத்தம்" என்ற ஒன்றை பற்றி பேசி, பௌத்தத்தை பயன்படுத்தி, முழு நாட்டையும் சிங்கள மயமாக்க முனைவதுதான் அனைத்து பிரச்சினகளுக்கும் மூலமாகும்.

இதைவிடுத்து, பௌத்தத்தை, "தமிழ் பௌத்த"மாக தமிழர் மத்தியில் கொண்டு போனால், எனக்கு தெரிய தமிழர்கள் அதை எதிர்க்க மாட்டார்கள் என்பது என் அபிப்ராயம்.

உண்மையில், மத சண்டையில், பௌத்தம் தமிழகத்தில் அகற்றப்பட்ட போது, பல தமிழ் தேரர்கள் இலங்கையில் வந்து இறங்கி இங்கே அடைக்கலம் புகுந்தார்கள். பின் இலங்கையிலும் வடக்கில் தமிழர் மத்தியில் பௌத்தம் அகற்றப்பட்டு சைவம் தழைத்தோங்க ஆரம்பித்த போது, பௌத்தத்தை காப்பாற்றவே தென்னிலங்கையில் தமிழ், பாலி மொழிகளை கொண்டு சிங்களம் என்ற மொழி பின்னாட்களில் உருவாக்கப்பட்டது. இதுதான் நான் அறிந்த இலங்கை தீவின் வரலாறு.

பாராளுமன்றத்தில் ஒருமுறை இந்த "புராவித்யா சக்கரவர்த்தி" என்னிடம் மாட்டிக்கொண்டார்.

நீண்ட உரையொன்றை ஆற்றி, சிங்கள பௌத்தத்தின் மேன்மைத்தன்மையை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், தமிழ் இந்துக்கள் இந்தியாவிற்கு செல்ல வேண்டும், முஸ்லீம்கள் அரபு நாடுகளுக்கு செல்ல வேண்டும், கத்தோலிக்க மதத்தவர்கள் கூட வெளியேற வேண்டும் என்று இவர் கூறினார்.

அதையடுத்து பேசிய நான், தொல்லியல் சான்றுகளை எல்லாம் சொல்லி உரையாற்றப்போகவில்லை. சான்றுகளை முன்வைப்பதனால் இவரிடம் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை என எனக்கு தெரியும். ஆகவே அவர் பாணியிலேயே அவரை மடக்கினேன்.

"நீங்கள் சொல்வதை போல தமிழர்களாகிய நாங்கள் நாட்டை விட்டு கிளம்புகின்றோம். முஸ்லிம்களையும் நாங்கள் சவுதி அரேபியாவுக்கோ, பாகிஸ்தானுக்கோ அனுப்பி விடுகின்றோம். மன்னார் பிஷப் ராயப்பு யோசேப்பு மூலம் போப்பாண்டவரிடம் பேசி, இந்நாட்டு கத்தோலிக்கர்களுக்கும் போய் வாழ்வதற்கு ஒரு கத்தோலிக்க நாட்டை ஏற்பாடு செய்வோம்".



(தொடர்ச்சி 25 பக்கம்)

மலேசிய மடல்

# நெஞ்சில் தைத்த முள்ளாக முள்ளி வாய்க்கால் அத்தியாயம் எதிரிகளுக்கு கொள்ளி வைக்கும் நாள், எந்நாள்?



நக்கீரன்

இந்த உலகின் தொல்குடியினரான தமிழ் மக்களுக்கு, குறிப்பாக ஈழத் தமிழ்க் குலத்திற்கு அநீதியையும் கொடுமையையும் இழைத்த பகைக் கூட்டத்திற்கு கொள்ளி வைக்கும் நாள் என்று வாய்க்குமோத் தெரியவில்லை.

இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகிய அத்தியாயத்தின் 14-ஆவது நினைவு நாள் இன்று!

எதை நினைப்பது? எதை மறப்பது என்று ஒன்றும் புரியவில்லை.

முள்ளி வாய்க்கால் துயர அத்தியாயத்தின் நேரடிப் பகை சிங்களம் என்று மேலோட்டமாகத் தெரிந்தாலும், இதில் பொதிந்துள்ள நெடுங்கால உட்பகை, ஆரியம் என்னும் பார்ப்பனியம்தான்.

தமிழனின் மொழி அழிய வேண்டும் தமிழினமே சிதைய வேண்டும் அவர்களுக்கென்று ஒரு நாடு உருவாகிவிடக்கூடாதென்று நம் இனத்தின் ஆயிரங்காலத்துப் பகையான பார்ப்பனியம் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆற்றிவரும் காரியம் இதுவரை வெற்றி பெற்றுள்ளது.

தமிழர்தம் மொழி, ஆரசியல், பொருளாதாரம், ஆன்மிகம் உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்புகளையும் ஆரியம் சிதைத்துதான் வருகிறது.

முள்ளி வாய்க்கால் முற்றுகையில் புதுடில்லிக்கு குயுக்தியுரை வழங்கிய தற்போதைய கேரளத்தையும் ஆதித்த சோழனை மறைந்து நின்று நச்சு ஆயுதத்தால் கொன்ற அன்றைய கேரளத்தையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

இரண்டிலும் ஆரியம் கலந்துள்ளது.

ஈழத் தமிழர்களுக்கு எதிரான சிங்களக் கொடுமைக்குத் துணைபோன ரஷ்யாவும் யுக்ரெய்னும் இப்பொழுது ஆண்டுக் கணக்கில் மோதிக் கொண்டாலும் தமிழரை எதிர்ப்பதில் இந்த இருவரும் இணைந்தது எப்படி?

ஈழ விடுதலைப் போரில், சிங்களத்திற்கு துணைநின்ற இந்தியம், கடைசிக் கட்டத்தில் நேரடியாகவே களமிறங்கியது. இதற்கும் துணை போனது கேரளக் கடற்கரை.


பார்ப்பனீய மேலாதிக்கம் மிக்க இந்தியாவின் தமிழ்ப் பகையைப் புரிந்துகொள்ள முடிகிறது; பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து மதத்தைக் காட்டி பிரிந்துபோன பாகிஸ்தானமும் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஏன் களம் இறங்கியது? எந்தத் தொடர்பும் இல்லாத சீனமும் இதில் சிங்களத்திற்காக அணிவகுத்தது எதனால்?

உலக இனங்கள் அத்தனைக்கும் ஈழ தேசமும் தமிழினமும் பகையா?

இதை யெல்லாம் வகையாகக் கட்டமைத்தது - கட்டமைப்பது பார்ப்பனியம்.

தமிழ் நாட்டை தமிழ் நாடென்று சொல்லக்கூடாதென்று தமிழ் நாட்டிற்கு அடைக்கலமாக வந்துள்ள பீகாரி பார்ப்பனன்கள் இன்றைக்கு சொல்கிறான்கள் என்றால், தினவெடுத்த இந்த மண்டைக் கொழுப்பு எங்கிருந்து வந்தது?

நாடுகளின் நாடான இந்தியா என்னும் கட்டமைப்பை ஆங்கிலேயர்கள் உருவாக்குவதற்கு ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உருவான நாடு, தமிழ் நாடு என்பது இந்த மர மண்டைகளுக்கு உறைக்காமல் போனது எப்படி?




அன்றையத் தமிழ் நாட்டிலிருந்து புறப்பட்ட தமிழனின் கடற்படை இலங்கை, ஜாவா - சுமத்ரா உள்ளிட்ட இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பத்துக்கும் மேற்பட்ட நாடுகளைக் கைப்பற்றி ஆங்காங்கே அதிகார பீடத்தை நிறுவியதை யெல்லாம் வகையாக மறைத்துவிட்ட ஆரிய வஞ்சகக்கூட்டம், புது டில்லியில் இன்று கொலு கொண்டிருப்பதால் அதிகமாக படமெடுத்து ஆடுகிறது.

இந்தக் கூட்டம், இப்பொழுது தமிழகக் கடலோரத்தையும் ஈழத்துக் கடற்பரப்பையும் அபகரிக்கப் பார்க்கிறது. இரு நிலத்து மீனவர்களின் வாழ்வையும் குலைத்து வருகிறது.

தலைவர் மேதகு பிரபாகரனின் வீழ்ச்சி மட்டுமல்ல் திராவிட மறவன் சர் ஏ.டி. பன்னீர் செல்வம் ஏமன் கடற்கரையில் காணாமல் போனது ஆன்மிகத்தையும் பகுத்தறிவையும் ஒன்றாக கைக்கொண்ட வள்ளலார் அடிகள், சாதி - மதமற்ற சமத்துவத்தை நிர்வாகத்தில் நடைமுறைப்படுத்திய ஆஷ் துரை சிவநேசப் பயணத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய நந்த நாயனார் தீயில் கருகியது; சைவ நெறி நின்று நாயன்மார் புலவர் பெருமக்கள் பாடிய திருமுறைப் பாடல்கள் பதிக்கப்பெற்ற ஓலைச் சுவடிகளை இறைவன் குடிகொண்டுள்ள சிதம்பர சன்னிதானத்திலேயே கரையான் திண்ணக் கொடுத்தது என எல்லாவற்றிலும் வெற்றி கண்ட பார்ப்பனியம், ஈழ தேசத்திலும் வெற்றிக் கொடி நாட்டியுள்ளது.

கை - கால் என உடற் பாகங்களை இழந்து உயிர் துறந்த ஈழத் தமிழர்கள், ஊணும் நீரும் இன்றி தொண்டை வற்றி உடல் வதங்கி மண்ணில் சரிந்தவர்கள், மருத்துவமனை - வழிபாட்டுத் தலங்களில் குண்டு மழைக்கு ஆளானோர் போர் முனையிலும் பொது இடங்களிலும் கொத்து குண்டுகளுக்கும் இரசாயன ஆயுதங்களும் ஆளாகி உயிர் துறந்தவர்கள் என்றில்லாமல் குற்றுயிரும் கொலையுருமாக இருந்தவர்களையும் சேர்த்து மண்வாரி இயந்திரங்களின் மூலம் மண்ணுக்கு இரையாக்கியக் கொடுமையை சிங்கள பேரினவாதம் - பார்ப்பன வஞ்சகத்துடன் உலக சமூகமும் கூட்டுசேர்ந்து நிறைவேற்றி 14 ஆண்டுகள் முடிந்துவிட்டன.

போர்க்குற்றத்தில் பச்சையாக ஈடுபட்ட சிங்கள கொடிய ராணுவத்திற்கு எதிராக ஒரு சிறு துரும்பைக் கூட உலக சமூகம் அசைக்கவில்லை.

காலம் கடந்து செல்கிறது முள்ளி வாய்க்கால் அத்தியாயம் 15-ஆவது ஆண்டி எட்டி நிற்கும் இந்த வேளையில், ஈழத் தமிழ் மக்கள் படுகொலைக்கும் அந்த முள்ளிவாய்க்கால் அத்தியாயத்திற்கும் சேர்த்து தமிழினப் பகைக்கு கொள்ளி வைக்கும் நாளை தமிழ்த் தாய் எப்பொழுது உருவாக்கப் போகிறாள்?

காத்திருப்போம்!!

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, விடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

(கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 15)

- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி

## சீரழிக்கப்படும் சின்ன பிக்குகளும், திருந்தாத பெரிய பிக்குகளும்



ஒரு குழந்தை தனது தாய் தந்தையரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் வளர்ந்து சமூகத்தில் ஒரு நல்ல மனிதனாக தனது கடமைகளைச் செய்து வாழவேண்டும் என்பதைத் தான் நாகரிகடைந்த எந்த ஒரு சமூகமும் எதிர்பார்க்கிறது. ஆனால் அந்தப்பாக்கியம் உலகில் பிறந்த எல்லாக் குழந்தைகளுக்கும் கிடைப்பதில்லை. ஒன்றில் குழந்தைகள் தமது குடும்பத்தினாலேயே துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகிறார்கள். அல்லது வெளிநபர்களால் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் வெளிச்சத்திற்கு வரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் குற்றவாளிகளாக பெரும்பாலும் அவர்களது குடும்ப உறவினர்களோ அல்லது நெருங்கிய நண்பர்களாகவோ தான் இருந்துள்ளனர். அல்லது யார்யாரெல்லாம் அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறதோ அவர்களே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆசிரியர்களும் மதபோதகர்களும் இதில் உள்ளடக்கம். உலகில் இடம் பெற்ற வன்முறைகளின் போதும் மோதல்களின் போதும் ஆக்கிரமிப்புகளின் போதும் சிறுவர்களும் குழந்தைகளும் பாதிக்கப்பட்டு பதிவாகிய சம்பவங்கள் ஏராளம்.

உலகில் இடம் பெற்ற இரண்டு சம்பவங்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். இவ்வாறு நான் எழுதுவதனால் இந்த இரண்டு சம்பவங்கள் தான் முக்கியமானவை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. எனது கவனத்திற்கு வந்த சம்பவங்கள் என்றவகையிலும் முதலாவது சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்துக் பெற்ற அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டே இங்கு குறிப்பிடுகிறேன். முதலாவது அவுஸ்திரேலியாவின் பழங்குடியினரான அபர்ஜினோக்கள் மற்றும் டொரஸ் நீரிணைத் தீவுக்கூட்ட மக்களின் குழந்தைகளை அவுஸ்திரேலிய அரசு அவர்களின் பெற்றோரிடமிருந்து பறித்துச் சென்று மடாலயங்களிலும் காப்பகங்களிலும் வளர்க்க முடிவு செய்தமை. பழங்குடியினருக்கு பிள்ளைகளை முறையாக வளர்க்கத் தெரியாது என்பதால் எதிர்கால அவுஸ்த்திரேலியாவின் குடிமக்களுக்குத் தேவையான தகைமையுள்ளவர்களாக வளர்க்கும் நோக்கில் அவர்களின் குழந்தைகளை எடுத்துச் சென்று நாகரிகப்படுத்தியதாக அவுஸ்திரேலய அரசாங்கம் தமது செயலை நியாயப்படுத்தியது. ஆனால் இதனை அவுஸ்த்திரேலியப் பழங்குடியினர் திருடப்பட்ட தலைமுறை (stolen generation) என்று குறிப்பிடுகின்றனர். அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட சிறுவர்கள் வளர்ந்து பெரியவர்களாகி தொழில் புரியும் போதும் அவர்களுக்கு உரியசம்பளங்கள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு சரியாக நிதி நிர்வாகம் செய்யத்தெரியாது என்பதால் வாழ்க்கைக்கு போதுமானளவு சம்பளம் மாத்திரம் வழங்கப்பட்டதாக நியாயப்படுத்தப்பட்டது. இச்செயலை திருடப்பட்ட சம்பளங்கள் (stolen wages) என்று பழங்குடியினர் கூறுகின்றனர். பின்னர் இத்தகைய செயலுக்காக அவுஸ்த்திரேலிய அரசாங்கம் பழங்குடியினரிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டதென்பது வேறு கதை. ஆனால் அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட சிறுவர்களில் பெரும்பகுதியினர் தமது குடும்பங்களை மீண்டும் சந்தித்ததில்லை என்பது தான் மிகப்பெரிய சோகம். நீங்கள் வாழும் கனடாவிலும் கூட இதையொத்த சம்பவங்கள் நடைபெற்றமை உங்களில் சிலருக்குத் தெரிந்திருக்கக் கூடும். அங்கும் செவ்விந்தியர்கள் உள்ளிட்ட பழங்குடியினரின் குழந்தைகள் தமது பெற்றோரிடமிருந்து மேலே சொல்லப்பட்ட அதே காரணங்களுக்காக பலவந்தமாகப் பறித்துச் செல்லப்பட்டு மிஷனரிப்பள்ளிக் கூடங்களில் சேர்க்கப்பட்டனர்.



அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட குழந்தைகளில் பலருக்கு என்ன நடந்ததென்பது யாருக்கும் தெரியாது. சிலவருடங்களுக்கு முன்னர் அத்தகைய வரலாறு கொண்ட பள்ளிக் கூடம் ஒன்றில் தேவையொன்றிற்காக நிலத்தைத் தோண்டிய போது சிறுவர்கள் பல எலும்புக்கூடுகள் தோண்டியெடுக்கப்பட்ட சம்பவம் மிகப்பெரிய உணர்வலையைத் தோற்றுவித்து இங்கிலாந்து இராணி ஒருவரின் உருவச் சிலை தகர்த்து எறியப்பட்டமையும் சிலவேளை உங்களுக்கு நினைவிருக்கக் கூடும். இவ்வாறு சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் உலகம் பூராகவும் இடம் பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால் இத்தகைய சம்பவங்களில் சமய நிறுவனங்கள் அல்லது அரசு அனுசரணையுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்கள் தொடர்புபடுகின்ற போது அவர்கள் மீது விழுகின்ற ஊடக வெளிச்சம் மிகக் குறைவாக இருக்கிறது. இலங்கையிலும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களும் வன்முறைகளும் அடிக்கடி ஊடகங்கள் வாயிலாக வெளிவந்தவண்ணம் உள்ளன. இதில் சமய சம்பந்தமான நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்புபட்ட சம்பவங்களும் வெளிவருவதுண்டு. ஆனால் அதில் தொடர்புபட்ட நபர்கள் அல்லது நிறுவனங்கள் தண்டிக்கபட்ட சம்பவங்கள் ஊடகங்களில் வெளிவருவது குறைவு.

இவ்வகையில் இலங்கையில் மே மாதத்தின் ஆரம்பத்தில் வெளிவந்த ஒரு செய்தியில் 2020 தொடக்கம் 2022 வரையிலான காலப்பகுதியில் 17 சிறுவர்கள் உடல் ரீதியாகவோ பாலியல் ரீதியாகவோ துன்புறுத்தல்களுக்கு ஆளாகியதோடு அவர்களில் சிலர் கொல்லப்பட்டும் உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. குறிப்பாக பௌத்த விகாரைகளில் பிக்கு பயிற்சி பெற்றுவரும் சிறுவர்கள் அங்கு அவர்களுக்கு பெரியவர்களால் தாக்கப்பட்ட மற்றும் துஷ்பிரயோகங்களுக்குட்பட்ட சம்பவங்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. அதில் கம்பளைப் பிரதேசத்தில் உள்ள விகாரரையொன்றில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இளம் பிக்குகள் தாக்கப்பட்ட சம்பவமும் அதுபற்றிய விசாரணைகளின் போக்கு பற்றியும் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. குறிப்பாக மதத் தாபனங்களில் இடம் பெறுகின்ற இத்தகைய துஷ்பிரயோகங்கள் சௌகரியமாக மூடி மறைக்கப்பட்டு வருவதாகவும் அதற்கெதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் புத்தசாசன விவகார அமைச்சருக்கு இலங்கையில் சிறுவர் நலன் தொடர்பாக இயங்கும் தனிநபர்களும் நிறுவனங்களும் கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.



பொதுவாக மதரீதியில் இயங்கும் நிறுவனங்களுக்கு எதிராக அதிலும் குறிப்பாக பௌத்த மத குருக்களுக்கு எதிராகவோ பௌத்த மதம் சார்ந்த நிறுவனங்களுக்கு எதிராகவோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் குற்றச் செயல்கள் மறைக்கப்பட்டுவிடுவதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. இதிலிருந்து சற்று மாறுபட்ட ஒரு சம்பவம் சில மாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இருந்து பதிவானது. அதில் ஆதரவற்ற சிறுவர்களைப் பாராமரிக்கும் சிறுவர் இல்லமொன்றின் போதகர் அங்குள்ள சிறுமிகளை முறையற்ற வகையில் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவ்வாறு மதம் சார்ந்த ஆட்கள் அத்தகைய சிறுவர் துஷ்பிரயோக சம்பங்களில் தொடர்புபடுவதேன் என்ற வினா எழுகிறது. அடிப்படையில் அங்கு நிறுவன ரீதியிலான வாய்ப்புகள் காணப்படுவதே அதற்குக் காரணம் எனலாம்.

உதாரணமாக பௌத்த மதத்தைப் பொறுத்தமட்டில் மதகுருக்களாக பயிற்சி பெறவேண்டுமாயின் பிரிவேனாக்களிலும் மடாலயங்களிலும் சென்று தங்கினால் மாத்திரமே அதனைச் செய்ய முடியும். அது மட்டுமன்றி பௌத்தம் துறவறத்தை வலியுறுத்துவதால் துறவிகளாக மாறி காவி கட்டினால் மட்டுமே ஒரு மதகுருவாக அங்கீகரிக்கப்படுவர். அது மட்டுமல்லாமல் பெற்றோர்களில் சிலர் தமது குழந்தைகளில் ஒருவரை பௌத்த சாசனத்திற்கு அர்ப்பணிப்பு செய்தால் தமது மரணத்தின் பின்னர் பரிபூர்ண நிர்வாண சுகம் கிடைக்கும் எனக்கருதி இளவயதிலேயே குழந்தையை பௌத்த மடாலயங்களுக்கு அனுப்பி விடுகின்றனர்.

உயர்சாதி பணக்கார பௌத்தர்களில் இவ்வாறான நடத்தை இருக்கும் போது சாதாரண விவசாயக் குடும்பங்களில் வறுமை நிலையும் அதிக எண்ணிக்கையில் குழந்தைகளும் இருப்பதால் அவர்களில் ஒருவரை சாசனத்திற்கு தானம் செய்வதால் பிற்காலத்தில் அக்குழந்தையாவது கல்வியை இலவசமாகக் கற்று சமூகத்தில் எல்லோராலும் மதிக்கப்படும் நிலையில் இருப்பதோடு பொருளாதார ரீதியில் உதவக்கூடிய வாய்ப்பும் இருந்தது. பிக்குவாக மாறியவர் தனது தாய் தந்தையரை கவனிக்கக் கூடாது என்ற தடைகள் இல்லாத படியினால் தொடர்ந்து தனது குடும்பத்தை ஒரு பிக்குவால் கவனிக்க முடியும்.

எனது மிகவும் நெருங்கிய பிக்கு நண்பர் ஒருவரின் நிலைமையை நான் நன்கு அறிவேன். நான் ஏற்கனவே சொன்னது போல மிகவும் வறிய குடும்பம் ஒன்றின் இறுதிக் குழந்தை அவர். பெற்றோர் ஏழுவயதிலேயே அவரைச் சாசனத்திற்கு அர்ப்பணிப்புச் செய்து விட்டனர். ஏழுவயதில் சாசனத்தைப் பற்றியோ துறவு பற்றியோ அந்தச் சிறுவனுக்கு என்ன தெரியும்? தொடர்ந்து கல்வி கற்க வாய்ப்புக் கிடைத்ததோடு பல்கலைக்கழகம் செல்லவும் முடிந்தது. பெரும்பாலும் இவ்வாறு காவி உடையில் பல்கலைக்கழகம் வரும் பிக்குகள் அவர்களது காவியைக் கழற்றிவிட்டு ஒரு பெண்ணைத் தொடரும் நிலையினை நான் கண்டுள்ளேன்.

ஆனால், அதையும் மீறி நான் கூறும் நபர் பிக்குவாகவே தொடர்ந்திருந்து தொழில் புரிந்தார். தனது குடும்பத்தையும் கவனித்துக்கொண்டார். அவருடனான தனிப்பட்ட கலந்துரையாடல்களின் போது தான் அறியாப்பருவத்தில் துறவுக்குத் தள்ளப்பட்டதனால் உலக வாழ்க்கைத் தேவைகள் தன்னை வருத்தியதாக ஒத்துக்கொண்டார். ஆனால் துறவிலிருந்து வெளியேறி சமூகத்தின் அவச்சொல்லுக்கு ஆளாக விரும்பவில்லை என்கிறார் அவர். ஆனால் நான் வேலை செய்யும் துறையில் உள்ள பேராசிரியர்களில் கணிசமான எண்ணிக்கையினர் பிக்குவாக ஆரம்பித்து பின்னர் அதிலிருந்து வெளியேறியவர்களாவர். சிறுவயதிலேயே அறியாப்பருவத்தில் துறவறத்திற்கு தள்ளப்பட்டு உரிய வயதுகளில் ஏற்படும் உடலியல் மற்றும் உளவியல் தேவைகளால் உந்தப்பட்டு அதிலிருந்து வெளியேறியவர்கள் போக மடாலயங்களில் எஞ்சியுள்ளவர்கள் தமது உளப்பிரச்சினைகளை வன்முறை வடிவத்தில் புதிதாக வரும் இளைய பிக்குகள் மீது காட்டுவது ஆச்சரியமல்ல.

அது மட்டுமல்லாமல் செல்வச் செழிப்புடன் திருமணமாகி இல்லறத்தை அனுபவித்த சித்தார்த்த இளவரசன் ஒரு வயோதிகத்தையும் ஒரு நோயாளியையும் ஒரு மரணத்தையும் கண்டதனால் உலக வாழ்க்கையை வெறுத்து நிறைமாத கர்ப்பிணியான தனது மனைவியையும் கைவிட்டு இராச்சியத்தையும் உலக ஆசாபாசங்களையும் கைவிட்டுத் துறவியானார். வாழ்க்கையின் அநித்தியத் தன்மையையும் அன்பின் மகத்துவத்தையும் உலகத்திற்கு எடுத்துக்காட்டி எல்லா உயிர்களும் நலம்பெற வாழ வேண்டும் என்பதற்காகப் பஞ்சசீலக் கொள்கைகளைப் போதித்தார். சாந்த சொரூபியான அவர் வன்முறையைப் போதிக்கவில்லை. அன்பின் மதமாகிய பௌத்தமும் அதைப் போதிக்கவில்லை.

ஆகவே மடாலயங்களில் பிக்குகள் வன்முறைக்கு உள்ளாவது பௌத்தத்தின் அடிப்படையையே ஆட்டம் காண வைக்கிறது. இளம் சிறுவர்களான புத்தபிக்குகளே மூத்த புத்தபிக்குகளால் வன்முறைக்கு ஆளாகிறார்கள் என்றால் ஏனையவர்களைப் பற்றி எதைச் சொல்ல முடியும்?

ஞானசாரர் போன்றோரின் வாய்கள் நாறுவது ஆச்சரியப்படக் கூடிய ஒன்றா?

புத்தர் வந்து ஆளில்லா இடங்களில் குந்துவதும் ஆக்கிரமிப்பதும் அதிசயப்படக் கூடிய ஒன்றா? இளம் பிக்குகள் மூத்த பிக்குகள் வன்முறைக்குள்ளாக்குவது பற்றி வாய்திறக்காதவர்கள் ஆக்கரமிப்பு பற்றி வாய் திறப்பார்களா? வடக்கு கிழக்கில் பௌத்த பாரம்பரியங்கள் அழிவுக்குள்ளாவதாக அரற்றுபவர்கள் இந்த வன்முறைகள் பற்றி வாய்திறந்தார்களா?

செய்ய மாட்டார்கள் என்பதே உண்மை, யதார்த்தம். அதைச் செய்வார்கள் என்று எண்ணுவது மடமை.



*(22 பக்கத் தொடர்ச்சி)*

# மனோ சாட்சி

(இந்த இடத்தில் மன்னார் பிஷப் ராயப்பு அவர்களது பெயரை வேண்டுமென்றே இழுத்து விட்டேன். அந்நேரம் அவர் உயிரோடு இருந்தார். மிகவும் சர்ச்சைக்கு உள்ளாகி பேரினவாதிகளால் வெறுக்கப்பட்ட நிலையில் இருந்தார்.)

"ஆனால் நான் இந்தியாவுக்கு போகும் பொழுது சிங்கள பெண்களை என்னுடன் தென் இந்தியாவிற்கு அழைத்து செல்கிறேன். சிங்கள ஆண்களை கிழக்கு இந்தியாவின் ஒடிசா வங்காள வலயத்துக்கு அனுப்பி விடுவோம்".

"ஏனென்றால் சிங்கள இனத்தின் முதல் இளவரசன் விஜயன், கிழக்கிந்தியாவின் ஒடிசா வங்காள வலயத்திலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறி, ஆதிவாசி அரசி குவேனியை மணந்து, அப்புறம் அவளை விரட்டி விட்டு, பின்னர் தனக்கும், தன்னுடன் வந்த நண்பர்களுக்கும், தமிழ் ராஜகுமாரியையும், தமிழ் பெண்களையும் தென்னிந்திய பாண்டிய தமிழ் நாட்டிலிருந்து தருவித்து, மணந்துகொண்டு, அதன்பின் சிங்கள இனம் உருவாகியதாக மகாவம்சம் கூறுகின்றது".

"ஆகவே நாங்கள் போகும் பொழுது நீங்களும் போக வேண்டும். எல்லோரும் போன பிறகு இந்நாட்டை, இந்நாட்டின் பூர்வீக குடிகளான வேடர்களிடம் ஒப்படைத்து விடுவோம்." என்று கூறினேன்.

மேதானந்த தேரர் எம்பீ என்னை ஏதோ திட்டி தீர்த்தார். சபையில் இருந்த சில சிங்கள எம்பீக்கள் சிரித்துக்கொண்டு இருந்தார்கள்.

இப்போ நான் நாடாளுமன்றத்தில் இருக்கிறேன். மேதானந்த "புராவித்யா சக்கரவர்த்தி" தேரர் எம்பி இல்லை. இதையிட்டு தனிப்பட்ட முறையில் நான் கவலையடைகிறேன். இருந்திருந்தால் சுவாரசியமாக இருக்கும். சிரிப்புக்கும்கூட பஞ்சம் இருந்திருக்காது.

அவரோடு சேர்ந்து நாடாளுமன்றம் வந்த சுமார் பத்து தேரோ எம்பிக்களில் ஒருவரை தவிர எல்லோரும் தோற்று போய் வெளியேறி விட்டார்கள்.

எஞ்சி இன்று சபையில் இருப்பவர் இரத்தின தேரர் எம்பி. இவர்தான் கடந்த ஆட்சியின் போது மிகப்பெரிய முஸ்லிம் எதிர்ப்பு இயக்கத்தை நடத்தியவர். அப்பாவி வைத்தியர் சாபி மீது பொய் குற்றப்பத்திரிக்கை வாசித்தவர். இஸ்லாம் எதிர்ப்பு இயக்கம் நடத்தி கண்டி தலதா மாளிகைக்கு முன் உண்ணாவிரதம் இருந்தவர். நாட்டில் இனவாத சூட்டை கிளப்பி கோதாபய ராஜபக்ச பதவிக்கு வர அரசியல் சூழலை உருவாக்கியவர்களில் ஒருவர்.

அவர் கக்கிய இனவாத குற்றப்பத்திரிக்கையில் சொல்லப்பட்ட ஒன்றையும் இன்று, அவர் கொண்டு வந்த அரசாங்க காலத்திலும்கூட நிரூபிக்க முடியவில்லை. எல்லாமே பொய். வெட்கமில்லாமல் சீருடை அணிந்து இன்னமும் நடமாடுகிறார்.

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இதுதான் இவர்கள் வரலாறு. என்ன பௌத்தமோ! ஏது பௌத்தமோ!! கௌதமனுக்குதான் வெளிச்சம்!!!

# கனடாவிற்கு கர்நாடக இசைக் கச்சேரி செய்வதற்காக வருகின்றார் சுதா ரகுநாதன் அவர்கள்

கனடா பாரதி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி சுதா ரகுநாதன் அவர்களின் கர்நாடக இசைக் கச்சேரி எதிர்வரும் யூன் 18ம் திகதி ஈற்றொபிக்கோ நகரில் நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு இங்கே காணப்படும் அறிவித்தலைப் பார்க்கவும்.






# தமிழகத்தை உலுக்கிய கள்ளச் சாராய மரணங்களும், 5 கேள்விகளும்!

தமிழகத்தில் 2 ஊர்களில் நிகழ்ந்துள்ள கள்ளச் சாராய மரணங்கள் மக்களிடையே பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே எக்கியார்குப்பம் என்னும் மீனவக் கிராமத்தில், கள்ளச் சாராயம் அருந்திய 13 பேர் பேர் உயிரிழந்தனர். இதைத் தவிர்த்து செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே உள்ள கிராமங்களில் 5 பேர் கள்ளச் சாராயம் அருந்தி உயிரிழந்தனர். விழுப்புரத்தில் 66 பேர் தற்போது வரை சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பாக, விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட மதுவிலக்கு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர்கள் தற்காலிக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேலும், இந்தப் பகுதிகளில் பணியாற்றிய காவலர்கள் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் கள்ளச் சாராயம் அருந்தி மரணம் அடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சமும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்குவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும், கள்ளச் சாராய உயிரிழப்பு தொடர்பான வழக்குகள், சிபிசிஐடிக்கு மாற்றப்படுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மறுபுறம், தமிழகத்தில் சாராய ஆறு ஓடிக் கொண்டுள்ளதாக அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி கடுமையாக விமர்சித்துள்ளார். மேலும், கள்ளச் சாராய மரணங்களுக்கு பொறுப்பேற்று முதல்வர் ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறு மரணங்கள் நிகழ்ந்த பிறகு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து இருந்தாலும், இந்த கள்ளச் சாராய மரணங்கள் 5 கேள்விகளை எழுப்பி உள்ளன.

தூங்கிக் கொண்டு இருந்த மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு: போதைப் பொருள்களை முற்றிலும் தடுப்பதற்கான நடவடிக்கையாக,



கடந்த ஆண்டு போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவையும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவையும் ஒன்றாக இணைத்து 'அமலாக்கப் பணியகம் குற்றப் புலனாய்வுத் துறை' என்னும் தனிப் பிரிவை தமிழக அரசு உருவாக்கியது. இந்தப் பிரிவு இத்தனை நாட்கள் என்ன செய்துகொண்டு இருந்தது என்ற கேள்வியை எழுப்பாமல் இருக்க முடியவில்லை. தற்போது காவல் துறை அதிகாரிகள் பணியிடை நீக்கம் செய்துள்ள தமிழக அரசு, முன்னதாகவே கள்ளச் சாராயத்தைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் வேகம் காட்டி இருந்தால் இவ்வளவு பெரிய துயரச் சம்பவம் நிகழ்ந்து இருக்காது.

உளவுத் துறையின் தோல்வி: மாநிலம் முழுவதும் இதுபோன்ற சட்ட விரோத செயல்பாடுகளை கண்காணித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டியதுதான் உளவுப் பிரிவின் முக்கிய பணி. மேலும், போதைப் பொருள் தடுப்பு பிரிவுக்கு, தனியே ஓர் உளவுப் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஆண்டு தெரிவித்து இருந்தார். இந்த உளவுப் பிரிவினர் தங்களின் பணியை முறையாக செய்து இருந்தால் கள்ளச் சாராய விற்பனை தடுத்து இருக்கலாம். இவ்வாறு முறையாக கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளாத உளவுப் பிரிவு அதிகாரிகள் மீது தமிழக அரசு ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

உயிர் பலி நடந்த பிறகு நடவடிக்கை: கடந்த 2 நாட்களாக தமிழக அரசு கள்ளச் சாராயம் தேடுதல் வேட்டையை நடத்தி வருகிறது. இந்த வேட்டை தொடர்பாக, டிஜிபி சைலேந்திரபாபு வெளியிட்ட அறிக்கையில், 'கடந்த 2 நாட்களாக தமிழகம் முழுவதும் நடந்த சாராய வேட்டையில் இதுவரை 1,842 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 1,558 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த வேட்டையில் 19,028 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டுள்ளது.'' என்று தெரிவித்து இருந்தார். 2 நாட்களில் இந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க முடிந்த காவல் துறையால், இதை முன்கூட்டியே ஏன் எடுக்க முடியவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, ''மரக்காணம் அருகில் கள்ளச்சாராயம் விற்பனை செய்யப்படுவது தொடர்பாக, கடந்த ஜனவரி மாதமே செய்திகள் வந்த நிலையில், அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியதே இந்த மரணங்களுக்குக் காரணம் என்று கூறி இருப்பதை புறந்தள்ளிவிட முடியாது'' என்றார்.

அழுத்தம் கொடுத்த ஆளும் கட்சியினர்: விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு, அருகில் உள்ள புதுச்சேரியிலிருந்து சட்டவிரோதமாக மதுபானங்கள் கொண்டுவரப்படுகின்றன. கூடவே, இந்தப் பகுதிகளில் கள்ளச்சாராய விற்பனையும் அதிகரித்து வருகிறது. இதில், தொடர்புடையோர் கைது செய்யப்படும்போது, ஆளுங்கட்சியைச் சேர்ந்த உள்ளூர் நிர்வாகிகள் சிலர், அவர்களை விடுவிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதாக மரக்காணம் பகுதி காவல் துறையைச் சேர்ந்த சிலர் கூறியுள்ளனர். இது தொடர்பாக விசாரணை நடத்தி தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து உண்மையை பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

அதிக இழப்பீடு தொகை: தமிழக அரசு, கள்ளச்சாராயம் அருந்தி இறந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு அறிவித்திருக்கிறது. கள்ளச் சாராயத்தின் ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல், அதை வேண்டுமென்றே அருந்தி இறந்தவர்களுக்கு மக்கள் வரிப்பணத்திலிருந்து இவ்வளவு பெரிய தொகையை அளிப்பது குறித்து பல்வேறு விமர்சனங்களும் எழுந்துள்ளது. இதன் மூலம், கள்ளச் சாராயத்தின் ஊடுருவலைத் தடுக்கத் தவறிய காரணத்தால்தான் அரசு, பெரிய தொகையை இழப்பீடு அறிவித்திருக்கிறது என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் தமிழக அரசு தனது செயல்பாடுகள் மூலம் பதில் அளிக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# கும்பகோணம் மாசி மகத்திற்கு உள்ளூர் விடுமுறை: எம்எல்ஏவுக்கு பொதுமக்கள் பாராட்டு



கும்பகோணத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் மாசி மக விழா அன்று உள்ளூர் விடுமுறை என கடந்த 16ம் தேதி தமிழக அரசு அரசாணை வெளியிட்டு உத்தரவிட்டுள்ளதை ஒட்டி கும்பகோணம் எம்எல்ஏ வுக்கு பல்வேறு அமைப்பினர் பாராட்டு நன்றி தெரிவித்தனர்.கும்பகோணத்தில் 12 ஆண்டுக்கு ஒரு முறை மாசி மகாமகமும், ஆண்டு தோறும் மாசி மக விழாவும் விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த விழாவின் போது, இங்குள்ள மகாமக, பொற்றாமரை குளங்கள், காவிரி ஆற்றில் பக்தர்கள் புனித நீராடி, அருகிலுள்ள கோயிலுக்குச் சென்று வழிபட்டு பின்னர் வீடுகளுக்குச் செல்வார்கள்.இந்த விழாவான மாசி மகத்தின் போது ஆயிரக்கணக்கானோரும், மாசி மகாமகத்தின் போது லட்சக்கணக்கானோரும் கூடுவார்கள்.

ஆனால், ஆண்டு தோறும் நடைபெறும் மாசி மக விழா அன்று, உள்ளூர் விடுமுறை அறிவிக்க வேண்டும் என, கடந்த 2017ம் ஆண்டு முதல், இங்குள்ள பல்வேறு அமைப்பினர், தமிழக அரசிடமும், கும்பகோணம் எம்எல்ஏவிடமும் வலியுறுத்தி வந்தனர்.இதனைத் தொடர்ந்து கடந்த மார்ச் 30ம் தேதி சட்டப்பேரவையில் கும்பகோணம் எம்எல்ஏ, இது குறித்து கேள்வி எழுப்பியும், ஏப்ரல் 12ம் தேதி தமிழக முதல்வரை நேரிடையாக சந்தித்தும் இது குறித்த கோரிக்கை மனுவை வழங்கினார்.இந்நிலையில், தமிழக அரசு கடந்த 16ம் தேதி, கும்பகோணத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் மாசி மக விழா அன்று தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை என அரசாணை வெளியிட்டு உத்தரவிட்டுள்ளது.

இதனை அறிந்த தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர்களின் கூட்டமைப்புக் குழுத் தலைவர் ஆர்.கே.பாஸ்கர், தென்பாரத கும்பமேளா கும்பகோணம் மகாமக அறக்கட்டளைச் செயலாளர் வி.சத்தியநாராயணன், கும்பகோணம் ரயில் உபயோகிப்பாளர்கள் சங்க ஒருங்கிணைப்பாளர் ஏ.கிரி, அகில பாரத இந்து ஆன்மீக பேரவை நிர்வாகிகள் என்.சுப்புராயன், இரா.கண்ணன், ஒப்பந்தக்காரர்கள் அமைப்பின் நிர்வாகி எம்.கே. ஆர்.அசோக்குமார், அனைத்து தொழில் வணிகர்கள் சங்க கூட்டமைப்பு மற்றும் மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, மந்திரபீடேஸ்வரி பக்தர்கள் குழு, விஷ்வ இந்து பரிஷத் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கும்பகோணம் எம்எல்ஏ சாக்கோட்டை க.அன்பழகனுக்கு சால்வை அணிவித்து நன்றியை தெரிவித்தனர்.

# விஷச் சாராயம் உயிரிழப்புக்கு ரூ.10 லட்சம் வழங்குவது கண்டிக்கத்தக்கது: இந்து முன்னணி

''விஷச் சாராயம் குடித்து இறந்தால் ரூ.10 லட்சம் வழங்குவது என்பது அதை ஊக்கப்படுத்தும் வகையில் உள்ளது. இது கண்டிக்கத்தக்கது'' என்று இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் தெரிவித்தார்.பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் உள்ள போகர் சந்நிதியில் போகர் ஜெயந்தி விழா நடைபெற்றது.

இதில் இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் கலந்து கொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: "போகர் ஜெயந்தி விழா நடத்தக்கூடாது என கோயில் இணை ஆணையர் தடை விதித்தார். நீதிமன்றத்தில் அனுமதி வாங்கியும் அவர் விழாவுக்கு பல்வேறு இடையூறுகள் கொடுத்தார். பழநி முருகன் கோயிலில் ஆகம விதிப்படி கும்பாபிஷேகம் நடக்கவில்லை என சொல்கிறார்கள். அதன் விளைவாக தான் தற்போதைய அரசுக்கு கேடு விளைந்து கொண்டு இருக்கிறது.

விஷச் சாராயம் குடித்து பலர் இறந்துள்ளனர். இதில் அரசும், உளவுத் துறையும் போதிய கண்காணிப்பு இல்லை. அரசு சரியாக செயல்பட்டால்தான் அதிகாரிகளும் நேர்மையாக இருப்பார்கள். விஷச் சாராயம் குடித்து இறந்தால் ரூ.10 லட்சம் வழங்குவது என்பது, அதை ஊக்கப்படுத்தும் வகையில் உள்ளது. இதை இந்து முன்னணி கடுமையாகக் கண்டிக்கிறது.பழநி முருகன் கோயிலில் சில மாதங்களுக்கு முன்பு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதற்கு, ஏராளமான பக்தர்கள் லட்சக்கணக்கில் நிதியும், பொருட்களும் நன்கொடையாக கொடுத்தார்கள். இதில் ஊழல் நடந்திருப்பதாக மக்கள் பேசி கொள்கிறார்கள். எனவே, கும்பாபிஷேக வரவு, செலவு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்" என்றார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் 1048

## மாணிக்கப்பிள்ளையார் கோயில் அட்டன், மலையகம்

*" ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே ".*

ஈழத்திருநாட்டின் இதயம் போன்று மலையகம் காணப்படுகின்றது. இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசமாக இப்பகுதி விளங்குகின்றது. மலைகளும் குன்றுகளும் உயர்ந்தோங்கி நிற்க, அவற்றிடையே சலசலத்து ஓடும் ஆறுகளும் அருவிகளும் எழில் பெருக்க, பச்சைப்பசேலென்ற இயற்கை எழிலோடு, கண்கவர் பூமியாக விளங்குவது மலையகப் பிரதேசமெனில் அது மிகையாகாது. இவ்வாறான சூழலில்ஈ பச்சைமலைக்குன்றின்மேல் பரிவார மூர்த்திகள் சகிதமாக எழுந்தருளியுள்ள மாணிக்கப்பிள்ளையார் கோயில், அருளும் அற்புதமும் ஒருங்கே அமைந்த கோயிலாகக் காணப்படுகின்றது. இந்தியாவில், தமிழகத்திலுள்ள திருச்சி உச்சிப்பிள்ளையார் மலைமீது எழுந்தருளியதைப்போன்று, அட்டன் மாணிக்கப் பிள்ளையார் கோயிலும் அமைந்து காணப்படுகின்றது. சமதரையிலிருந்து நூற்றியெட்டுப் படிகளேறி உச்சியை அடைந்து, ஆலயத்தைத் தரிசிக்கும் முறையில் இக்கோயில், உயர்வான பிரதேசத்திலே அமைந்து காணப்படுகின்றது.

இந்துசமயத்திலே யாவற்றிற்கும் மேலான பரம்பொருளை வழிபடும் மார்க்கங்கள் ஆறுவகைப்படும். இவை அறுவகைச் சமயங்களெனப் போற்றப்படுகின்றது. இறைவனை எந்த வடிவிலே நாம் வழிபடுகின்றோமோ அந்த வடிவிலே இறைவன் அருள்புரிவர். ஆறுவகைச் சமயங்களிலே கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயம் காணாபத்தியம் எனப்படும். இவர்களைக் காணாபதர் என்றழைப்பர். ஈழத்திலே ஏனைய இந்துமத வழிபாடுகள் பெற்ற பிரபல்யத்தை விநாயக வணக்கம் பெறவில்லை. எனினும் எந்தக் காரியத்தையும் ஆரம்பிக்கு முன், கணபதியை வணங்கியே ஆரம்பிப்பது இந்துமரபாகக் காணப்படுகின்றது.

கோபுரம், விமானம் என எதுவுமே இல்லாமல் அரசமரத்தடியில் வானமே கூரையாகக்கொண்டு எழுந்தருளி இருக்கும் தெய்வம் பிள்ளையார். சர்வலோக மாதாபிதாவின் மூத்தபிள்ளையாதலால், இவரைப் பிள்ளையார் என அழைப்பர். பிரணவத்திலிருந்தே சகல பிரபஞ்சங்களும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் வடிவமாகக் கருதப்படுவபவர் பிள்ளையார். பிள்ளையாரின் ஆனைமுகம் மற்றும் வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகத் தோன்றும்.

ஈழத்திலே இந்துக்கள் மட்டுமன்றி, பௌத்தர்களும் கணபதியை வழிபாடு செய்கின்றனர். மற்றும் யாவா, பர்மா, கம்போடியா, திபெத், மங்கோலியா, யப்பான், நேபாளம், சீனா போன்ற நாடுகளிலும், வெவ்வேறு பெயர்களில் கணபதி வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். வேதகாலத்தில் கணபதி வழிபாடு காணப்பட்டுள்ளமையை "கணாம் த்வாம் கணபதிம் அவாமஉற" என்று யசுர் வேதத்திலுள்ள சத ருத்திரியத்திலும், வாஜ சநேஜ சம்உறிதையிலும் விநாயகர் பற்றிய குறிப்புக்களும், அதில் கணபதிக்கு வணக்கம் என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும் ஐதரேய பிராஹ்மணத்திலே, விநாயகர் விக்கினங்களைத் தீர்த்து வைப்பவர், சாந்தப்படுத்துபவர் என்ற குறிப்புள்ளது. கணபதி உபநிடதத்திலே விநாயகரைப்பற்றிக் கூறும்பொழுது எல்லாம் நீயே, படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனும் நீயே என்றும் கூறப்பட்டுள்ளதோடு, ஏரம்பஉபநிடதத்திலும் விநாயகரைப் பற்றிய குறிப்புக்கள் காணப்பட்டு, விநாயக வணக்கத்தின் தொன்மையைப் புலப்படுத்துகின்றது. விநாயகர் வழிபாடு தொன்மையான வழிபாடு என்பதையும், விநாயகரின் பெருமையையும் இதிகாச புராணங்கள் மிகத் தெளிவாக விளக்கியுள்ளன. விநாயகர்புராணம், முக்கலபுராணம், கணேசபுராணம், பவிஷ்யபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், போன்ற புராணங்கள் மூலமும், கணேசகீதை, கணேசகல்ப்பம், விநாயகபரத்துவம், விநாயகர் கவசம், இராமாயணம், மகாபாரதம், போன்ற சமய இலக்கியங்களின் மூலமும் விநாயகப் பெருமானின் பெருமையை அறியலாம். வேதகாலத்திலிருந்து இன்றுவரை அற்புதங்களாலும், மகிமைகளாலும், இடர்நீக்கும் தெய்வமாக மக்கள் மனதில் நிலைத்த பிள்ளையார், ஈழத்தின் மத்தியபகுதியில் அமைந்துள்ள அட்டன் பிரதேசத்தில் எழுந்தருளியுள்ள பிள்ளையார், பல அற்புதங்களைக் காலத்திற்குக் காலம் நிகழ்த்தி வருகின்றார்.

இங்கு எழுந்தருளியுள்ள மாணிக்கப்பிள்ளையாரை அவர் புரிந்த அற்புதங்களின் காரணமாக, "ஆலயக்கல்சுமந்த ஆனைமுகப் பெருமான்" என்றும், "பாலஸ்தாபனம் செய்யவந்த பரமனின் பிள்ளை" என்றும் பல்வேறு திருநாமங்களைச் சூட்டி, இப்பிரதேச மக்கள் மகிழ்ச்சியடையவர். மாணிக்கப்பிள்ளையார் கோயில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முப்பெருமைகளையும் ஒருங்கேகொண்டு காணப்படுகின்றது. பாறையைக் குடைந்து தோண்டிய ஊற்றுக் கிணறு உள்ளே அமைந்திருப்பது, ஆலய மகிமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. மலையகமெங்கும் பல்வேறு வணக்கமுறைகள் சிறப்புப்பெற்று விளங்கியபோதிலும், 1963 ஆம் ஆண்டளவில், அட்டன்பிரதேசத்தில் மாணிக்கப்பிள்ளையாருக்கு ஆலயமொன்றை அமைக்க வேண்டுமென, இப்பிரதேச இந்துமகாசபை ஆலயநிர்வாகக்குழவினர் தீர்மானித்திருந்தனர். சபையினரின் தீர்மானத்தின்படி, மாணிக்ப்பிள்ளையார் ஆலயத்தை நிறுவுவதற்கான அடிக்கல்நாட்டும்விழாவிற்குரிய சுபநேரங்கள் பெரியவர்களால் கணிக்கப்பட்டது.

இத் திருப்பணியை ஆரம்பித்து வைப்பதற்காக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல சிற்பாச்சாரியார் ஒருவரை ஆலய நிர்வாகம் ஏற்பாடு செய்தது. இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதம் தெரிவித்திருந்த சிற்பாச்சாரியார், சுகவீனம் காரணமாகக் குறிப்பிட்ட நாளன்று வருகை தருவதில் தாமதம் ஏற்பட்டது. சகல ஏற்பாடுகளும் நிறைவுபெற்று ஆலய அடிக்கல் நாட்டும் திருநாளை எதிர்பார்த்திருந்த நிர்வாகத்தினரும், பக்தர்களும் மனச்சோர்வோடு எல்லாம் அவன் செயல் என்று ஆனைமுகத்தானை உளமாரப் பிரார்த்தனை செய்தவண்ணமிருந்தனர். இவ்வேளையில் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டக் நியமிக்கப்பட்ட இடத்திற்கு அண்மையில் அமைந்திருந்த, மண்டபத்தின் திண்ணையில் வயதான பெரியவர் ஒருவர் கந்தல் உடையுடன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார். அவரது தலையணையாகச் சிறுபொதியொன்றும் காணப்பட்டது.

- வளரும்...



# இவ்வார ராசிபலன்

## 19-05-2023 வெள்ளி தொடக்கம் 18-25-2023 வியாழன் வரையும்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**மேஷம்:** காரியத்தில் வெற்றிக் காணும் வாரம். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் வலுக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் சேரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும். வஸ்திர தானம் செய்தால் வளம் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகளால் வெகுமானம் உண்டாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுப்படும். தன வரவு அதிகரிக்கும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்தி வரும். வெளியூர் பயணம் நன்மை தரும். சுயத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**ரிஷபம்:** மாற்றங்களை சந்திக்கும் வாரம். பிறர்க்கு உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மனைவி வழி அன்பு அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன்தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். வீண் செலவுகள் குறையும். விவேகம் வெளிப்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிடைக்கும். உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். மனோபயம் ஏற்படும். நிர்வாகச் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பதவி உயர்வு கிடைக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைப்பேசி செய்தி ஆனந்தம் தரும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஅய்யனாரப்ப சுவாமி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** மனநிறைவு கிடைக்கும் வாரம். பூர்வீகச் சொத்து வந்து சேரும். உடல்சோர்வு உண்டாகும். அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். புதுமைகள் நிறைந்த காலம். இயந்திர பணியில் ஆர்வம் கூடும். புதிய நட்பில் எச்சரிக்கைத் தேவை. சொல்லில் கவனம் தேவை. கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டாகும். இடமாற்றம் ஏற்படும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டுக் கிட்டும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிடைக்கும். உறவினர்கள் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகம் உன்னதம் தரும். தாய் வழி உறவு மூலம் லாபம் அதிகரிக்கும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கிடைக்கும். வறுமைகள் அகலும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: குண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**கடகம்:** விவேகத்தோடு செயல்படும் வாரம். சகோதரியால் லாபம் உண்டு. எதிர்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. நன்மைகள் அதிகரிக்கும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழைய கடன் வசூலாகும். பணவரவு அதிகரிக்கும். சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் தரும். வறுமைகள் அகலும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உணர்வு உண்டு. சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். இல்லத்தில் அமைதி கூடும். தேக பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பேச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A





**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. காதல் கைக்கூடும். மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வாயில் தேடி வரன் வரும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். கடன் வாங்க நேரிடும். மன நிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். குடும்ப வளர்ச்சி கூடும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தர்மச் சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பணவரவு அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். பாதகம் விலகும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். வேண்டாத நபர் விலகிடுவர். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**கன்னி:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு விலகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு மேம்படும். மனக்கசப்பு நீங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். துணிச்சல் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு, முடிவுக்கு வரும். எதிர்பார்த்த தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். உற்சாகம் களைகட்டும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரியோர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். வறுமைகள் ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,6,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,S




**துலாம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும் வாரம். உற்சாகம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். காதலர்களிடையே கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுதலை பெறுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். பொறுப்புக்கள் கூடும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். திருப்புமுனை ஏற்படும். வெற்றிகள் குவியும். மதிப்பு உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. விருந்தினர் வருகை ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எண்ணம் வண்ணமயமாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். பொறாமைகள் அதிகரிக்கும். வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். தாய்வழி உறவில் தகராறுகள் குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசெல்வ நாயகி, அதிர்ஷ்ட எண்: 8,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,F

(தொடர்ச்சி 30 பக்கம்)


ஓம் சக்தி துணை
ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்
சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்
585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH) TEL: 416 535-6560
பிரம்மோத்ஸவ (துவஜாரோஹண) விஞ்ஞாபனம்
சிவன்
பிரம்மோற்சவ பெருவிழா 2023
சிவன் திருவிழா
(02.06.2023 வெள்ளி முதல் 13.06.2023 செவ்வாய் வரை)
திருவிழா நிகழ்ச்சி நிரல்
02.06.2023 கொடியேற்றம் - வெள்ளி நண்பகல் 11மணிக்கு
08.06.2023 வேட்டை திருவிழா - வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு
09.06.2023 சப்பரத் திருவிழா - வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு
10.06.2023 தேர் திருவிழா - சனிக்கிழமை காலை 11:00
11.06.2023 தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு
12.06.2023 திருக்கல்யாணம் - பூங்காவனத் திருவிழா
திங்கள் இரவு 7:00 மணிக்கு
13.06.2023 வயிரவர் மடை - செவ்வாய் மாலை 7 மணிக்கு
தேர்த்திருவிழா
சனி காலை 11:00 மணி
10.06.2023
என்றும் இறைபணியில்
ஆலய தர்ம கர்த்தா
அனைவரும் வருக - அன்னையின் அருள் பெருக


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** எண்ணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கூடும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். சுபவிரயம் ஏற்படும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன்தொல்லைகள் தீரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். மாற்றங்களை சந்திப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். திருப்திகள் அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமைமிக்க காலமாக அமையும். மாலை நேரத்தில் மகிழ்வான செய்தி வரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். பெண்களுக்கு பெருமை சேரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. நவகிரஹ அனுகிரஹம் கூடும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெற்றோருக்கு பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,8,9,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: PG





**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும் வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப்போகும். பணியில் கவனம் தேவை. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர் குலையம். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பெருமைகள் கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். மாணவர் திறமைகள் பளிச்சிடும். முக்கிய முடிவுகளில் தெளிவு இருக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். இசை ஆர்வம் கூடும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வீண் செலவுகள் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தோதான எண்ணம் உருவாகும். சுறுசுறுப்பு பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். பணமும், பாராட்டும் சேரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இரும்பு தொழில் ஏற்றம் தரும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரத்தில் வேகம் கூடும். கனவுகள் பலிதமாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். பாகப்பிரிவினை ஏற்படும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள் O,N




**மகரம்:** கோரிக்கைகள் நிறைவேறும் வாரம். தர்மச்சிந்தனைகள் மேலோங்கும். வாகன மாற்றம் உண்டு. சகோதர வழியில் சந்தோஷம் கூடும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடவும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். தகுதிகள் மிகுதியாகும். உடல்நலம் மேம்படும். சுபச்செய்திகள் வரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். மனக்குழப்பம் வந்து நீங்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசியல் ஆதாயம் தரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்கள் பாராட்டு கிடைக்கும். பொறுப்புக்கள் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். குடும்ப வளர்ச்சி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். தொழில் முயற்சி வெற்றி தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். தனலாபம் கூடும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,G




**கும்பம்:** நிதி நிலைமை திருப்தி தரும் வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். மெத்தனப் போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி உயர்வு வரும். மங்களகரமான செய்தி வரும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. மாணவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழி செலவு அதிகரிக்கும். மனோ தைரியம் அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும். காதல் கை கூடும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். உடல் உபாதை நீங்கும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். பணி செய்யும் இடத்தில் பாராட்டுக் கிட்டும். சாதகமான வாய்ப்பு அமையும். ஊதிய உயர்வு கிட்டும். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,5,9,3
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,S




**மீனம்:** வாயில் தேடி வாய்ப்பு வரும் வாரம். காரியங்கள் கை கூடி வரும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். விருந்தினர் வருகை உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். விவேகமான பேச்சுக்களால் வில்லங்கம் விலகும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்பு தும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கோரிக்கைகள் நிறைவேறும். எண்ணங்கள் வண்ணமயமாகும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வரவுகள் திருப்தி தரும். ஆபத்துகள் விலகும். நினைத்த விஷயம் நிறைவேறும். அன்னிய தேச பயணம் உண்டு. காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சொந்த பந்தங்களின் உதவி கிடைக்கும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பாகப்பிரிவினை சுமூகமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H

# திருவள்ளுவரின் இரண்டு குறள்களை எமக்கு ஞாபகமூட்டும் ஒரு அற்புதப் புதல்வரின் மறைவு

தெய்வப் புலவர் திருவள்ளுவரின் பின்வரும் இரண்டு குறள்களும் ஒரு தந்தையினதும் அவரது புதல்வனதும் கடமைகளையும் அல்லது பொறுப்புக்களையும் விளக்குபவையாக எமக்கு அறிவுறுத்துகின்றன.

-----------------

1. தந்தை மகட்காற்றும் நன்றி அவையத்து
   முந்தி இருப்பச் செயல்
2. மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
   என்நோற்றான் கொல் எனும் சொல்

-----------------

இந்த இரண்டு குறள்களுக்கும் மிகவும் பொருந்தக் கூடியவர்களாக வாழ்ந்த யாழ் மண்ணின் தந்தை ஒருவரும் தனயர் ஒருவரும் தற்போது இவ்வுலக விட்டு நீங்கியவர்களாக நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.



அவர்களுக்கு மரியாதை செலுத்துகின்றோம்.

தந்தை என்ற ஸ்தானத்தில் இருந்தவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்களில் ஒருவரான அமரர் என். சபாரத்தினம் அவர்கள்.

அவரை நாம் அதிபராக அறிந்திருக்கின்றோம் தவிர அவரிடம் கற்கவில்லை. ஆனால் எழுத்துத் துறையிலும் பத்திரிகைத் துறையில் இளம் வயதிலேயே கொண்ட ஆர்வம் காரணமாக யாழ்ப்பாணம் "ஈழநாடு" பத்திரிகையில் அவர் எழுதி வந்த ஆசிரிய தலையங்களைப் படித்து இன்புற்று ஒரு ஆசிரிய தலையங்கம் எவ்வாறு சிந்திக்கப்பெற்று எழுதப்பட வேண்டும் என்று கற்றுக் கொண்டு கடந்த 28 வருடங்களாக அதை எமது பத்திரிகையின் "கதிரோட்டம்" என்னும் ஆசிரிய தலையங்கத்தை படைத்து வருகின்றோம்.

அமரர் என். சபாரத்தினம் என்னும் முன்னாள் அதிபரது புதல்வரான சபாரத்தினம் சிவகுமார் அவர்கள் ஒரு வைத்தி-யராகப் பணியாற்றி வந்து சில நாட்களுக்கு முன்னர் இயற்கை மரணத்தை தழுவியுள்ளார்.

அவர் தான் பிறந்த மண்ணை வீட்டு நீங்காமல் தாயகததிலேயே தங்கியிருந்து மக்களுக்கு மருத்துவச் சேவையைச் செய்ததோடு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவத்துறை மாணவ மாணவிகளுக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்துள்ளார் என்பது அறியப்படக் கூடியதாக உள்ளது. அவரது பிரிவால் யாழ் குடாநாட்டு மக்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளார்கள் என்ற செய்தி எமது செவிகளை எட்டுகின்றது. மருத்துவ பீடத்தின் மாணவர்கள் மாலுமியை இழந்த கப்பல் பயணிகள் போன்று தவிப்பதாகவும் பேசப்படுகின்றது.

இவ்வவாறு. அற்புதமான மனிதர்களாக வாழ்ந்து வள்ளுவன் எழுதி வைத்த குறள்களின் உதாரண புருஷர்களாக மறைந்தும் மறையாதவர்களாகத் திகழ்கின்றார்கள். தொடர்ந்தும் பேசப்படுவார்கள். இதுதான் உண்மை!



# MORTGAGE FINANCIAL




SUBRA MORTGAGE SOLUTIONS

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL
VACANT LAND CONSTRUCTION

|1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity line of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON.
M1B 2W1 canada

www.subra.com

WE DEAL WITH ALL BANKS

Brokerage #10330

Powered By

MORTGAGE ALLIANCE · Scotiabank · radius financial · EQUITABLE BANK · RMG mortgages
TD Canada Trust · RFA BANK OF CANADA · FIRST NATIONAL FINANCIAL LP · HOME TRUST · MCAP

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa
லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930
5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895
3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1415 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 19, 2023

# ஜனாதிபதித் தேர்தலுக்காக தமிழ் மக்களை நோக்கி 'தீர்வு வலை' வீசும் ரணில்விக்ரமசிங்க

## (வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்)



ரணிலின் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே பேச்சுவார்த்தை.

ரணிலின் தேர்தல் வலையில் தமிழ் தலைமைகள் சிக்கலாம்! தமிழ் மக்கள் சிக்குவார்களா?

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலை நோக்கி தனக்கு ஏற்றாற் போல் நாட்டைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றார். அதற்கான பல்வேறு வியூகங்களை தமிழ் மக்கள் மீதும் தென்னிலங்கை மீதும் பிரயோகித்து வருகின்றார்.அதாவது தனது தேர்தல் வெற்றிகளுக்காக நாட்டின் சகல தரப்பினருக்கு முன்னால் கரட் கட்டி தொங்கவிடுகின்றார்.

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்ள நேரடியாகச் சென்ற கனடா உதயனின் உலகச் செய்தியாளர் சிவா பரமேஸ்வரன்



நேற்று 18ம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொள்ள முல்லைத்தீவிற்குச் சென்ற கனடா உதயனின் உலகச் செய்தியாளர் சிவா பரமேஸ்வரன் அவர்கள் அங்கிருந்து வழங்கிய காணொளி எமது இணையத்தளத்தில் காணப்படுகின்றது. அவர் நாளை யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ள விமல் சொக்கநாதன் அவர்களின் நூல் வெளியீட்டு விழாவிலும் சிறப்புரையாற்றவுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# "ஆரபி படைப்பகம்" அன்னையர் தினத்தன்று நடத்திய "கருவறைக் கோவில்" கருணையும் இசையும் கலந்த பல்சுவை விழா









தொழிலதிபர் ரஜீவ் சுப்பிரமணியம் அவர்களைத் தலைவராகக் கொண்ட கனடாவின் "ஆரபி படைப்பகம்" கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு சமூக நிகழ்வுகளில் தனது முகத்தைக் காட்டியும் நிகழ்வுகள் வெற்றிபெற தனது ஆதரவையும் வழங்கி நிற்கின்றது.

அத்துடன் தற்போது சென்னையில் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில் வினோத் ராஜேந்திரன் அவர்களின் இயக்கத்தில் ' FINDER " என்னும் தமிழ்த் திரைப்படத்தை தயாரித்து வருகின்றார் தொழிலதிபர் ரஜீவ் சுப்பிரமணியம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினத்தன்று ஆர்ப்பரிக்கும் வகையில் நடத்திய" ஆரபி படைப்பகம் நடத்திய கருவறைக் கோவில் என்னும் கருணையும் இசையும் கலந்த பல்சுவை விழா வெற்றிகரமாக நடைபெற்றது. தமிழ்வண் தொலைக்காட்சி பிரசாந்த் மற்றும் பைரவி குழுமத்தைச் சேர்ந்த சாந்தி ஆகியோர் விழாவைத் தொகுத்து வழங்கினார்கள்.

அன்றைய தினம் அங்கு கலந்து கொண்ட அன்னையர்கள் அனைவரையும் மலர்க் கொத்து வழங்கி வரவேற்றதோடு அவர்கள் அனைவருக்கும் புதிய சேலைகள் வழங்கியும் கௌரவித்தனர் ஆரபி படைப்பகத்தினர்.

பல்வேறு கௌரவிப்பு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து "ஆரோசை" இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி ஆரம்பமானது.இசையமைப்பாளர் சுதர்சன் தலைமையில் இசைக்குழுவினர் தங்கள் அட்டகாசமான இசை நிகழ்ச்சியை நகரத்திச் சென்றனர். தொடர்ந்து நிகழ்ச்சியை வெற்றிகரமான நடத்த ஆதரவு வழங்கிய அனைத்து வர்த்தகப் பிரமுகர்களும் கௌரவிக்கப்பெற்றனர். அத்துடன் ஊடக நண்பர்கள் பலரும் மேடைக்கு அழைக்கப்பெற்று பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பெற்றனர்.

---செய்தியும் படங்களும் : சத்தியன்

# திருவள்ளுவரின் சிந்தனைகளுக்கு மாறாக. திருக்குறளை தத்தமது மதநம்பிக்கைகளுக்கு ஆதரவான ஒன்றாகக் காட்டிக்கொள்வதில் பல்வேறு மதங்களைச் சார்ந்தோரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். — *கலாநிதி பால சிவகடாட்சம் தெரிவிப்பு*



தெய்வப் புலவர் திருவள்ளுவரின் சிந்தனைகளுக்கும் எண்ணங்களுக்கும் மாறாக. திருக்குறள் என்னும் நீதி நூலை ஆவரைத் தத்தமது மதநம்பிக்கைகளுக்கு ஆதரவான ஒருவராகக் காட்டிக்கொள்வதில் பல்வேறு மதங்களைச் சார்ந்தோரும் இன்று ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்துவிடின்

நீ மொட்டை அடிக்கவும் வேண்டாம் தாடி வளர்க்கவும் வேண்டாம். நல்லவனாக வாழ்ந்தாலே போதும் என்று கூறிய வள்ளுவருக்கு நீண்டதாடியும் சடைமுடியும் வைத்து அலங்கரித்தது தன் நில்லாது காவி உடையும் திருநீற்றுக் குறிகளும் சூட்டி அழகுபார்க்க ஆசைப்படுகிறார்கள்.

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H.Selvanayagam
Broker